# ஜீவநதி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

251

ஆளுமைச் சிறப்பிதழ்

தை 05.01.2025

150/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

பருவ வெளியீட்டுப்பகுதி
பொதுசனநூலகம்
யாழ்ப்பாணம்



அலைமகன்
ரஞ்ஜனி சுப்பிரமணியம்
இ.சு.முரளிதரன்
புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்
கந்தர்மடம் அ.அஜந்தன்
சிவகுருநாதன் கேசவன்
ஈழக்கவி
சு.குணேஸ்வரன்
புலோலியூர் வேல்.நந்தகுமார்
சௌந்தரி கணேசன்
குமாரவேலு கணேசன்
செல்லையா சுப்ரமணியம்
ஆசி. கந்தராஜா
பரணீ

# ஆசி.கந்தராஜா சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2025.01.05 - தை - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

நுட்பமான உணர்வுகளை வரையும்
ஆசி கந்தராஜாவின் "உயரப்பறக்கும் காகங்கள்
ஈழக்கவி............................................ 03

புனைவின் நயாதீனத்தை தொற்ற வைக்கும்
அறிவியற் கட்டுரைகள்
இ.சு.முரளிதரன்.................................... 10

மானிட விழுமியம் போற்றும் "பாவனை பேசலன்றி"
கலாநிதி சு.குணேஸ்வரன்........................ 12

புனைகதை வெளியில் புதிய எல்லைகளைத்தொடும்
பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் பணச்சடங்கு
புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்........... 16

பேராசிரியர் ஆசி கந்தராஜாவின்
அறிவியல் பேசும் "செல்லபாக்கியம் மாமியின்
முட்டிக் கத்தரிக்காய்"
கந்தர்மடம் அ.அஜந்தன்........................ 19

ஆசி கந்தராஜாவின் "தமிழ் முழங்கும் வேளையிலே"
முனைவர் குமாரவேலு கணேசன். ........ 26

கனாக்கண்ட கல்லூரிக் காலங்கள்
செல்லையா சுப்ரமணியம்........................ 29

ஆசி கந்தராஜா அவர்களின் ஊடகப்பணி
சௌந்தரி கணேசன்................................ 37

கறுத்தக் கொழும்பான் சுவை நிறை பஞ்சாமிர்தம்
சிவகுருநாதன் கேசவன்......................... 39

"அகதியின் பேர்ளின் வாசல்"
ஈழத்தமிழ்பண்பாட்டு உருமாற்றத்தின் குறுக்கு
வெட்டு முகம் ஆசி கந்தராஜாவின் சமீபத்திய
நாவலை முன்வைத்து
அலைமகன்........................................... 45

கலைமுகங்கள் கூறும்ஆசி கந்தராஜாவின்
"கள்ளக்கணக்கு" சிறுகதைத்தொகுப்பு
ரசனைக் குறிப்பு
ரஞ்ஜனி சுப்ரமணியம்............................. 47

புலம்பெயர் தமிழ் வேடதாரிகளின் போலி
முகத்திரைகழள உண்மையும் உளிமையுமாக காட்டும்
கதைத்தொகை ஆசி கந்தராஜாவின் "கீதையடி
நீ எனக்கு" தொகுதியை முன்வைத்து...
புலோலியூர் வேல்.நந்தகுமார்....................51



வரலாற்றுப் புனைவு
ஆசி.கந்தராஜா - 22



நேர்காணல் ஆசி.கந்தராஜா -31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 தை இதழ் - 251**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசிர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி
## (கலை இலக்கிய மாத சஞ்சிகை)


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## பல்துறை ஆற்றல்மிகு பேராசிரியர் ஆசி கந்தராஜா

ஈழத்து இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் ஆசி கந்தராஜா அவர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் கைதடியில் பிரபல ஆசிரியர் சின்னத்தம்பி அவர்களுக்கும் முத்துப்பிள்ளை அவர்களுக்கும் மகனாகப் பிறந்து புலம் பெயர்ந்து தற்போது அவுஸ்திரேலியா நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், அறிவியல் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் கைதேர்ந்தவராக ஆசி கந்தராஜா விளங்குகின்றார். பாடசாலைக்காலம் முதலே இலக்கிய ஆர்வமுள்ளவராக விளங்கிய இவர் பாடசாலைக்காலத்தில் பல நாடகங்களிலும் பங்கு பற்றியிருக்கின்றார். ஜேர்மன் ஜனநாயக குடியரசில் கல்வி கற்பதற்கு புலமைப்பரிசில் பெற்று இளமானி, முதுமானி, கலாநிதிப் பட்டங்களை பெற்றுக்கொண்டு 1987 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து சென்றார். பல்வேறு நாட்டு பல்லைக்கழகங்களில் தன் வாண்மைத்துவம் காரணமாக விரிவுரைகளை ஆற்றி வருகின்ற பேராசிரியராக திகழ்ந்து வருகின்றார். 1992 ஆம் ஆண்டில் சிட்னியின் முதலாவது பல்லின பல்கலாசார சமூக வானொலியாகிய தமிழ் முழக்கம் வானொலியின் ஆரம்ப கர்த்தாவாக விளங்கி இன்று வரை தனது சேவையை வழங்கி வருகின்றார் இதுவரையில் 14 நூல்களை வெளியிட்டுள்ள இவர் பல விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார். பல்வேறு நாடுகளுக்கு தொழில் நிமிர்த்தம் புலம்பெயர்ந்து சென்ற இவர் அங்குள்ள மக்களது வாழ்வியலை தன் படைப்புகள் ஊடாக தமிழ் சமுதாயத்திற்கு அறியச் செய்கின்ற அருமையான படைப்புகளை நூல்களாகத் தந்துள்ளார். இவரது அறிவியல் ரீதியான படைப்புகள் இவரது ஆளுமையின் சிறப்பை மேலும் உலகறியச் செய்கின்றது. மொழித்தெளிவு, படைப்பில் அறிவியலை இணைத்தல், நகைச்சுவை யுணர்வு, வாசகனுக்கு சலிப்பை ஏற்படுத்தாத எழுத்து நடை என்பவற்றால் இவரது படைப்புகள் வாசகர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் படுவதைக் காண்கின்றோம். கலாநிதி த. கலாமணி அவர்களின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டு அல்வாய் கலைஅகத்தில் நடைபெற்று வருகின்ற "அவை" கலை இலக்கிய வட்டத்தின் முதல் நிகழ்வில் வருகையாளராக கலந்து சிறப்பித்தவர் ஆசி கந்தராஜா அவர்கள். 75 ஆவது அகவையில் பயணிக்கும் ஆசி கந்தராஜா அவர்களது இலக்கியச் சேவையைக் கௌரவித்து இவ்விதழை வெளியிட்டு ஜீவநதி மகிழ்கின்றது.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியயன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பமான உணர்வுகளை வரையும் ஆசி. கந்தராஜாவின் உயரப் பறக்கும் காகங்கள்



"என்னை நேர்காணல் செய்தபோது பத்திரிகையாளர் ஒரு கேள்வி கேட்டார். "உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?" நான் ஒரு நிமிடம்கூட யோசிக்காமல் "கார்ல் இயக்னெம்மா" என்று பதில் கூறினேன். கேட்டவருக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படி ஓர் எழுத்தாளரை அவர் கேள்விப்பட்டதே கிடையாது. இவர் ஓர் அமெரிக்க விஞ்ஞானி, இயந்திரவியல் பேராசிரியர். இயந்திரவியல் ஆராய்ச்சிகளில் மும்முரமாக ஈடுபடும் அதே நேரம் சிறுகதைகளும் எழுதுவார். அவருடைய சிறுகதைகள் உயரிய விருதுகள் பெற்றுள்ளன. அவர் என்னை ஈர்த்ததற்கு காரணம் அவருடைய கதைகளில் விஞ்ஞானமும், கணிதமும், இயற்பியலும் ஏதோவிதத்தில் பாத்திரமாக கலந்திருக்கும். சாதாரண வாசகருக்கு புரியும்படி விஞ்ஞான தத்துவங்கள் கிடைக்கும். கதையை படித்த சிலநாட்களில் மறந்து போனால்கூட அதிலிருந்து கிடைத்த விஞ்ஞான அறிவு என்னுடனேயே தங்கிவிடும். பல ஆயிரம் மைல்கள் பிரயாணம் செய்து இவரை நான் சந்தித்திருக்கிறேன். தீவிரமான ஆராய்ச்சி களுக்கு நடுவே இரண்டு பாதி சிறுகதைகளும் அவர் மேசைமேல் கிடந்தன. ஆராய்ச்சிகளுக்கு இடையில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் சிறுகதைகளை எழுதுகிறார்.

ஒரு துறையில் பிரபலமானவர்கள் சிறுகதை எழுதுவது குறைவு. அதிலும் தமிழில் விஞ்ஞானிகள் யாராவது சிறுகதை எழுதுகிறார் களோ என்றால் அந்த விவரம் என்னிடம் இல்லை. எனக்குத் தெரிந்து சிறுகதைகள் தொடர்ந்து எழுதும் தமிழ் விஞ்ஞானி ஆசி. கந்தராஜாதான். இவர் உயர் கல்வி கற்க இலங்கையிலிருந்து ஜேர்மனிக்கு சென்று அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து அங்கே குடியேறியவர். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பூங்கனியியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப பேராசிரியராக சிட்னி நகரில், மேற்கு சிட்னிப் பல்கலைக்கழகத்தில் பணி புரிகிறார். அறிவியல் ஆலோசகராக பலநாடுகளுக்கு பயணித்து அவர்கள் ஆராய்ச்சிகளுக்கு உதவி புரிந்திருக்கிறார். உயர் ஆராய்ச்சி களில் கிடைக்கக்கூடிய விஞ்ஞான அறிவும் பலநாட்டு மக்களின் வெவ்வேறு அனுபவங்களும் இவரின் கதைகளில் விரவிக் கிடப்பதைக் காணலாம். கார்ல் இயக்னெம்மா தான் எழுதும் போது விஞ்ஞான ஆராய்ச்சிக்கு தயார் செய்வதுபோல சிறு கதைக்கும் ஆயத்தம் செய்வதாக சொல்கிறார். பல்வேறு விதமாக ஓர் ஆராய்ச்சியை மேலெடுப்பது போல சிறுகதை களையும் அவர் நூறுவிதமாக ஆராய்கிறார். விடாமுயற்சியும், கற்பனையும், கடும் உழைப்பும் இரண்டுக்குமே தேவைப் படுகிறது. அதே மாதிரியான உத்தியைத்தான் ஆசி. கந்தராஜாவும் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. ஆனால் ஒரு கூடிய லாபம். விஞ்ஞான அறிவுடன் பலநாட்டு மனிதர்களின் அனுபவங்களும் கதைகளை அலங்கரிக்கின்றன" (கள்ளக் கணக்கு: முன்னுரை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த உலகெங்கும் பயணித்து தான் கண்டடைந்த தரிசனங்களை புனைவாக்கிய அ.முத்து லிங்கம், தன்னைப்போன்று உலகம் சுற்றி, அந்த அனுபவங்களை தமிழ் புனைவுக்குள் கொண்டு வந்த ஆசி. கந்தராஜாவைப்பற்றி இவ்வாறு எழுதியுள்ளார். "அ. முத்துலிங்கம் போல் ஆசி கந்தராஜாவும் பல நாடுகள் சுற்றியவர். அந்த அநுபவ வளத்தைத் தமிழ்ப் புனைகதைக்குள் கொண்டுவந்தவர்" என்று பேராசிரியர் எம்.ஏ.நுஃமானும் "மிகப் பரந்த ஒரு புறவுலகச் சித்தரிப்பின் ஊடாக கதை சொல்லியாகத் திகழும் அ. முத்துலிங்கம் ஈழத்தமிழ் வாசகன் இதுவரை சந்தித்திராத பல களங்களை தனது கதைகளில் முன் வைக்கின்றார். அதன் தொடர்ச்சியாக பல களங்களை ஆசி. கந்தராஜாவின் கதைகளில் தரிசிக்க முடிகின்றது" என்று கலாநிதி சு. குணேஸ்வரனும் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாண "கைதடி"யை பிறப்பிடமாகக் கொண்ட ஆசி. கந்தராஜா, ஜெர்மனியில் முதுகலை, கலாநிதி பட்டங்களைப் பெற்றவர். ஜெர்மன், ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தாவரவியல் விவசாயத்துறையில் கல்விகற்றிருக்கிறார். அவர் பூங்கனியியல், உயிரியல் தொழில் நுட்பத்துறைப் பேராசிரியர் பெரிய விஞ்ஞானி. பிரபஞ்சன் சொல்வது போல, உலகப் பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் ஆசி. கந்தராஜாவை தங்கத் தட்டில் வைத்து ஏந்துகின்றன. மூன்று தசாப்தங்களுக்கு மேலாய் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். தொழில் நிமித்தம் பல உலக நாடுகளுக்கு பயணித்துப் பெற்ற அனுபவங்களை தன்னுடைய புனைவுகளுக்கு பகைப்புலமாக்கியுள்ளார். ஆசி. கந்தராஜா ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்த எழுத்தாளர் என்றபோதிலும், அவரது படைப்புக்கள் பன்முக கலாச்சாரங்களில் மூழ்கித் திளைத்து உலகளாவிய நோக்கில் விரிந்திருக்கிறது.

சிறுகதை (பாவனை பேசலன்றி -2000, உயரப் பறக்கும் காகங்கள் -2003, கள்ளக் கணக்கு -2018), குறுநாவல் (கீதையடி நீ எனக்கு-2014), புனைவுக் கட்டுரை (கறுத்தக் கொழும்பான் -2014 , செல்லப் பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய் -2017) என்று தன்னுடைய படைபாக்கங்களை வெளிக்கொணர் கிறார். "புனைவுக் கட்டுரை என்ற தொடர் கந்தராஜா மூலமே பிரபலம் பெற்றிருக்கின்றது" எனக்குறிப்பிடும் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் இது பற்றி விரிவாக விளக்கியுள்ளதுடன், புனைக்கதைகளுக்கும் புனைக் கட்டுரைகளுக்கும் இடையிலான மயக்கத்தினையும் தெளிவுபடுத்தியுள்ளார். "ஆங்கிலத்தில் புனைவுக் கட்டுரையை இமஜினேற்றிவ் எஸ்ஸே (Imaginative Essay) என்பார்கள். நமது பாடசாலைக் கல்வியில் இதனைக் கற்பனைக் கட்டுரை என்போம். ஏதாவது ஒரு பொருள் பற்றி புனைந்து எழுதுவது இவ்வகைப்படும். இதில் உண்மையும் கற்பனையும் கலந்து இருக்கும். ஒரு பேனையின் கதை, நான் ஜனாதிபதியானால், எனது சந்திரமண்டலப் பயணம் போன்ற தலைப்புகளில் நமது பள்ளிப்பருவத்தில் நாம் கட்டுரைகள் எழுதியிருப்போம். நவீன தமிழ் இலக்கியத்தின் தொடக்க காலத்திலிருந்தே புனைவுக் கட்டுரைகள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. பாரதியின் தராசு, சிட்டுக்குருவி போன்றவற்றை உதாரணமாகச் சொல்லாம். புதுமைப்பித்தனின் திருக்குறள் குமரேசபிள்ளை பிறிதொரு உதாரணம். ஆசி கந்தராஜாவின் புனைவுக் கட்டுரைகள் நாம் பாடசாலைக் காலத்தில் எழுதிய கட்டுரைகள் போன்றவை அல்ல. பாரதி, புதுமைப்பித்தன் கட்டுரைகள் போன்றவையும் அல்ல. இவை உண்மையில் அறிவியல் கட்டுரைகள். அறிவியலை துறை சார்ந்த நிபுணர்களுக்காக அன்றி, பொதுமக்களுக்காக எளிமைப்படுத்தி சுவாரஸ்யமாக வாசிப்பதற்காகவும் அதேவேளை அறிவியல் உண்மை களைப் புரிந்துகொள் வதற்காகவும் எழுதப்பட்ட கட்டுரைகள். ஜனரஞ்சக அறிவியலையும் புனைவுக் கட்டுரை வடிவத்தையும் ஒன்றிணைத்தமை ஆசி கந்தராஜாவின் எழுத்தின் தனித்தன்மை எனல் வேண்டும். குறிப்பாக விவசாயத் துறையில் மரபணு உயிரியல் தொழில்நுட்பச் செயற்பாடுகளை பொது மக்கள் விளங்கிப் பயனடையும் வகையில் அன்றாட வாழ்க்கை அனுபவத்துடன் இணைத்து சொந்த அனுபவமாகவும் புனைகதை உத்தியைப் பயன்படுத்தியும் அவர் விளக்குகிறார். அவ்வகையில் ஒரு விஞ்ஞானியின் அறிவாற்றலும், ஒரு படைப்பாளியின் புனைவாற்றலும் ஒன்றிணைந்து உருவாக்கிய இக்கட்டுரைகள் தமிழில் ஒரு புதுவருகை எனலாம்.

இவரது புனைவுக் கட்டுரைகளுக்கும் புனைகதைகளுக்கும் இடையே உள்ள எல்லைக்கோடு மெல்லியதுதான். இவரது புனைவுக் கட்டுரைகள் சில புனைகதைகள் போலவும், புனைகதைகள் சில புனைவுக் கட்டுரைகள் போலவும் மயக்கம் தருவதற்கு இந்த இரண்டுக்கும் இடையிலான இந்த மங்கலான இடைவெளியே காரணம் எனலாம். சமீபத்தில் வெளி வந்த காலம் 54 ஆவது இதழில் (ஜனவரி -2020) பிரசுரமாகியுள்ள "ஆசி கந்தராஜாவின் படைப்புலகம்" என்ற கட்டுரை இவ்விரு வகையான எழுத்துகளையும் ஒன்றாக நோக்குவது இந்த மயக்கம் காரணமாகவே எனலாம். ஆனால், கந்தராஜாவின் இருவகை எழுத்துகளுக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாடு இருப்பதைத் தேர்ந்த வாசகர்கள் தவறவிட முடியாது. அவரது புனைவுக் கட்டுரைகளில் அனுபவச் சித்திரிப்புகள் ஊடாக அறிவியல் விளக்கம் முனைப்பாக இருக்கும், அதவேளை, அவரது புனைகதைகளில் அனுபவச் சித்திரிப்பின் ஊடாக மனித உறவுச் சிக்கல்களும் மனித உணர்வு நெருக்கடிகளும் முனைப்பாக வெளிப்படும். ஆயினும் இருவகை எழுத்துகளிலும் சொல்லும் முறையும் மொழிநடையும் பெரும்பாலும் ஒன்றாகவே இருக்கும். இது அவரின் எழுத்தின் பொதுப்பண்பு எனலாம்" (பார்க்க, "பணச்சடங்கு" முன்னுரை).

ஆசி. கந்தராஜாவின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு "உயரப் பறக்கும் காகங்கள்". 144 பக்கங்கள் கொண்ட இந்நூலில் பத்து சிறுகதைகள் உள்ளடங்கி யுள்ளன. இது 2003 மார்கழியில் பதிப்பிக்கப்பட்டு 2004 வெளியிடப்பட்டது. ஈழம், ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், வங்காளதேசம் ஆகிய புலங்களை மையப் படுத்திச் சுழலும் புனைவுகளாக இவை அமைந்துள்ளன. இப்பிரதிகளில் ஒன்று தாய் மண்ணாகிய ஈழம் பற்றியது. நான்கு ஆஸ்திரேயாவையும், மூன்று ஆப்பிரிக்காவை யும், ஒன்று ஜப்பானையும், ஒன்று பங்களாதேஷையும் நிலைக்களனாகக் கொண்டவை. புனைவுக் களம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சார நடத்தைகள், கதையின் போக்கு, உரிப் பொருள், உத்தி, மொழி, கதைசொல்லல் என எல்லா வற்றிலும் ஒரு புதுமையை தரிசிக்க முடிகின்றது. பல் நாட்டு கலாச்சார சாரத்தினூடாக பெற்ற நுண்ணனுபவத் தினை புனைவில் நுட்பமாக வெளிக்கொணர்ந்துள்ளார். "படைப்புக்கள் பலவிதமான பார்வையை அளிப்பன. செய்மதிப் பார்வை, தொலை நோக்கிப்பார்வை, மற்றும் நுணுக்குக் காட்டிப்பார்வை போன்றனவே அவை. இதிலே ஆசி. கந்தராஜாவின் படைப்புக்கள் எனது மதிப்பீட்டில் நுணுக்குக்காட்டிப் பார்வை கொண்டவை. அதாவது கலாச்சாரங்களின் Nuances ஐ வெளிப்படுத்து பவை. (Nuance இதற்கு சரியான தமிழ் மொழிபெயர்ப்பு என்னவென்று தெரியவில்லை. இப்போதைக்கு நுட்பம் என்று வைத்துக்கொள்வோம்). அவரது படைப்புக்கள் முழுவதும் இந்த நுட்பமான விவரணம் கொட்டிக் கிடக்கிறது. ஒரு மனிதனுக்கு புலம்பெயர் வாழ்க்கை துயரமானதுதான் என்றாலும் அது அளிக்கும் அனுபவமும் விரிந்த பார்வையும் மிக அதிகம். மனதை திறந்து வைத்திருந்தால் அவன் அடைய முடிகின்ற இடம் பரந்து பட்டது. மிக அதிகமான ஈழத் தமிழர்கள் புலம்பெயர் வாழ்க்கைக்கு விதிக்கப்பட்டிருந்தாலும் மிக சிலர் மட்டுமே அவ் வாய்ப்புக்களை பயன்படுத்தி உலகுக்கு ஞானத்தை வழங்குகிறார்கள். எல்லோரும் மூங்கிலை வெட்டி புல்லாங்குழல் செய்ய முயன்றாலும் மிகச் சிலர் மட்டுமே அதை சாதிக்கிறார்கள். ஏனையோர் வெறும் விறகு வெட்டிகளாகவே காலத்தை முடித்து விடுகின்றனர். ஆசி. கந்தராஜா பல்வேறு நாடுகளின் மூங்கில்களில் இருந்து எமக்கு விதமான இசைவடிவங் களை வழங்குகிறார்" (அலைமகன் காலம் மார்ச் 2020)

"உயரப்பறக்கும் காகங்கள்" தொகுப்பின் முதல் கதை "தவக்கோலங்கள்". கைதடியைச்சேர்ந்த கதைச் சொல்லி புலம்பெயர்ந்து பல வருடங்கள் கழிந்து தன்னுடைய தாய்நிலத்துக்கு வந்து புலம்பெயராத தனது பால்ய காலத்து நினைவுகளோடு சாகுவதமாகி நிற்பதுதான் இக்கதை. கதையின் தொடக்கமே இதனை உணர்வப்பூர்வமாய் உணர்த்துகின்றது. "கடலில் இருந்து வீசிய உப்புக்காற்று உடலுக்கு இதமாகவும் மனசுக்கு சுகமாகவும் இருந்தது. கடற்காற்றை அளைந்த படி வண்டி பாலத்தின்மீது சென்றது. ஆயத்தடியில் நிறுத்தும்படி குரல் கொடுத்தேன். என்னுடைய பத்தொன்பது வயது மகனும் கூடவே இறங்கிக் கொண்டான் மகளும் மனைவியும் வண்டியிலே வீடு நோக்கிய பயணத்தை தொடர்ந்தார்கள். கைதடியையும் கோப்பாயையும் இணைக்கும் பாலத்தின் முகதடி அந்தலைக்குப் பெயர் "ஆயம்". கடலின் கை தடிக் கரையோரமாக கோடைகாலத்தில் பெருமளவு உப்பு விளைந்திருக்கும். இந்த உப்பினை அறுவடை செய் தோரிடம் அந்தக் காலத்தில் வரி அறவிடப்பட்டதாம். அந்தக்காலம் என்பது ஆங்கிலேயர் ஆண்டகாலம், உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு விதிக்கப் படும் தீர்வை "ஆயத் தீர்வை" என அழைக்கப்பட்டதாக வும், அது வசூலிக்கப்பட்ட இடம் ஆயத்தடி என வழங்கப்படலாயிற்று என்றும் என் ஐயா ஆயம் பற்றிக் கூறியவை நினைவுக்கு வருகின்றன. அவர் கைதடியிலே பிறந்து வளர்ந்து அங்கேயே தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். பொருள் சேர்க்காவிட்டாலும் "நல்ல மனிதர்" என்ற பெயரை பலவட்டங்களிலும் சம்பாதித் திருந்தார். இப்படிப்பட்ட வாத்தியாரின் பிள்ளை தப்புத் தண்டா செய்யக் கூடாது என்ற கிராமத்தின் பொதுவான விதி பல தடவைகளில் என்னை சங்கடத்தில் ஆழ்த்தியதுண்டு. ஆயத்தடியில் இறங்கியதும் நினைவு ஒழுங்கைகளிலே, என் மனசு அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியை நோக்கிப் பயணித்தது. ஆயத்தை சுற்றிய வீடுகள் பலவும் இப்போது சிதிலமடைந்துவிட்டன. எஞ்சி யுள்ள வீடுகள் சில, மனித சஞ்சாரம் இழந்தனவாகத் தோன்றின. அங்கிருந்த ஆரம்ப பாடசாலையும் தரை மட்டமாயிருந்தது. திட்டியாய் தெரிந்த மண்மேட்டையும் அருகிலுள்ள கல்லுக்குவியலையும் வைத்து தான் பாடசாலை இருந்த இடத்தினை என்னால் அடையாளப் படுத்த முடிந்தது. அந்த ஆரம்ப பாடசாலை மழலை களின் இரைச்சலுடன் இருந்த அந்தக்காலம்...."

இவ்வாறு அந்தக்கால நினைவுப் பார்வை வழி உள்ளத்தில் பதிகின்ற லாவகத்துடன் கதை விரிகின்றது. உண்மையின் கலப்பாக இளமைக்கால சங்கதிகள் படர்ந்து செல்கையில் மனசுக்குள் படிந்து நிற்கிறார் பூமணி ரீச்சர். பிரதியின் மையப்பாத்திரமே பூமணி ரீச்சர். "பாலத்தில் வீசும் உப்புக்காத்துக்கெதிராக சைக்கிள் மிதித்து களைத்து வரும் எமக்கு சீமெந்து வாங்கில் தனித்திருக்கும் பூமணி ரீச்சரை கண்டால் உற்சாகம் பிறந்துவிடும். பூமணி ரீச்சர் வடிவு என்றுதான் சொல்ல வேணும். அதிகமான பூச்சுமினுக்குகள் நாடாதவர். அமைதியானவர். ஹநல்லாப் படிப்பிக்கிற ரீச்சர்" என்று ஊரில் எல்லோரும் சொல்வார்கள். இருப்பினும் அவரது முகத்தில் எப்போதும் ஒருவகைச் சோகம் எட்டிப் பார்க்கும். பாடசாலையால் நாங்கள் திரும்பி வரும்போது பூமணி ரீச்சர் அந்த வாங்கிலே பஸ்ஸுக்கு காத்திருப்பது எமக்கு தூரத்திலேயே தெரிந்துவிடும். குனிந்த தலை நிமிராமல் புத்தகக் கட்டும் கையுமாக தனித்து அவர் சீமெந்து வாங்கில் இருப்பதை பார்க்கும்போது "அவரை கிண்டல் செய்தால் என்ன? என்ற எண்ணம் தோன்றும்...."

பூமணி ரீச்சர் தன்னுடைய இருத்தலில் சில சுகந்தங்களை இழந்திருந்தாலும், திருமணம் என்ற இணைவு இல்லாமல் போயிந்தாலும், பணிவோய்வின் பின்னர் அநாதரவாகிவிட்ட குழந்தைகளுக்காக ரீச்சர் நடாத்தும் ஆச்சிரமம் அக்குழந்தைகளின் நல்வாழ்விற்கு அடித்தளமாக அமைகின்றது. மேலும் தோற்றுப் போய்விட்டதாக அல்லலாடும் பெண்களுக்கு ஒரு படிப்பினையை ஊட்டுவதாகவும் ரீச்சரின் இச்செயற்பாடு அமைந்துள்ளது. கருணையின் வடிவமாக பூமணி ரீச்சர் எம் உணர்வுக்குள் பரிமளித்து நிற்கிறார். கதை சொல்லியின் சித்திரிப்புத் திறனே இதற்கு காரணமாகும்.

இத்தொகுப்பின் மூன்று பிரதிகள் ஆபிரிக்க புலத்தையும் கலாச்சாரத்தினையும் புனைவாக்கி யுள்ளன. அவை துர்க்கா தாண்டவம், வெள்ளிக்கிழமை விரதம், பாலன் பிறக்கிறான் என்பனவாகும். "சல சலத்து ஓடிக்கொண்டிருந்தது நைல்நதி" என்று "துர்க்கா தாண்டவம்" என்ற புனைவின் தொடக்க வரியை வாசிக்கும் போது,

கால்களைப் பின்னிப் பின்னி நடக்கும்
பெண்ணொருத்தி போல்
நதியே நடந்து வருகின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்பான நதிக்கு" என்ற என் கவிதையின் தொடக்க பகுதியே மனசுக்குள் மின்னியது. ஆனால் நதி சொல்லுக்குள் பொதிந்துள்ள இதமும் சிலுசிலிர்ப்பும் கதையை வாசித்துமுடிக்கையில் தகித்துப்போகின்றது. நதியில் குளித்துக்கொண்டிருந்த வெசொங்காவுக்கு குளிப்பு திருப்தி தருவதற்கு பதிலாக, அவனுக்கு அவன் மீதே ஒருவகை வெறுப்பு. அந்த வெறுப்பு மற்றவர்கள் மீது படர்வதாகவும் தோன்றுகின்றது. அந்த வெறுப்புக் கான மூலங்களை விவரணப்படுத்துவதாகவே இப்பிரதி அமைந் துள்ளது.

ஆபிரிக்காவின் ஒரு சமுகத்தில் "சீதனம்" என்ற "அவலம்" ஆண்கள் சார்ந்ததாக இருக்கின்றது. ஆபிரிக்க கலாசாரம் தாயின் தந்தையான பாட்டனே, தந்தையாக இருக்கும் கலாச்சார சீர்கேட்டுக்கு உறு திணையாக உள்ளது. இதுவே இக்கதைக்கு பொருண் மையாகியுள்ளது. வெசொங்காவின் தந்தையும் தாய்வழிப் பாட்டனும் ஒருவரே. அதனால் வெசொங் கோவின் தாய் எலிசபெத்தின் வாழ்வும், அதனால் அவள் மனதில் தோன்றியிருக்கும் உளவியல் தாக்கம் பற்றிய சிந்தனையும் வாசிக்கும்போது மனதில் ஒரு அதிர்வினை யும் அருவருப்பையும் தோற்றுவிக்கிறது.

வெசொங்காவின் தந்தையான கிழவன் (பிரான்சிஸ்) பலபெண்களை மனைவிகளாக்கிக் கொண்டுள்ளான். கிழவனின் அடங்காப்பிடாரி ஆசை அடங்காமையினால், வெசொங்காவின் காதலியையும் மனைவயாக்கும் பேராசை கிழவனுக்கு! அவன் பணக் காரனாக இருப்பது அவனது பலம். படிப்போடு பகுதி நேரவேலை செய்தாலும் வெசொங்காவால் தந்தை அளவிற்கு பணம் சேர்க்கமுடியவில்லை. சீதனம் ஆண்கள் கொடுக்க வேண்டுமென்பதால், வெசொங் காவைவிட பணம் அதிகமாகக் கொடுத்து, வெசொங் காவின் காதலியை மசாய் இனத்தைச் சேர்ந்த அவளது குடிகாரத் தந்தையிடம் வாங்க முற்படுகின்றான் கிழவன். இது பற்றி வெசொங்காவின் காதலி மேரி கண்களிலே நீரை சுமந்தவாறு இப்படி உரைக்கின்றாள்:

"உன் அப்பன் பிரான்சிஸ் கிழவன் இரண்டு நாள்களுக்கு முன் - எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறான். பத்தோடு பதினொன்றாக என்னையும் தன் மனைவி யாக்கிக் கொள்ள என் அப்பனிடம் சம்மதம் கேட்டிருக் கிறான். ஆடுகளுடன் புதிய வீடு ஒன்று கட்டித் தருவதாகவும் ஆசை காட்டியிருக்கிறான். இந்த உறவுக்கு ஆதரவு தருவதற்காக என் "மசாய்" இனத் தலைவனுக்கும் ஆடுகள் தருவதாக வாக்களித் துள்ளான்."

வெசொங்கா ஊரில் இல்லாத நான் பார்த்து இரகசியமாக மேரியின் அப்பனுடனும் மசாய் இனத்தலைவனுடனும் கலந்து பேசி பெண் எடுக்கும் நாள் குறித்து விட்டான். அவசர அவசரமாக காரியங்கள் நடந்தேறின. அவர்களது இனவழக்கப்படி பரிசம் போடு வதற்கு முன்னால் அன்றைய விருந்துக்கு வெட்டப்படும் ஆட்டைச் சுற்றி பெண்கள் திறந்த மார்புடன் நடனமாட வேண்டும். மணம் முடிக்கும் ஆணும்பெண்ணும் ஆட்டத்தில் இணையும்போது ஆடு வெட்டப்பட்டு ஆட்டின் குருதியினால் மணமக்களின் கைகள் நனைக்கப்படும். இச்சடங்கிலே உரிய விலை பெறப் பட்டபின்னர், பெண் மணமகனுக்கு தாரை வார்க்கப் பட்டு விட்டாள் என்பதற்கு அந்த நடனவிருந்திலே கலந்து கொண்ட விருந்தினர்கள் கட்சிகளாய் அமர்வர். முடியாமல் முடிகின்ற பிரதியின் முடிவு ஒரு சினிமாவின் இறுதி காட்சி போல திரையாகியிருக்கிறது:

"மேளச் சத்தங்களுக்கும் குரவைச் சத்தத்துக்கும் நடுவே வெள்ளாடு மிரள மிரள விழித்துக்கொண்டு நின்றது. நடனமாடும் பெண்களுடன் தன் மனைவிமார் அனைவரையும் கலந்து கொள்ளும்படி பிரான்சிஸ் பணித்திருந்தான், அவ்வாறு பெரும் எண்ணிக்கையில் மனைவியர் கலந்து கொள்வது தன் ஆண்மைக்குரிய அங்கீகாரம் என பிரான்சிஸ் கருதினான். எலிசபெத் பிரான்சிஸின் மகள் அவன் மனைவியும் கூட, நிர்ப்பந்தம் காரணமாகவே மனைவி ஸ்தானத்தில் அவளும் ஆட்டத்தில் இணைய வேண்டியதாயிற்று.

நேரம் நெருங்கியது. உக்கிரமான மேளம் முழங்க பாட்டுச் சத்தங்களும் ஆட்ட வேகமும் அதிகரித்தது. மேரி வலுக்கட்டாயமாக அவளது அப்பனால் வெள்ளாட்டின் அருகே இழுத்து வரப் பட்டாள். ஆட்டமாதர்களின் நடுவே வெசொங்காவின் தாய் எலிசபெத்தைக் கண்ட மேரி, திமிறி ஓடி அவனின் கால்களைக் கட்டிக்கொண்டாள். எலிசபெத்தால் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை தலை சுற்றியது ஒரு கணம் கண்ணை மூடித் திறத்தாள். ஆடும் அதன் தலை கொய்வதற்கான சுத்தியும் கண் முன்னே தெரிந்தன. வெறிகொண்டவள் போல பாய்ந்தோடி கத்தியை எடுத்தாள். பலம் முழுவதையும் கைளிலே செலுத்தி ஒரே வீச்சு. கிழவன் பிரான்ஸிஸின் தலை நிலத்தில் உருண்டது."

ஆபிரிக்காவின் மூடத்தனமான கலாச்சார எச்சங்கள் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் மிச்ச மிருக்கிறதே என்பது மனதை நெருடுகிறது. புனைவின் முடிவு சினிமா பாணியாக அமைந்திருக்கிறதே என்று எண்ணத்தோன்றிலும், கிழவன் கொல்லப்பட வேண்டியவன் என்ற உணர்வு மேலிடாமலில்லை. இதற்கு காரணம் கதைசொல்லியின் வெளிப்பாட்டு முறைமை ஆகும். புனைவின் அலைகள் மனசுக்குள் ஆர்ப்பரிக்க, இந்த கலாச்சார அடாவடித்தனத்தின் மீது கோபமும் வெறுப்பும் உண்டாகின்றது. சினம் இப்புனைவுக்கான உரிப்பொருளாகியுள்ளமையினால் தலைப்பும் பொருத்தமாகியுள்ளது.

புதுமைப்பித்தனின் "பொன்னகரம்" (மணிக் கொடி 06.05.1934) புனைவில் அம்மாளு தன் புருஷனுக்குப் பால் கஞ்சி வார்ப்பதற்காக சோரம் போவது போல, ஆசி. கந்தராஜாவின் "வெள்ளிக்கிழமை விரதம்" புனைவில் குளோரியா காதலனுக்கு மனைவியாவற்காக சோரம் போகிறாள். "மனத்தூய்மை யில் தான் கற்பு சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?" என்று "அகல்யை" (ஊழியன் 24.08.1934) சிறுகதையில் கௌதமர் மூலமாக கேள்வி எழுப்புகிறார் புதுமைப்பித்தன். "நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக் கொள்வதுதான் பொருந்தும்" என்று விசுவாமித்திரர் மூலமாக "சாப விமோசனம்" (கலைமகள் மே, 1943) சிறுகதையில் புதுமைப்பித்தன் கேள்வி எழுப்புகிறார். ஜெயகாந்தனின் "அக்கினிப் பிரவேசம்" சிறுகதையில் கல்லூரி மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்குலைக்கப்பட்டபோது, தாய் மகளிடம், "எல்லாம் மனசுதான்டி மனசு சுத்தமா இருக்கணும்..." என்கிறாள். "வெள்ளிக்கிழமை விரதம்" சிறுகதையில் குளோரியா விற்பது உடலைத்தான் அன்றி அவள் மனதை அல்ல என்பது காதலன் மொறிஸின் தெளிந்த பார்வையாக ஒளிர்கிறது. மொறிஸின் காதலி குளோரியா சொல்கிறாள்: "என்னுடைய காதல் நிறைவேறி திருமண பந்தத்தில் இணைவதற்காக உடலை விற்கிறேன். ஆனால் என்மனசை யாருக்கும் விற்றுவிடமாட்டேன்." காதலை இழப்பதைவிட இந்த நடைமுறை தேவை என்பது ஆபிரிக்க இளைய சமூகத்தில் முகிழ்த்திருக்கிறது என்பதையே இப்பிரதி முனைப்பாக வெளிப்படுத்த முனைந்துள்ளது. பெண்ணுறுப்பு ஆணுக்கு மட்டுமே உரித்துடையது என்பது போல, ஒரு காலத்தில் அல்குலை வெட்டி, வெட்டி பின் மூடி மூடித் தைத்துக் கொடூரமாய் கொடுமைப்படுத்திய அந்த இருண்ட கண்ட ஆபிரிக்க கலாசாரத்துக்குள் இப்படியொரு மாற்றம் நிகழ்ந்திருப்பது ஆச்சரியம்தான்!

பிறந்த மண்ணைவிட்டு புதிய வாழ்க்கை ஒன்று தேடும் நீண்ட பயணத்திலே, பேராசிரியர் வீரசிங்கம் ஆபிரிக்க பல்கலைக்கழகமொன்றில் சிறப்பு விரிவுரை நிகழ்த்தவென இருண்ட கண்டம் வந்திருக்கிறார். அவரின் விரிவுரைகள் சாரமுள்ளதாகவும் சுவராஸ்ய மானதாகவும் அமையும். அதற்காக அவர் கடுமையாக வும் உழைப்பார். ஆனால் வெள்ளிக்கிழமைகளில் அவருடைய வகுப்புகளுக்கு மாணவர்கள் வருவதில்லை. ஆபிரிக்காவில் மணப்பெண் கூலிகொடுத்து ஆண்கள் திருமணம் செய்யும் கலாசாரத்திலே காதலியை மனைவியாக்க இளைஞர்கள் இரவு விடுதிகளிலும் உணவு விடுதிகளிலும் ஆடிப்பாடி, உணவு பரிமாறி வேலை செய்கிறார்கள். தந்தை சீதனமாகக் கேட்கும் பெருந்தொகைப் பணத்தை காதலனால் தனியே சேர்க்க முடியாமையினால், இளம்பெண்கள் பணம்சேர்ப்பதற்காக இரவு விடுதிகளிலும் பார்களிலும் தன்னுடலை விற்கிறார்கள். இந்தப் பணச்சேர்ப்பு வேலைகளுக்க அவர்கள் தேர்ந்தெடுத்த நாளே வெள்ளிக்கிழமை. வீரசிங்கம் மாணவர்கள் வகுப்பறைக்கு வராமைகாகான காரணத்தைத் தேடிச்செல்கின்றார். அங்கு தன்னுடைய மாணவியான குளோரியா, செல்வந்த ஆபிரிக்கர்களை வளைத்துப்போட்டு பணம் சம்பாதிக்கும் விலைமாதுச் சாகசம் அவருக்கு ஒருவித அருவருப்பை ஏற்படுத்துகின்றது. வீரசிங்கம் காரணத்தை அறிய முற்பட்டபோது, அவள் சொல்கிறாள்: "என் அப்பன் மொறிஸிடம் அதிகமாக பணம் கேட்கிறான். "நீ இவ்வளவு பணம் கேட்பது சரியில்லை" என்று என் அப்பனிடம் சண்டை போடமுடியுமா? இது எங்கள் சமூகத்தில் நினைத்துப் பார்க்க முடியாதது. என் அப்பன் கேட்கும் பணத்தினை மொறிஸால் இந்த ஜென்மத்தில் சேர்த்துவிட முடியாதென்று எனக்கும் தெரியும் மொறிஸ/க்கும் தெரியும். நான் மொறிஸை மனதாரக் காதலிக்கிறேன். காசுகுடுத்து என்னை வாங்கக் கூடிய பணக்கார கிழவனுக்கு பத்தோடு பதினொன்றாக வாழ நான் விரும்பவில்லை. எங்கள் காதல் ஜெயிக்க வேண்டும். என் பிரார்த்தனை நிறைவேறுவதற்காக உடலையும் விற்க நேரிடுகிறது. ஆனால் உடலுடன் சேர்ந்து என் மனசை யாருக்கும்




விற்றுவிட மாட்டேன்."

ஆபிரிக்காவில் தாய்வழிச் சமூகங்கள் அதிகம். ஆனால் இந்த நடத்தை ஒரு மீற முடியாத ஆணாதிக்க சமூகத்தின் தீய விளைவாகும். "வெள்ளிக்கிழமை விரதம்" போன்ற பிரதிகளிலே ஆசி. கந்தராஜா தமிழ் மரபுச் சூழலையும் பிறநாட்டு கலாசாரச் சூழலையும் கொண்டு நிறுத்துவதன் மூலம் பல கருத்துக்களை விசாரணைக்கு உட்படுத்துகின்றார். ஆசி. கந்தராஜா படைப்பு நுட்பம்மிக்க எழுத்தாளர் என்பதை இப்பிரதி நிஷரூபணமாக்கியுள்ளது.

"பாலன் பிறக்கிறான்" கதை ஆபிரிக்க கலாசாரத்தின் இன்னுமொரு அடாவடித்தனத்தைச் சுட்டுகின்றது. இந்த இருண்டகண்ட சமூகத்தில் இரட்டைக் குழந்தை பிறப்பது "அபசகுனம்" என கருதப் படுகின்றது. இப்பிரதியில் "கங்கி" என்ற பழங்குடி பெண்ணுக்கு பிறந்த இரட்டைக் குழந்தைகள் இந்தக் கலாச்சார வழக்குள் சிக்குண்டு கங்கியின் உறவினர்களால் கொல்லப்படாதிருக்க, மருத்துவம் பார்க்க வந்த தாதி எலிசபெத் ஒரு குழந்தையைத் தன்னுடையதாக பாவனைச் செய்கின்றாள். இந்த மாற்றம் ஆபிரிக்க கலாசாரங்களோடு பின்னிப்பிணைந்திருக்கின்ற மூடக் கொள்கைகளில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன என்பதனையே உணத்துகின்றது. மகிழ்ச்சி இப் புனைவுக்கு உரியாகியுள்ளது.

தொழில் நுட்ப உச்சத்தில் கொடிகட்டிப் பறப்பதாக நாம் எண்ணிக்கொண்டிருக்கும் ஜப்பானியர்களின் வாழ்வின் இன்னுமொரு கோணத்தினை படம்பிடித்துக் காட்டுகின்ற புனைவே "தேன் சுவைக்காத தேனீக்கள்". புலமைப் பரிசில் பெற்று பட்டப்படிப்புக்காக ஜப்பான் செல்கின்ற நளாயினி ஜப்பானியர்களுடன் கொண்ட உறவு, பார்வை மூலமாக புனைவு நகர்த்தப்படுகின்றது. நுண்ணிய மின்சாரக் கல்குலேற்றர்களைக் கண்டு பிடித்த ஜப்பானின் ஆரம்ப பாடசாலைகளில் இன்னும் "sorban" என்னும் மணிச்சட்டத்தை பாவிப்பது நளாயினிக்கு ஆச்சரியத்தினை ஏற்படுகின்றது. இது பற்றி சிறுமி கெய்கோவிடம் கேட்டபோது, ஜப்பானிய சமூகம் பழைமை பேணவும் விருப்புவதாக அவள் குறிப்பிடுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக படித்தும் போட்டிப் பரீட்சையில் தேறமுடியாமையினால் பன்னிரண்டு வயது சிறுமி கெய்கோ தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொள்கிறாள். கெய்கோவின் உடலை அவளது தந்தை பணிபுரியும் தொழிற்சாலை நிருவாகம் வழமைப்போல அப்புறப்படுத்தி விட்டதாகவும், அவர்களே அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொள்வதாகவும், இன்று மாலை சவஅடக்கம் நடைபெறும் என்பதையும் அறிந்துகொண்டபோது. நளாயினிக்கு வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. "தங்கை சடகோ எங்கே?" "பாடசாலைக்கு போய்விட்டாள்" வெகு இயல்பாகவே பதிலளிக்கிறாள் ஜப்பானிய பெண்ணொருத்தி. "வேலை முடிந்தவுடன் மாலை ஆறுமணிக்கு நான் சவ அடக்கத்துக்கு வந்துவிவேன்" என்கிறார் கெய்கோவின் தந்தை. உயிர்பிரிவை சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ளும் ஜப்பானிய நடைமுறையை இப்புனைவு தத்து ரூபமாக விவரிக்கின்றது. அதிநவீன தொழிநுட்பத் துக்குள் மூடுண்டுப்போன ஜப்பான் தேசத்தில் மரணம் என்பது இயந்திரத்தனமான ஒரு வெறும் நிகழ்வே! பிரதியின் இறுதி வரிகளில் இது படிமமாக உறைந் துள்ளது. "வழமைபோல் இன்று மாலை, சவ அடக்கத்தின் பின்னர் கெய்கோவின் பெயரும் இம்மாத தற்கொலைப் பட்டியலில் பத்தோடு பதினொன்றாக பதிவு செய்யப்படும். மறுகணம் ஜப்பானின் அதிநவீன இணையத்தில் உயிர் ஒன்று புள்ளி விபரக் கணக்காகி விடும்." கதைக்குள் புதையுண்டிருக்கம் துயர் மனதினை நெருடச்செய்கின்றது. அவலமே இப்புனைக்கு உரிப்பொருளாகியுள்ளது. "வெள்ளிக்கிழமை விரதம்" போல, "தேன் சுவைக்காத தேனீக்கள்" சிறுகதையும் ஆசி. கந்தராஜாவின் சிகரச்சாதனை என்பதில் ஐயமில்லை.

"அந்நியமாதல்" கதை வங்காள தேசத்தினை தளமாகக் கொண்டது. ஆசிரியரே கதைசொல்லி. தன்னிலையில் கதை நகர்த்தப்படுகின்றது. வழமையாக பேசப்படுகின்ற மனிதனின் அந்நியமாதல் தன்மையை அல்லது மனிதர்களின் இயல்பான தன்மையை இப்பிரதி பாடுபொருளாகக் கொண்டுள்ளது.

கதைசொல்லி பொஸ்னியாவைச் சேர்ந்த மல்கம் என்ற உதவியாளரை வங்காளதேச ஆராய்ச்சி நிலைய மொன்றிற்கு அழைத்துச் செல்கின்றார். மல்கம் உதவியாளராக இருந்தபோதும், அவனது வெள்ளைத் தோல் காரணமாக ஆராய்ச்சி நிலைய மனேஜரால் அவனுக்கு பிரத்தியேக மதிப்பு கொடுக்கப்படுகின்றது. இது மனேஜரின் சிறுமைத்தனத்தினை உணர்த்துகிறது. அங்கு உணவு எடுத்துவருகின்ற யூசுபின் பண்பு கதை சொல்லியை மட்டுமல்ல, மல்கமையும் கவர்ந்துக் கொள்கிறது. யூசுப் மல்கமுடனும் சிநேகமாக இருப்பது மனேஜருக்குப் பிடிக்கவில்லை. தன்னுடைய மகனை விட யூசுபின் மகன் பள்ளியில் மேல்நிலையில் இருப்பதை யும் மனேஜரால் ஏற்க முடியவில்லை. இதனால் யூசுபின் மகனின் உயர்கல்விக்கான பணத்தை செலுத்த முடியாதவாறு செய்து விடுகின்றான். அதிகார வெறித்தனமே இப்பிரதியில் பேசப்பட்டிருக்கிறது.

தொகுப்பின் மீதமுள்ள நான்கு கதைகளினதும் கதைக்களம் அவுஸ்திரேலியா. "கோபுர தரிசனம்" பார்வதி அம்மாளின் கதை. யாரிந்த பார்வதி? தன்னுடைய மூப்பு காலத்தில் சிட்னியில் தனியே வறுமையில் உழல்பவர். பார்வதியின் யாழ்ப்பாண பெற்றோர், அவுஸ்திரேலிய மாப்பிள்ளை என்பதனால் 42 வயது வைத்தியருக்கு 20 வயது பார்வதியை இரண் டாம் தாரமாகக் கட்டிவைக்கின்றனர். அவுஸ்திரேலியா வந்த புதிதில் விடியற்காலை துயிலெழுந்து கணவனின் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவது தொடக்கம், கணவர் தனது "கிளினிக்"கிற்கு போவதற்கான சகல காரியங்களையும் கச்சிதமாக செய்து முடிப்பாள். இப்படி சதா உழைத்த பார்வதிக்கு.....? பார்வதியின் கணவர் டாக்டர் நடராஜசிவம் தமது தந்தை மேம்போக்கு வாழ்க்கையில் மட்டுமே கவனம் செலுத்தி வாழ்ந்து மடிந்தவர். எமக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த பார்வதியின் தியாகத்தை உணராமல் உதறிவிட்ட அவரது பிள்ளைகள். "ஊருக்கெல்லாம் வழிகாட்டின மனுஷன் எனக்கொரு வழிகாட்ட மறந்து போனார். என்னைக் கட்டேக்கை அவருக்கு நாற்பத்திரண்டு வயது தான். என்ரை வயித்திலையும் ஒரு குழந்தை தங்க வேணுமெண்டு எனக்கிருந்த ஆசையை அவரால் ஏன் விளங்கிக் கொள்ள முடியவில்லை? தங்கின பிள்ளையளை எல்லாம் ஒவ்வொண்டாய் கரைச்சு.... கொஞ்ச குளிசைகளையே விழுங்கினன்?...." இது பார்வதி அம்மாளின் அடிமன ஆதங்கம்.

பார்வதி அம்மாள் சிட்னி முருகன் தரிசனத்திற்கு செல்வதைப் பற்றிய நிகழ்வுகளும் நினைவுகளும் கலந்தாக கதை நகர்த்தப்பட்டுள்ளது. கோபுரம் போல் உயர்ந்திருக்கும் பார்வதி அம்மாளின் சாந்தகுணமே புனைவில் உண்மையான தரிசனமாக சொல்லப் பட்டுள்ளது. இப்புனைவினை படித்து முடிக்கையில் இவரது கதைகள் பற்றி பிரபஞ்சன் எழுதியது மனசுக்குள் குமிழியிட்டது: "கந்தராஜாவின் கதைகள், கந்தராஜாவின் கதைகளே! அதாவது அவருடைய அனுபவம் சார்ந்த கதைகள். அதனால்தான் அவருடைய கதைகள், நிஜ மான அனுபவத்தை வாசகர்க்கு மாற்றித் தரு கின்றன. கதைகளின் பலம், அவை சொல்லப்பட்ட விதத்தில் நடந்திருக்கும் என்று நம்பும் படியாக இருப்பதுதான். இந்தக் கதைகள், உண்மைகள் என்று வார்த்தை தோறும் நமக்கு அனுபவமாகிறது. கந்தராஜாவின் வார்த்தைகள், சம்பாஷணைகள், யாழ்ப்பாண வழக்குச் சொற்கள். இவை, ரசிக்கத்தக்க வகையில் அமைந்து கதைகளுக்கு ஒரு பிரதேசத் தன்மையைத் தந்துவிடு கின்றன. கதை மாந்தர்கள், புலம் பெயர்ந்து, புதிய பூகோளக் கோடுகளுக்குள் வாழ நேர்ந்தாலும், தம் "சுயம்" மறக்காதவர்கள். சுயத்தை தன் இயல்பாகவே வெளிப்படுத்துகிறார்கள்" (முன்னுரை: பாவனை பேசலன்றி).

'ஒட்டுக் கன்றுகளின் காலம்" சற்று மாறுபட்ட கதை ஓட்டத்தைக் கொண்டது. அவுஸ்திரேலியாவைக் களமாகக் கொண்டிருந்தாலும் புலம்பெயர் வாழ்வின் சிக்கல்கள்களையே கதைசொல்லி சித்திரித்துள்ளார். வெள்ளையர்களுடன் நட்புக்குக்கூட நெருங்கக்கூடாது என்ற கணிப்புடன் அபிராமியின் பெற்றோர் வாழ்ந்து வந்தனர். ஆனால் அவர்களது மூத்தமகள் சங்கீதா தமிழனான ராகவனால் ஏமாற்றப்பட்டபோது மனத் தெளிவு அடைகிறார்கள். பிரதியின் ஈற்றடிகள் இதனை படிமமாக்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமியின் அம்மா வளவின் பின்புறத்தே அவுஸ்திரேலிய மண்ணில் யாழ்ப்பாணக் கறிவேப்பிலை, கத்தரி, வாழை, மா, மல்லிகை, கனகாம்பரம் நட்டு வளர்க்கிறார். அதனால் அவ்விடத்தில் ஒரு குட்டி யாழ்ப்பாணம் துளிர்த்து உருவானது. அதேநேரம் அத்தோட்டத்தில் வெள்ளைக்காரன் நட்டு வைத்த யூக்கலிப்ரஸ் மரம் கிளைவிட்டு வளர்ந்திருந்தது. அவுஸ்திரேலிய கவுன்ஸ்லின் அனுமதியின்றி அதனை வெட்டமுடியாது என்பதற்கூடாக, ஆசி. கந்தராஜா வார்த்தைகளுக்குள் அகப்படாத சங்கதிகளை உணர வைக்கிறார். “சிறுகதையில் எழுதப்படுவன, எழுத்தின் வழிதோன்றி எழுத்துக்கு அப்பால் நிற்கும் உணர்வு களைத் தோற்றுவிப்பனவாக விருத்தல் வேண்டும்” என்ற பேராசிரியர் கா.சிவத்தமபி அவர்களின் வார்த்தைகள் இங்கு உயிர்பிக்கப்பட்டுள்ளன. அந்த யூக்கலிப்ரஸ் மரத்தைப் பற்றி புடலங்கொடி ஒன்று அதற்கெனப் போடப்பட்ட பந்தலில் இருந்து இயல்பாகவே விலகி படரத்தொடங்கியது எனும் போது கதையின் உரி ஒரு “ஹைக்கூ”வாக விரிகிறது. கறிவேப்பிலை மரநிழலில் ஞானம் பெறுகின்ற அம்மா, இப்போது புடலங்கொடி படர்ந்த யூக்கலிப்ரஸ் மர நிழலில் ஞானம் பெறுகிறாள்.... “சிறுகதையில் உரைநடை, கவிதைக் குரிய காம்பீரியத்துடனும் நுண்ணுணர்வுடனும் தொழிற் படுதல் வேண்டும்” என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவது இப்புனைவுக்கு பொருந்துகின்றது.

சுந்தர மூர்த்தி குடும்பத்தார் சிட்னியில் நடக்கும் நண்பனின் மனைவியின் நாற்பதாவது பிறந்தநாள் நிகழ்வுக்கு சென்று வருவதே “முன்னிரவு மயக்கங்கள்” சிறுகதை. நிகழ்வு மகிழ்ச்சி தருவதற்கு பதிலாக மனக்கிலேசத்தையே தோற்றுவிக்கிறது. போலித்துவ மான வெளிப்பகட்டு மாயையில் மயங்கி குடும்பத்தில் நிலவவேண்டிய அமைதியும் மகிழ்வும் சீர்குலை வதையே இந்த உரைப்படைப்பு காட்டுகின்றது. வாழ்வதற்கு வீடு, வசதிக்கு கார், பழக மனிதர் என்றில்லாது இவற்றுக்காகவே வாழ்வு என்ற நிலையில் போலிப் பெருமைகளையும் பழக்க வழக்கங்களையும் விட்டுவிடமுடியாமல், புலம்பெயர் தமிழர்கள் இன்னமும் போலி முகங்களுடன் வாழ்வதையே எள்ளலுடன் கதைசொல்லி எடுத்தியம்பியுள்ளார்.

அந்தக்கால கறுவாத்தோட்ட தமிழனின் மானிடவியல் பதிவுதான் “உயரப் பறக்கும் காகங்கள்” சிறுகதை. அரச உத்தியோகம் மீதான ஈர்ப்பு, வெள்ளைத்தோல் மீதான மாறாத மோகம் என்பன காலனிய அரசின் முதுசச்சொத்து. இந்த முதுசச்சொத்தின் பிரதிநிதியே இப்பிரதியின் நாயகன் சுகுமார். சுகுமார் அமெரிக்காவின் முக்கிய எழுத்தாளரான ரிச்சர்ட் பாக் எழுதிய “ஜோனாத்தன் லிவிங்ஸ்டன் ஸீகல்” பிரதியின் நாயகன் கடல்காகம் ஜோனாத்தன் உடன் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றான். கரணம் அடித்து விழுந்து எழும் ஜோனார்த்தன் போல், சுகுமார் தன்னை தனியனாய் காட்டிக் கொள்வதற்காக உயர, உயரப் பறக்கிறான் விழுந்து விழுந்து எழுகிறான். உயர்வென்ற கோதாவில் பறங்கிப்பெண்ணை மணக்கிறான். அதிலிருந்து சறுக்கிவிழ பகட்டாய் அவுஸ்திரேலியப் பெண்ணை மணக்கிறான். அந்த வாழ்விற்குள் நிலைத்திருக்க செய்யவேண்டிய தெல்லாம் செய்கிறான். ஆனால் அவனது அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைகின்றன. முடிவாக ஈழத்து தமிழ் பெண்ணை மணந்து நிம்மதி அடைகின்றான். “இயல்பான வாழ்விலிருந்து விலகி, உயர்வென்று நினைத்து பகட்டாய் வாழ்ந்து பறங்கிப் பெண்ணை மணந்து, அவுஸ்திரேலியப் பெண்ணை மணந்து கடைசியில் இலங்கைத் தமிழ்ப்பெண்ணையே மணந்து நிம்மதி தேடிய சுகுமார் வடை, கொழுக்கட்டையுடன் இவர் (கதைசொல்லி) வீட்டுக்கு வருகிறார். ஒரு தசாப்தகாலம் சிட்னியில் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணக் கலாச்சாரத்துடன் வரவேற்கும் இவர் மனைவி அவரை இன்முகத்தோடு வரவேற்கிறார். இதில் கந்தராஜா கூற முனைந்த யாழ்ப்பாணக் கலாச்சாரமும், வரவேற்பும், அழகும் இதமானவையே. தமிழ்மணம் வீசும் காதலும் அதனால் கிடைக்கப் போகும் அடையாளங்களும் தமிழ் சந்ததிக்கான வித்துக்களே. இருந்தாலும் வெள்ளை மனைவியர்கள் தவறானவர்கள், யாழ்பாணப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாலேயே சுகுமார் இப்போது நிம்மதியாக வாழ்கிறார் என்பதான கதையின் பிரமைத் தொனியை என்னால் முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை” என்பது சந்திரவதன (யேர்மனி) வின் விமர்சன நோக்காகும்.

ஆசி. கந்தராஜாவின் இத்தொகுப்பு எம்மை வேறொரு தளத்திற்கு இட்டுச் செல்கின்றன. அவருக்கே உரித்தான உலகஅனுபவங்கள் உண்மையின் உயிர்ப் போடு புனையப்பட்டுள்ளன. யதார்த்தமான சொல் லாடல்களும், படிமமாக விரியும் காட்சிகளும் உள்ளத் தில் உறைகின்றன. யாழ்ப்பாண பேச்சு மொழியை உயிர்ப்பித்து, ஆர்பாட்டமில்லா நடைக்கூடாக வாசிப்ப வர்களை கதையோட்டத்துடன் அழைத்துப்போகும் பாங்கு அலாதியானது. வரிகள் வாசிப்பதற்கு எளிமை யானாலும், அவை தருகின்ற பாதிப்பு நுண்மையானது. கதை சொல்லும் முறையும் கதைப்பொருண்மையும் தனித்துவமானது. பாத்திர கட்டமைப்பு நேர்த்தியானது. ஆசி. கந்தராஜாவின் “உயரப் பறக்கும் காகங்கள்“ நுட்பமான உணர்வுகளை வரைந்துச் செல்கின்றன என்பது முகில் மூடாத உண்மை. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்களின் திறனாய்வு வரிகளோடு இதனை நிறைவு செய்கின்றேன்: “ஆசி கந்தராஜா ஒரு எளிமையான கதைசொல்லி. நவீனவாதப் பொறிக்குள் சிக்காதவர். தனக்கென்ற ஒரு நேரடியான கதை சொல்லும் பாணியை உருவாக்கிக்கொண்டவர்.. பெரும்பாலான கதைகளில் அவரே கதைசொல்லி யாகவும் அமைகிறார். பெரும்பாலான பாத்திரங்கள் கதைசொல்லியோடு நெருக்கமான உறவுடையவை. அதனால் அவர் சொல்லும் கதைகள் அவரது சொந்த அனுபவங்கள் தான் என்ற ஒரு பிரமையை வாசகருள் ஏற்படுத்து கின்றன. அவை ஒவ்வொன்றும் அப்படியே உண்மை அனுபவங்களாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், வாழ்க்கையின் உண்மைகளைப் பற்றிப் பேசுபவை. பல்வேறு வகையான மனித ஆளுமைகளை, பல்வேறு வகையான பண்பாடுகளை, சமூக நெருக்கடிகளை, மனிதர்களின் உயர்வுகளை, வீழ்ச்சிகளைப் பேசுபவை அதனால் அவருடைய கதைகள் நமக்குள் உண்மை அனுபவங்களாக இறங்குகின்றன”.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீபுதிர் பொதிந்த அறிவியற் புலத்தின் எளிமையான பிரதியாளிகளாக சுஜாதா, ராஜ்சிவா என்போர் அடையாளங் காணப்படுகின்றனர். அந்த வகையில் ஆசி.கந்தராஜாவும் அமைவது பெரு மகிழ்வினைத் தருகின்றது. இவர் எழுதிய "மண் அளக்கும் சொல்" தொகுப்பிலுள்ள கட்டுரைகள் புனைவின் நாயதீதத்தைத் தொற்ற வைக்கும் வகையிலே காணப்படுகின்றன. நுண்ணிய சந்தேக இருளிடுக்குகளில் எழுத்தொளி பாய்ச்சும் வல்லமையோடு எளிய முறையில் இக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அறிவியலின் ஆழ்புலத்தில் உறைந்திருக்கும் மிரள் வனப்பியலையும் புலமையரசியலின் முரண் இங்கியலையும் இலகுவான முறையிலே தெளிவுபடுத்துகின்றார். தகவல் சேகரம் என்ற தட்டையான கோணத்திலிருந்து விலகி புனைவொன்றை வரிக்கும் கொண்டாட்ட மனநிலைக்கு அழைத்துச் செல்கின்றார். நுண்ணதிர்வால் இயற்கையின் பேரழிவினை உணரும் சிற்றெறும்பு போல அறிவியலின் அதிர்வுகளை தர்க்க மீறலின்றிச் சமூகப்பொறுப்போடு பதிவு செய்துள்ளார். அன்றாட விடயங்களை திரள்மொழியடுக்குகளால் வசீகரமான தகவல்களோடு எழுதிச் செல்கின்றார்.

தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை அறிவியல் ரீதியாக அணுகும் வகையிலே இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. வலிந்து விளக்கங்களைச் செருகாமல், தெரியாத இடங்களில் வெளிப்படைப் பண்போடு தெளிவின்மையை நேர்மையோடு இனங்காட்டவும் தயங்கவில்லை. முருங்கைக்காய், மட்டுவில் கத்திரிக்காய், கறுத்தக் கொழும்பான், பனைமரம், வரகு, உரப் பயன்பாடு என்றவாறாக வாழ்விலோடு அணுகியுள்ளார். சிறுகதை, நாவல் எனப் புனைவுக் கடலில் பெருநீச்சல் போட்ட அனுபவத்தால், சுவாரஸ்யமாகக் கட்டுரைகளை எழுதிச் செல்கின்றார். பூமரத்தின் மீயறிவை விளக்கும்போது, பாமரரும் புரிந்து கொள்ளும் மொழிநடையினை எடுத்தாள்கின்றார். இக்கட்டுரை களின் மிகப்பெரிய பலமாக இதனைக் கருதலாம். "வாழைகளும் வஞ்சகம் செய்வதில்லை", "பாவலும் பூசணியும் டிமிக்கி கொடுத்தன" என்று மீநயமான மொழிநடையால் கவர்ந்திழுக்கின்றார். விஞ்ஞானம் சார்ந்த நுண் தகவல்களால் வியப்பெய்துகின்றோம். தனித்தனிக் கட்டுரைகளாக எழுதப்பட்டு, பின்னர் நூலுருப்பெற்றமையால் கூறியது கூறலாக தகவல்கள் அதிகமுள்ள. "சீன நாட்டு நண்பரும் எருமை மாட்டுப் புல்லும்" கட்டுரையில் வெளிப்படும் விடயங்கள் ஏற்கெனவேயுள்ள கட்டுரைகளில் சுவறிக் கிடக்கின்றன. இந்நூல் வாசிப்பிற்குப் பேரானந்தத்தினை தரக்கூடியது.

# புனைவின் நயாதீதத்தை தொற்ற வைக்கும் அறிவியற் கட்டுரைகள்

இ.சு.முரளிதரன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாத் தகவல்கள் கொக்கி போட்டு ஈர்க்கின்றன.

முருங்கைக் காய் "சாத்தானின் விரல்கள்" என்று ஆபிரிக்க தேசத்தார் கருதுவதும், Ben oil நீண்ட காலம் காயா திருப்பதும் புதிய தகவல்களாக அமைந்தன. முருங்கைக்காய் பற்றிப் பேசுவோர் பாக்கியராஜ் குறித்து பேசாது விடுவார்களா...? எனினும் அந்த "சமாச் சாரத்தின்" பின்னுள்ள மெய்யை அறிவியல் ரீதியாக உறுதி செய்ய முடியவில்லை என்று ஒதுங்கி விடுவதும் நகைச்சுவை யூட்டுகின்றது. பத்தியத்திற்கு முருங்கைக் காயைப் பயன்படுத்துவதன் பின்புலத்தையும் தெளிவு படுத்துகின்றார். கிளமஞ்சாரோ குறித்தும் தான்சானி வரலாறு பற்றியும் சிலாகித்து எழுதியிருப்பது வெகு சிறப்பு. யாழ்ப்பாணத்தில் விரதகாலங்களில் முருங்கைக் காய் நிராகரிப்புக்குப் புராணம் சார்ந்த ஐதீகத்தைப்பதிவு செய்துள்ளார். எனது தாயார் வேறொரு கதை சொல்லி யுள்ளார். அக்கதையிலே சூரனது விரல்களாக முருங்கைக்காய் அமைந்திருந்தது. இதனால் எங்கள் கிராமத்திலும் விரத காலங்களில் முருங்கைக்கா் விலக்கப்பட்டது. ஆனால் தற்போது நல்லூரில் (எனது புகுந்தவீடு) விரத காலங்களிலும் சமைக்கப்படுகின்றது. ஜேர்மனியில் முருங்கைப் பூவில் "மொரிங்கோ" என்ற பெயரில் ஷம்பூ தயாரிக்கப் படுவதாக ராஜ்சிவாவின் கட்டுரையொன்றிலே வாசித்துள்ளமையினையும் இவ்விடத்திலே உபதகவலாகப் பதிவு செய்கின்றேன்.




வேலியோடும் கிண்டலோடும் அறிமுகமாகும் பாத்திரமொன்று பாரம்பரிய இனமொன்றைக் காக்கப் பணமொதுக்கி விஸ்வரூபம் பெறுகின்ற இறுதிச் சத்தோடு "முட்டிக்கத்தரிக்காய்" என்ற கட்டுரை அமைந்துள்ளது. வெள்ளை நிற முட்டிக் கத்தரிக்காய் அருகே ஊதா நிறக் கத்தரிச் செடியினை நட்டு வளர்த்தால், அல் மகரந்தச் சேர்கையூடாக மரபணு மாற்றம் நிகழ்கின்ற விவரிப்பு அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் பன்றித் தலைச்சி யின் நாம முகாந்திரம், தில்லையம்பலப் பிள்ளையாரின் பொரித்த மோதகம் போன்ற பன்முகத் தகவல்கள் சுவாரஸ்ய மூட்டுகின்றன.

வரகு மான்மியம் கட்டுரையில் வரகு குறித்த தகவல்களோடு கருக்கட்டல், வாடகைத்தாய் விந்து மற்றும் கருமுட்டை விற்பனை குறித்துப் பேசுகின்றார். தானியங்களின் முறைதிறன் ஒரு வருடம் மட்டுமே! அப்படியென்றால் கோபுரக்கலசத்தில் தானியங்களை நிரப்புதல் எவ்வகையில் அறிவியலுக்குப் பொருந்தும் என்ற கேள்வி என்னிடமும் இருந்தது. இக்கட்டுரை தெளி வான விடையினை தந்துள்ளது. உலோகக் கலவையின் திறன் குறித்த விஞ்ஞானத்தகவலை எதிர் காலத்தில் எழுதினால் தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பெரும்பயனாக அமையும். அக்கட்டுரையில் புகையிலைச் செய்கை, மிள காய் வளர்ப்பு, துலா மிதிப்பு குறித்தும் சிலாகித்துள்ளார்.

வாழை மரம் குறித்து வேதவல்லி அக்கா கூறிய விடயத்தோடு இறுதியுத்தத்தில் அக்காவின் மரணத்தை இணைத்து துன்பியல் உணர்வைச் சுவறச் செய்கின்றார். விதையில் முளைக்கும் தாவரத்தில் தாய்மரத்தின் இயல்புகள் இருப்பதற்கு உத்தரவாதமில்லை. ஆனால் பதியன்களில் தாய்மரத்தின் இயல்பு கள் சகலதும் இருக்கும் என்ற தகவல் எனக்குப் புதிதாக இருந்தது. வேரில் பழுத்த பலா என்பதனை விளக்கிய விதமும் வெகு சிறப்பு. மரபணுமாற்ற விதைகளின் பின்னுள்ள வியாபார உத்தியையும் தெளிவு படுத்துகின்றார். விவசாயத்துக்கான விழிப் புணர்வினையும் ஏற்படுத்த முனைகின்றார். யூசுப்பின் இறைச்சிக்கடை சைமனின் பழக்கடை குறித்த விவரிப்பின் ஊடாக மதம் சார்ந்த விடயங்களையும் நுணுக்கமாகப் பதிவு செய்துள்ளார்.

"ஒட்டுக்கன்றுகள்" கட்டுரையில் ஊர்ப்பரியாரி களின் தில்லுமுல்லுகளை சிறப்பாக விளக்குகின்றார். அன்னம்மா வீட்டு எலும்மிச்சையில் நாரத்தேங்காய் காய்த்த வித்திற்கு விளக்கம் கொடுக்கும் தகுநயத்தில் ஒட்டுமுறை பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றார். "என்.பி.கே" குறித்த பதிவு வாசிப்புக்கு அருமையாக வுள்ளது. உரம், களை, கொல்லி என்பன குறித்து விலா வாரியாக விளக்கியுள்ளார். நைட்ரஜன், பொட்டாசியம், பொஸ்பரஸ் மூன்றும் கலந்த உரக்கலவையே தலைப் பாகியுள்ளது. களை கொல்லியானது ஒருவித்திலைத் தாவரத்திற்கும், இரு வித்திலைத் தாவரத்திற்கும் தனித்தனியானது என்ற தகவலை இக்கட்டுரையை வாசித்தபோதே அறிந்து கொண்டேன். பிலாஸ்றிக் அரிசி குறித்து தர்க்கரீதியாக விளக்குகின்றார். எதிலீன் வாயு பற்றிய பதிவில் "ஒரு பையில் எலுமிச்சங்காய்களையும் பிஞ்சு வெண்டிக்காயையும் போட்டு வைத்தால் வெண்டிக்காய் முற்றி விடும்" என்ற செய்தி வியப்பினைத் தந்தது. கல்சியம் கார்பைடு பாவித்து பழுக்கச் செய்வதன் தீமைகளை விவரமாகத் தந்துள்ளார். மீனில் வாற் துண்டை விட நடுத்துண்டே சிறந்தது என்பதற்கு கொடுத்துள்ள விளக்கமும் ஆச்சரியமூட்டியது.

கறுத்தக்கொழும்பான் மாமரத்தை உருவாக்கும் முகிழ்நிலை முயற்சியை எடுத்த உடையார், இறுதியில் தமிழைப்" பாதுகாக்கும் செயற்றிட்டத்திற்கு மாறியதை விளக்குவதாகக் "கறுத்தக் கொழும்பான்" கட்டுரை அமைகின்றது. அக்கட்டுரையில் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியாமைக் கான காரணங்களை அழகாக விக்கியுள்ளார். பேரீச்சமர வளர்ப்புடன் பனைமரத்தின் சிறப்புகளையும் "கற்பக விருட்சம்" கட்டுரை எடுத்து விளக்குகிறது. அரபு நாடுகளில் தமிழரின் நிலை நெருடலை ஏற்படுத்தும் விதத்திலே விவரிக்கப்படுகிறது. அறிவியலை இத்தனை எளிமையாகவும், ஈர்ப்பாகவும் எழுதிவிட முடியுமா? என்ற பெருவியப்பினை ஏற்படுத்தும் வகையிலே ஆசி கந்த ராஜாவின் நூல் அமைந்துள்ளது. சிறுகதை, கவிதை, நாவல் போன்றவற்றை கொண்டாட்ட உணர்வோடு வாசித்துப் பேரின்பமடைந்துள்ளேன். நீண்ட காலத் திற்கு பிறகு, கட்டுரைத்தொகுப்பொன்றினை வாசித்து அவ்வகையுணர்வினைப் பெற்றேன். அற்புதமான நூல்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி சு. குணேஸ்வரன்

# மானிட விழுமியம் போற்றும் "பாவனை பேசலன்றி"



**அறிமுகம்**

தமிழ்ப் புனைகதைத் துறைக்கு வளஞ்சேர்க்கும் படைப்பாளிகள் வரிசையில். அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் ஆசி. கந்தராஜாவும் ஒருவர். அறிதொழில் சார்ந்த தனது பேராசிரியர் பணிக்கு அப்பால் இலக்கியத் துறையிலும் ஈடுபட்டு வருபவர். 80களின் பின்னர் போரும் வாழ்வும் இடப்பெயர்வும் ஆயுதக்கலாசாரமும் என்று சுற்றிக்கொண்டே இருந்த ஈழப் புனைகதைப் பரப்பில் ஈழத்து இலக்கியத்தின் தொடர்ச்சியோடு புதிய வாழ்வியல் அனுபவங்களையும் தந்தவர்களில் ஒருவராகக் காணப்படுகின்றார். அவரின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகிய "பாவனை பேசலன்றி" (2000, மித்ர பதிப்பு) குறித்த பார்வையாகவே இக்கட்டுரை அமைகின்றது.

ஆசி. கந்தராஜா தனது தொழிலின் நிமிர்த்தம் உலகின் பல பாகங்களுக்கும் பயணப்பட்டவர். அதன்மூலம் தனது தரிசனங்களைத் தனது கதைகளுக்குப் பகைப்புலமாகக் கொண்டுள்ளார். மிகப் பரந்த ஒரு புறவுலகச் சித்திரிப்பின் ஊடாக கதை சொல்லியாகத் திகழும் அ. முத்துலிங்கத்தின் தொடர்ச்சியாகப் பல புதிய களங்களையும் கதைகளையும் ஆசி. கந்தராஜாவும் நமக்கு அறிமுகப் படுத்துகிறார். அதில் சில கதைகளை இத்தொகுப்பில் காணலாம்.

தொகுப்பில் பத்துக் கதைகள் உள்ளன. குடும்ப வாழ்வு குறித்த சிக்கல்கள், போலிப் பெருமைகள், புதிய களங்களில் கிடைத்த அநுபவங்கள், தனித்துப்போன முதியோரின் வாழ்வில் ஏற்படுகின்ற ஏமாற்றங்கள் ஆகியவற்றை இத்தொகுப்பு மையமாகக் கொண்டமைந்துள்ளது.

**குடும்ப வாழ்வு குறித்த சிக்கல்கள்**

தொகுப்பில் உள்ள கதைகளில் அம்மா பையன், அடிவானம் ஆகியவை குடும்பத்தில் ஆண் பெண் குறித்த சிக்கல்களைக் கூறும் கதைகளாக உள்ளன. இக்கதைகளின் ஊடாக மேலைத்தேயக் குடும்பங்களையும் தமிழர் குடும்பங்களையும் இரண்டு புறமும் வைத்து சீர்தூக்கிப் பார்க்கின்றார்.

புலமைப் பரிசில் பெற்று ஜேர்மனிக்குப் படிப்பின் நிமித்தம் சென்றபோது வியட்நாமியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பும் பிரிவும், நீண்ட காலங்களின் பின்னரான சந்திப்பும் குழப்பகரமான நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன. அதனை "அம்மா பையன்" என்ற கதையில் ஆசிரியர் காட்டுகிறார். தனது தாய் ஏமாற்றப்பட்டாள் என்பதை மகன் அறிந்த போது மதிப்புக்குரிய பெரிய மனிதராக இருந்தாலும் முகத்தில் அடித்தாற்போல் கூறுகின்ற வார்த்தைகளாக,

> "புத்திஜீவி என்ற மமதையிலே மானிட தர்மங்களை மறந்த ஒருவரை என் தந்தை என்று அடையாளப்படுத்த நான் விரும்பவில்லை. கிம்மின் மகனாகவும் வியட்நாம் குடிமகனாகவும் வாழ்வதை நான் பெருமையாகக் கருதுகிறேன்." (அம்மா பையன்)

என்று கூறுகின்றான். வெளிநாட்டில் கல்வி கற்கும் காலத்தில் ஏற்பட்ட இந்த உறவுநிலை பல வருடங்களின் பின்னர் மீண்டும் தற்செயலான சந்திப்பின்போது நிராகரிப்புக்கும் அவமானத்திற்கும் ஆளாகின்றது. மேலைத்தேய வாழ்நிலையாக இருந்தாலும் இங்கும் பெண் ஏமாற்றப்படுகின்றாள்.

அடிவானம் என்ற கதை மேலைத்தேய குடும்ப வாழ்வில் தன் கணவனிடம் இருந்து விவாகரத்துப் பெற்றுச் செல்ல விரும்பும் ஜேர்மனிய றொனால்ட் - மொனிக்கா கதையினையும் தமிழ்ச் சூழலில் கணவன் எவ்வளவுதான் கொடுமையானவனாக இருந்தாலும் சேர்ந்து வாழ விரும்பும் தவமணி - சின்னராசா கதையினையும் ஆசி கந்தராசா தருகிறார். இரண்டு சமூகத்திலும் இருக்கக்கூடிய குடும்பங்கள். அவர்களின் வாழ்வில் ஏற்படும் விரிசல்கள், அவற்றுக்கான காரணங்கள் ஆகியவற்றை வீரசிங்கம் என்ற பாத்திரத்தின் ஊடாக இணைக்கின்ற கதைப்போக்கு சீராக அமைந்துள்ளது. ஒரு நாவலாக விரியக்கூடிய அளவுக்கு கதைகளும் கதா மாந்தர்களும் கதைக்களங்களும் அமைந்துள்ளன.

இவ்வாறான குடும்ப வாழ்வு குறித்த சிக்கல்களை தமிழ்ப் பண்பாட்டுச்சூழலையும் மேலைத்தேய பண்பாட்டுச் சூழலையும் கொண்டு வந்து நிறுத்துவதன் மூலம் கேள்விக்கு உட்படுத்துகின்றார் ஆசி. கந்தராஜா. தனது குடும்ப வாழ்வுக்குப் பொருத்தமில்லாத ஆடவன் எனத் தெரிந்து கொண்ட ஜேர்மனியப் பெண் மொனிக்கா றொனாட்டை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு ஆடவனைத் திருமணம் செய்து வாழ விரும்புகிறாள். அதற்கேற்ப சொந்தமாகத் தொழில்தேடி தனது வாழ்வை தானே அமைத்துக் கொள்ளும் சுதந்திரம் கொண்டவளாகக் காட்டப்படுகின்றாள்.

ஆனால் தமிழ்ச்சூழலில் வாழத் தலைப்பட்ட தவமணி, குடும்பத்திற்காகத் தானே உழைத்து, உழைப்பில்லாத குடிகாரக் கணவனையும் ஏற்றுக் கொண்டு அவன் அவளுக்குச் செய்யும் கொடுமைகளையும் அனுபவித்துக்கொண்டு வாழ்ந்தாலும் தனித்து வாழவோ அல்லது அவனை விவாகரத்துச் செய்து கொள்ளவோ மறுக்கிறாள். இவ்வாறான வாழ்வுமுறை தேவை தானா என்ற வினாவையும் ஆசிரியர் எழுப்புகிறார்.




தவமணி போன்றவர்களுக்கு உதவி செய்ய விழைகின்ற சந்தர்ப்பங்களையுங்கூட தமிழ்ச்சமூகம் கதைகட்டி அநாகரிகமான நோக்குகின்ற அபத்தத்தையும் வீரசிங்கம் மனைவியின் உரையாடல்களினூடாகக் காட்டுகிறார். இவை களங்கள் மாறினாலும் மனிதர்கள் தங்கள் மனநிலையை இன்னமும் மாற்றாமலே இருக்கிறார்கள் என்பதைத் தான் காட்டுகின்றன.

**போலிப் பெருமைகள்**

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களில் பலர் தமது போலிப் பெருமைகளையும் பழக்க வழக்கங்களையும் இன்னமும் விட்டுவிட முடியாமல் ஒருவர் மற்றவரை ஏமாற்ற போலி முகங்களுடன் வாழ்ந்து வருவதை "காலமும் களமும்", "பாவனை பேசலன்றி" ஆகிய கதைகளில் எள்ளல் தொனிக்கக் கூறுகிறார். போலிப்பெருமைகளால் திருப்திப்படுகின்ற தமிழ்ச் சமூகத்தை கண்முன் கொண்டு வருகின்ற கதைகளாக இவை அமைந்துள்ளன. காலங்களும் களங்களும் மாறினாலும் தமிழனின் குணம் மாறாமல் இருக்கின்றது. தாயகத்தில் கிராமத்துப் பெரிய மனிதர்களாக உலா வந்தவர்கள் புகலிடத்திலும் கூட தமது பெருமையை நிலைநாட்ட விழைகின்றனர். சமூக நிறுவனங்களில் தலைவர் பதவியைப் பெறவேண்டும், இங்கும் பெரிய மனிதர்களாக உலாவரவேண்டும் முதலான "ஆசை பற்றி அலையவுறுதல்" அவர்களை விடாமல் அலைக் கழித்துக் கொண்டிருக்கின்றன.

"மறுக்கப்படும் வயதுகள்" என்ற சிறுகதையில் நான்காம் தரத்தில் கல்வி கற்கும் பிள்ளைக்குப் புலம்பெயர் சூழலில் பெற்றோரால் திணிக்கப்படுகின்ற கல்விச் சுமைகள் சொல்லப்படுகின்றன. அந்நாட்டு வெள்ளையினப் பிள்ளைகள் இவர்களின் செயற்பாட்டை அதிசயமாகப் பார்க்கின்றனர். ஆனால் நடைமுறையில் இதற்கு புலம்பெயர்ந்தவர்கள் கூறும் காரணம் யாதெனில், யுத்தத்தால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட சமூகம் நாங்கள். வேற்றுநாட்டுச் சமூகங்களுடன் மிகப்பெரும் போட்டிபோட்டுத்தான் முன்னேறவேண்டியிருக்கிறது என்பது. இதற்காக குருட்டுத்தனமாகப் பிஞ்சுப் பருவத்திற்கு பொருத்தமில்லாத பாரத்தை ஏற்றுவது சரிதானா என்ற கேள்வியை இக்கதை எழுப்புகிறது. இது ஈழச்சூழலிலும் இருப்பது வியப்புக்குரியதல்ல.

**தனித்துப்போன முதியோரின் வாழ்வு**

ஆசி. கந்தராஜாவின் கதைகளில் சமூகத்தால் தனித்து விடப்பட்ட மாந்தர்களின் உணர்வுக் கோலங்கள் முக்கியமானவை. இதனை தொகுப்பின் தலைப்புக் கதையான "பாவனை பேசலன்றி" எடுத்துக் காட்டுகிறது.

புலம்பெயர்ந்த சூழலில் மனிதர்கள் எவ்வாறான கீழ்மையான எண்ணங்களுடன் உலாவருகிறார்கள் என்பதற்கு இக்கதை சாட்சியமாக அமைந்துள்ளது. ஈழச்சூழலில் மிக மதிக்கத்தக்க பேர்வழியாக இருந்த சின்னத்துரை வாத்தியார் அவரின் குடும்பத்தினராலேயே அவமதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவதும் அந்த தனிமை வாழ்வும் ஒதுக்குதலுமே அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரிழப்புக்குக் காரணமாவதையும் ஆசிரியர் காட்டுவார். உள்ளே ஒன்றைச் செய்துகொண்டு வெளியே போலிப்பெருமை பேசும் சமூகமாக நாங்கள் மாறி வருவதை இக்கதையில் தரிசிக்கலாம். வெள்ளையருக்கு மட்டுமல்ல. தமது இனத்தவருகே தாங்கள் பெரிய மனிதர்கள் நாகரிகமானவர்கள் பெரிய படிப்பும் மேலான உத்தியோகமும் உடையவர்கள் என்ற போலிப் பெருமையைக் காட்டுவதற்காக வயதான தனித்துப்போன சின்னத்துரை வாத்தியார் பகடைக்காயாக்கப்படுகிறார். இதனை அவரின் மரணவீட்டுச் சடங்குக்கு ஊடாக ஆசி. கந்தராஜா காட்டுகிறார்.

கதையை வாசிக்கின்றபோது இவ்வாறான பாத்திரங்கள் கண்முன்னேயே நடமாடுவதை ஒவ்வொருவரும் உணரக்கூடியதாக இருக்கும். வாத்தியார் இறந்தவுடன் முதியோர் இல்லத்தில் இருந்து அவரின் சடலம் வீட்டுக்குக் கொண்டு வரப்படுகிறது. கதைசொல்லி, வாத்தியாரை நன்கு அறிந்தவர். அவரிடம் படித்தவர். சின்னத்துரை வாத்தியார் குடும்பத்தாரால் நிராகரிக்கப்பட்ட வேளையெல்லாம் அந்தக் குடும்பத்தாருக்குத் தெரியாமல் பல்வேறு உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்தவர்.

அவரின் மரணச் சடங்கில் நடக்கும் போலிப் பெருமைகளின் ஒரு காட்சியை இப்படி வர்ணிப்பார்.

"வாத்தியாரின் அலங்காரம் கண்கொள்ளாக் காட்சி, ஜிப்பா, அகலமான ஜரிகையுடன் கூடிய பட்டுவேட்டி, அதற்குச் சோடியான சால்வை, விசிறி மடிப்புக் கசங்காது நேர்த்தியாகச் சாத்தப்பட்டிருந்தது. இத்தகையதொரு ஆடம்பரக் கோலத்தில் வாத்தியாரை இன்றுதான் முதன்முதலாக நான் பார்க்கிறேன்."(பாவனை பேசலன்றி)

அவுஸ்திரேலியத் தமிழ்ச் சூழலில் தனித்துப்போன சின்னத்துரை வாத்தியார்போல இன்னமும் பலரை நாங்கள் காண்கின்றோம். இவ்வாறான கதைகளின் ஊடாக ஆசி. கந்தராஜா தமிழ்ச் சமூகத்தின் இழிந்த செயற்பாடுகளை விமர்சனத்திற்கு உட்படுத்துகின்றார்.

**புதிய களங்களின் புதிய அனுபவங்கள்**

"இனமானம்" நாயைப் பற்றிய கதையாக இருந்தாலும் அதற்கு ஊடாகச் சொல்லப்படுகின்ற விடயம் மிக முக்கிமானது. ஒரு நாய்க்கு இருக்கும் இனமானம் கூட இந்த மனிதர்களுக்கு இல்லாமற் போய்விட்டது என்பதைக் கூறும் கதைதான் அது.

"மனிதனிலும் பார்க்க நாய்க்கு இனமான உணர்வு அதிகம் என்ற புதிய ஞானத்தினை யாருக்குமே சொல்லமுடியாதவாறு சாம்பசிவம் இன்றும் தவித்துக் கொண்டு இருக்கிறான்." (இனமானம்)

ஒரு நாய்க்கு அந்த இனத்தின் இறைச்சியைப் போட்டாற்கூட சாப்பிடாதது மட்டுமல்ல. கொரியாவுக்குச் சென்று திரும்பிய கதைசொல்லி நாய் இறைச்சியைப் புசித்துவிட்டு வந்திருக்கிறார் என்ற உண்மையை உள்ளுணர்வால் அறிந்த அவரது வீட்டு நாயே அவரை விட்டு விலகிவிடுகிறது. இதனை மிகச் சிறப்பாகப் புனைவாக்கியிருப்பார்.

இக்கதையில் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் இறுதிநிலையில் போட்டிபோட்டிருந்த ஒப்பந்தத்தில் தான் பிறந்த நாட்டினரின் போட்டியை குறுக்குவழியில் முறியடித்து அவுஸ்திரேலிய நாட்டு நிறுவனத்திற்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கிறார் கதைசொல்லி. இறுதியில் அவரை ஒரு விடயம் உறுத்துகிறது அந்த நிறுவனத்தின் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை வெற்றி பெற்றால், பெறப்படும் வருமானம் போரினால் பாதிக்கப் பட்ட மக்களைச் சேருவதாக அறிகிறார். ஒரு நாய்க்கு இருக்கும் இனமான உணர்வுகூட தன் நாட்டின்மீது இல்லை என்ற உண்மை இக்கதையில் சொல்லப்படுகிறது. வேற்றுநாட்டு புதிய அனுபவமும் தாயக நினைவும் மனித இயல்பும் ஒரு புள்ளியில் இணைவதை இக்கதையிற் காணலாம்.

பிராணிகள் பற்றிய கதைகளை பல படைப்பாளிகள் எழுதியிருக்கிறார்கள். உமாவரதராஜனின் எலியம், சி. புஸ்பராஜாவின் பூச்சியும் நானும், ஞானசேகரனின் அல்ஷேசனும் ஒரு பூனைக்குட்டியும், தானா விஷ்ணுவின் பூனைகளைக் கொல்பவனின் இரவு, சித்தாந்தனின் சஹ்ரானின் பூனை முதலான சிறுகதைகள் ஈழச்சூழலில் நிகழ்ந்த ஆயுதக் கலாசாரத்தை குறியீடாகப் பேசுவனவாக அமைந்தவை. ஆனால், ஆசி கந்தராஜாவின் "எலிபுராணம்" அவ்வாறல்லாமல் சூழலுக்கு ஏற்றவாறு பிராணிகளின் இயல்புகளிலும் மாற்றம் ஏற்படும் என்பதைக் கூறும் கதையாக அமைந்துள்ளது. "பூனை எலி பிடிக்கும்" என்பதுதான் பொதுவழக்கு. ஆனால் அவுஸ்திரேலியச் சூழலில் பூனை மிகச் சாதாரணமாக இருக்க அதன்மீது எலிகள் துள்ளி ஏறிப் பாய்ந்து ஓடும் போது பூனை ஒரு பார்வை பார்த்துவிட்டுப் படுத்து விடுகிறது. அங்கு நாய்தான் எலியைப் பிடிக்கின்றது. இங்கு கதைசொல்லியை (கணவனை), மனைவி ஏளனம் செய்யும் பகுதி மிக நயமான சித்திரிப்பாக அமைந்துள்ளது. இதனை அவுஸ்திரேலிய தமிழ்க்குடும்பச் சூழலை அடிப்படையாக வைத்து புனைவாக்கியுள்ளார்.

"கள்ளக்கணக்கு" என்ற சிறுகதையில், ஒரு கருத்தரங்கின் நிமிர்த்தம் சீனா சென்றவர் அந்நாட்டின் தத்துவம் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார். அந்நாட்டவர்களும் அப்படித்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறார். ஆனால் தத்துவம் வேறு நடைமுறை வேறாக இருப்பதை அங்கு சென்றடைந்தபின்னர்தான் கற்றுக் கொள்கிறார். இதுபோன்ற பாத்திரங்களையும் களங்களையும் முத்துலிங்கத்தின் தொடர்ச்சியாக ஆசி. கந்தராஜாவும் தமிழுக்குக்கொண்டு வந்திருக்கிறார்.

**தாயகம் குறித்த நினைவுகள்**

தொகுப்பில் உள்ள பெரும்பாலான கதைகளுக்கு தாயகம் குறித்த மீள் நினைவுகள் மையச்சரடாக இருந்தாலும் அவை குறித்து மட்டும் எழுதப்பட்ட கதைகளாக "யாவரும் கேளிர்", "சூக்குமம்" ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். "பாவனை பேசலன்றி" கதையின் பெரும்பகுதி தாயகம் குறித்த நினைவோடையின் ஊடாகச் சொல்லப்படுவதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

"யாவரும் கேளிர்" என்ற கதை மலையகத் தமிழர் குறித்ததாக அமைந்துள்ளது. காலனிய ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தை வளப்படுத்திய மக்கள் இவர்கள். இலங்கையில் "இந்தியாக்காரர்" என்றும் இந்தியாவில் "சிலோன்காரர்" என்றும் பாகுபாடு காட்டப்பட்டு ஒடுக்கப்படும் கதை இங்கு சொல்லப்படுகிறது. இலங்கையில் பேரினவாதத்தின் தாக்குதல்களுக்கு ஆளாதலும் பின்னர் சிறீமா சாஸ்திரி ஒப்பந்தத்துடன் இந்தியா சென்றவர்கள் அங்கும் புறக்கணிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு சொல்லெணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். இரண்டு பக்கத்திலும் குடும்ப உறவுகள் சூழலின் கைதிகளாகி உயிரிழத்தல் இக்கதையில் கூறப்படுகிறது.



"சூக்குமம்" என்ற கதையில் சித்திரவதையின் ஊடாக ஒரு சந்ததியை அழிக்கும் கொடுமை சொல்லப்படுகிறது. அதனை மாடு, நாய் ஆகிய மிருகங்களுக்குச் செய்யும் குறிசுடுதல் முதலானவற்றின் ஊடாக ஆசிரியர் இணைத்துக் காட்டுகிறார். அதில் வரும் பாதிக்கப்பட்ட ஒரு பாத்திரத்தின் கூற்று பின்வருமாறு அமைகின்றது.

"மனிசனுக்கு மனுசன் விதையடிக்கிறதை நான் இங்கைதான் உடையார் பார்த்திருக்கிறன். இளம்பொடியளுக்கு இதைச் செய்யிற கொடுமையை இங்கை என்ரை கண்ணால கண்டன். இப்பிடியும் இனத்தை அழிக்கலாம் எண்ட எண்ணத்தோடதான் பொடியளை ஆமிக் காம்புக்கு அள்ளிக்கொண்டு வாறாங்கள்." (சூக்குமம்)

**நிறைவாக**

இங்கு கூறப்பட்ட எல்லாக் கதைகளிலுமே குறைந்த பட்சம் மானிட நேயமுள்ள ஒரு மனிதன் உலா வருகின்றான்

"ஒரு நீளும் கை கந்தராஜாவின் வார்த்தைகளுக்கு முளைத்து விடுகிறது. அந்தக்கை நம் தோளைத் தொடுகிறது. தொட்டு நம் கவனத்தை அவர் சொல்லும் விஷயத்தின் பக்கம் நகர்த்துகிறது. உணர்வு கொப்பளிக்க ஆனால் உரக்கச் சத்தம் போடாத நளினம் ஆசிரியருக்கு கைவந்து விடுகிறது. இதுதான் அவரைத் தனித்துவப்படுத்துகிறது. சாதாரண சொற்கள் சத்தியத்தில் நனைந்து விடுகின்றன. எனக்கு கதைகளைக் காட்டிலும் கதைக்குப் பின்னால் இருக்கும் ஆத்மா முக்கியமாகப் படுகின்றது." (பிரபஞ்சன்)

என்ற கூற்று கவனிக்கத்தக்கது.

மிகத் தெளிவான கதைக்கரு, வாசகரை ஈர்க்கும் இலாவகமான நடை, கோட்பாடுகளைப் போட்டுக் குழப்பாத நிலை, கனகச்சிதமான பாத்திர வார்ப்பு, கதைக்குத் தேவையான களவர்ணனை எல்லாம் சேர்ந்து ஆசி கந்தராஜாவின் கதைகளுடன் வாசகரை ஒட்ட வைக்கின்றன.

புலம்பெயர் இலக்கியம் என்பது பல்வேறு கூட்டு அனுபவங்களின் தொகுப்பாக ஈழச்சூழலுக்கு அறிமுகமாகின்றது. போரும் இழப்பும் அதற்குள்ளான வாழ்வும் மட்டுமல்ல. இன்னமும் எங்களிடம் இருந்து நீக்கமுடியாத எத்தனையோ இழிநிலைகளையும் சுமந்து கொண்டுதான் இந்த உலகம் எங்கும் தமிழ்ச் சமூகம் பரந்திருக்கின்றது என்பதையும் பல படைப்பாளிகள் மீளவும் மீளவும் நினைவுபடுத்தியபடியே இருக்கிறார்கள். இந்த அலைவுகள் என்றாலும் இந்த மனிதர்களில் மாற்றத்தைக் கொண்டுவந்தனவா என்றால் பெரும்பாலும் இல்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. அவற்றில் சாதியம் மிகத் தூக்கலாக இருந்தாலும் இத்தொகுப்பில் அது குறித்துப் பேசப்படவில்லை. வர்க்கம் குறித்துப் பேசப்படுகிறது. போலிப்பெருமை, பெண்கள் மீதான ஒடுக்குமுறை, பாலியல் சுரண்டல், ஆகியவற்றையெல்லாம் இத்தொகுப்பில் முதன்மையாகப் பேசுபொருளாக்கியுள்ளார்.

மனிதர்களை மனிதர்களாக மதிக்கின்ற பண்பு எங்களுக்கு வரவேண்டும். அறம் சார்ந்த விழுமியங்களை நாங்கள் ஓரளவாவது காப்பற்ற முயலவேண்டும் என்பதைத்தான் இக்கதைகள் சுட்டுகின்றன.

புலம்பெயர் இலக்கியமானது தாயக வாழ்வு குறித்த நினைவுகள் ஊடாகவும் புகலிட வாழ்வு குறித்த மாற்றங்கள் ஊடாகவும் பண்பாடு குறித்த எண்ணப்பாடுகள் ஊடாகவும் புதிய களங்களில் புதிய சமூகங்களுடனான இணைவின் ஊடாகவும் ஏராளம் கதைகளுடன் வந்து சேர்கின்றது. ஆசி. கந்தராஜாவின் "பாவனை பேசலன்றி" என்ற இத்தொகுப்பு அறம் வலியுறுத்தப்படவேண்டும். மானுட விழுமியம் போற்றப்படவேண்டும் என்பதை உரத்துக் கூறுகின்றது. இந்தப் பொதுமையான அம்சத்தை இத்தொகுப்பில் மட்டுமல்ல அவரின் ஏனைய கதைத் தொகுப்புக்களிலும் கண்டு கொள்ள முடியும். அந்த வகையில் புனைவு சார்ந்தும் புனைவு சாராமலும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் ஆசி. கந்தராஜா தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு சொத்து. அவரின் எழுத்துக்கள் இன்னமும் வற்றாத ஊற்றாக ஊறிக்கொண்டேயிருக்கும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனைகதை வெளியில் புதிய எல்லையைத்தொடும் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் பணச்சடங்கு



■ புலோலியூர் ஆ இரத்தினவேலோன்

அறிவியலுடன் உலகளாவிய தனதனுபவங்களையும் கலந்து வித்தியாசமான தளங்களில் நின்று புதிய புனைவு மொழியிலும், உத்திகளிலும் கதை சொன்ன முறைமையில் இன்றைய எழுத்தாளர்களுள் மிக முக்கியமானவராக முதற் சிலருள் வைத்துப் போற்றத்தக்கவராக ஆசி கந்தராஜா திகழ்கிறார். பூங்கனியியல், உயிரியல் தொழில்நுட்பத்துறைப் பேராசிரியர், அறிவியல் அறிஞர், விவசாயத்துறை ஆலோசகர், அனுபவமிக்க மின்னியல் ஊடகவியலாளர், எழுத்தாளர் என ஆசி கந்தராஜா பல் துறைகளிலும் பிரகாசிப்பினும் அவரை ஜனரஞ்சகப்படுத்தியது எழுத்தாளர் எனும் அவரது பேராளுமை தான் எனத் துணிந்து கூறலாம்.

எழுத்தாளர் எனும் வகையில் கதைஞராக, புனைவாளராக, நாவலாசிரியராக, கட்டுரையாளராக ஆசி செயலியற்றி வருகிறார். அறிவியலை குறிப்பாக பூங்கனியியலை முன்னிறுத்தி ஆசி புனையும் கட்டுரைகளில் அறிவியல் சார்ந்த தகவல்கள் அவருடைய சித்திரிப்பு ஆற்றலுடன் செம்பாதியாய் கலந்திருக்கும். ஆனால் அவரது புனைவுகளிலோ ஆசிரியரின் திறனானது அவரது சித்திரிப்பு ஆற்றலுக்கு அப்பாலும் பல தளங்களிலும் வியாபித்து மானுட உறவு நிலைகளையும் உணர்வுகளையும் அற்புதமாக வெளிப்படுத்துவதாக அமையும்.

புனைகதைஞராய் நின்று ஆசி படைத்த இலக்கியங்கள் சர்வ தேசிய மாற்றங்களின் போக்கிற் கேற்ப இயைந்திருந்து அவரை ஒரு தவிர்க்க முடியாத எழுத்தாளராக சிறுகதையைப் புத்தாக்கம் செய்யும் பிதாமகர்களில் ஒருவராக நிலைநிறுத்தின எனலாம். அந்த வகையில் "பாவனை பேசலின்றி" (2000) உயரப் பறக்கும் காகங்கள்(2003)போன்ற அவரது சிறுகதைத் தொகுப்புகளும் அதில் உள்ளடங்கியிருந்த கதைகளும் இலக்கியவெளியில் பெரிதும் பேசப்படலாயின. இந்த இரு நூல்களைத் தவிர 2018 இல் ஆசியின் தேர்ந்தெடுத்த சிறுகதைத் தொகுப்பானது "கள்ளக்கணக்கு" எனும் பெயரில் அறுவடையானது. "பாவனை பேசலின்றி" சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான இலங்கை அரசின் இலக்கிய விருதினைத் தனதாக்கியிருந்தமையும், "கள்ளக்கணக்கு" நூலானது தமிழக அரசின் உலகத் தமிழ்ச்சங்க விருது, திருப்பூர் தமிழ்ச்சங்க இலக்கிய விருது என இரட்டை விருதுகளைப் பெற்றிருந்தமையும் இவரது புனைவாற்றலுக்குக் கிடைத்த பேரங்கீகாரங்கள் எனக் கொள்ளலாம். அறிவியல் சார் தகவல்களையும் புனைவின் கூறுகளையும் கலந்து புதுவித மொழிநடையுடனும் அங்கதச் சுவையுடனும் தன் கதைகளை அவர் நகர்த்தும் பாங்கு அவருக்கேயுரியது. இப் பண்பினாலேயே பெரும்பாலான வாசகர்களாலும் விமர்சகர்களாலும் அ.முத்துலிங்கம் அவர்களுடன் ஆசி பொருத்திப் பார்க்கப் படுகிறார்.

ஆசியின் அல்புனைவுகள் அறிவியல் சஞ்சிகைகளுக்கு நிகரானவை. விஞ்ஞானியான போதிலும் வித்துவத்துடன் அவற்றினைப் புனையாது விவசாயஞ் செய்பவர்களாலும் அறிவியல் பிரஞ்ஞை அற்றவர்களாலும் புரிந்துணரத்தக்க வகையில் தனது கட்டுரைகளை அவர் வடிவமைத்திருப்பார். நீண்ட காலப் பயிர்களை குறுகிய காலத்துள் மகசூல் தரவைப்பது அயன மண்டலப் பயிர்களை அவுஸ்திரேலியாவிலும் பயிரிட்டு அறுவடை காண்பது ஒட்டு வைத்தும் பதிவைத்தும் பயிர்களில் மிகுந்த பலனைக் கொள்வது என பயிர்கள் தொடர்பிலான ஆராய்ச்சிகளையும், பூங்கனியியல் அபிவிருத்தியினையும் இலக்கியமாக்கி அதனைப் பாமரர் வரை கொண்டு சென்றதோடு அப் புதுவகை இலக்கியத்திற்கு முன்னோடியாகவும் தலைப்பட்டு நிற்பதே ஆசி கந்தராஜா பெறும் முக்கியத்துவத்திற்கான காரணம் எனலாம்.

மேற்படி வகையில் அமைந்த ஆசியின் கறுத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பான், செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்(2019) போன்ற அல்புனைவுக் கட்டுரைத் தொகுப்புகள் பரபரப்பாக விற்பனையாகியதும் திருப்பூர் இலக்கிய விருதுகளைத் தமதாக்கியதும் அவரின் அறிவியல் எழுத்துகளுக்கும் ஆராய்ச்சிக்கும் கிடைத்த பெருவெற்றியென தாராளமாகவே கூறலாம். இவரது குறுநாவல் முயற்சிகளும் விதந்துரைக்கற்பாலது. புலம் பெயர்விலான உணர்முறைமை மாற்றங்களையும் நிலைமாறும் வாழ்க்கை முறைகளையும் ஆசி என்னும் புலம்பெயர்ந்த இலக்கியவாதி குறுநாவல் போன்ற தன் புலப்பதிவுகள் வாயிலாக வெளிப்படுத்தும் முறைமை வெகு அற்புதமாகவே அமையலாயின. "திரிவேணி சங்கமம்" என்னும் குறுநாவல் இன்றளவும் மனதில் நிலைப்பதற்கு இத்தகு சித்தரிப்பு முறைமையே காரணமாகியது. புலம் பெயர்ந்து வாழும் விடலைகளின் விழுமியப் பிறழ்வினை அந்நவீனத்தில் உயிர்ப்புடன் ஆசி சித்திரித்திருப்பார். இக்குறுநாவலை உள்ளடக்கியதாக வெளிக் கொணரப்பட்ட "கீதையடி நீயெனக்கு" எனும் பனுவலும்2015 இல் திருப்பூர் இலக்கிய விருதினை வென்றிருந்ததும் மனங்கொள்ளத்தக்கது.

அறிவிப்பாளராக, தொகுப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக வானலைகளிலும் ஆசி எடுக்கும் அவதாரங்கள் ஒவ்வொன்றும் அபாரமானவை. இந்த வகையில் தாயகம் வானொலியில் இவர் தொகுத் தளிக்கும் "நிலாமுற்றம்" நிகழ்ச்சி நயந்து நோக்கற் பாலது. ரஷ்ய- உக்ரேன் யுத்தம் பற்றிய இவரது தொகுப்பொன்று சில தினங்களின் முன்னர் ஒலிபரப் பான தருணம், அது பலருள்ளும் பதியமாகியிருந்தது.

ஆசி கந்தராஜாவின் பத்தாவது நூலாக அண்மை யில் அறுவடையாகியிருக்கும் பணச்சடங்கு ஆசிரியரின் நான்காவது சிறுகதைத் தொகுதியாகும். பரந்துபட்ட விற்பனை வலையமைப்பினூடு எம்மவர் புத்தகங்களை வெற்றிகரமாக சந்தைப்படுத்தி வரும் குலசிங்கம் வசீகரனின் "எங்கட புத்தகங்கள்" பிரசுராலயமே பணச் சடங்கினை வெளிக்கொணர்ந்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இந்நூலில் பதினைந்து கதைகள் உள்ளடங்கியுள்ளன. இப்பதினைந்து கதைகளையும் ஒருசேர படித்த பின்னர் வாசகனுக்கு ஏற்படும் உணர் வானது உண்மையில் அபரிமிதமானது. தான் அனுப வித்த அல்லது உணர்ந்த புதுவகை அனுபவங்களை தனது பார்வையில் இருந்ததன் படியே கட்டமைத்து அதே வடிவத்துடனேயே வாசகனது தரிசனத்திற்கும் உள்ளாக்க வைக்க ஆசி போன்ற ஒரு சிலரால்தான் முடிகிறது. இத்தகு தன்மையினாலேயே "தமிழில் இந்தவகை எழுத்துகள் இதற்கு முன் இல்லை" என நாஞ்சில் நாடன் போன்றவர்களால் "ஆசி" க்கு அணிந்துரை நல்கி ஆசி வழங்க முடிகிறது.

இப்பதினைந்து கதைகளுள் மூன்று கதைகள் மிக முக்கியமானவை. இவை ஆசிரியரின் சொந்த மண்ணில் நிகழ்வனவாகப் புனையப்பட்டவை. மண்ணிற்கே உரித்தான உரையாடல்களும் சொற்களும் இயல்பா கவே இக்கதைகளில் வந்தமைந்து அணிசேர்த் துள்ளன. "இந்துமதியாகிய நான்", "சாது மிரண்டால்", "நரசிம்மம்" ஆகிய இம்மூன்றுள் முதலிரு கதைகளும் மணவாழ்வு மற்றும் பாலியல் பிறழ்வு தொடர்பானவை. "நரசிம்மம்" போரின் விளைவுகளையும் அதன் வழியான அதிர்வுகளையும் முன்நிறுத்திப் பேசுகிறது. நோய்க் கிருமியைத் தொற்ற வைத்து தன்னை வஞ்சித்த மனைவியை பழிவாங்கும் கணவனைப் பற்றிய கதை "சாது மிரண்டால்". அறிவியல் கற்ற எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் பலர் இருப்பினும் அவற்றினை புனைகதைகளில் புகுத்தி பொதுசனங்களிடம் எடுத்துச் சென்று சேர்க்கத் தக்க வல்லமையினை ஆசி போன்ற ஒரு சிலரே கொண்டிருக்கின்றார்கள். அத்தகைய பண்பினை அவர்கள் கொண்டு விளங்குவதாலேயே வாசகர்களாலும் விரும்பி வாசிக்கப்படுகிறார்கள்.

இளைஞர் இயக்கத்தில் இருந்தவர்களுக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் நிகழ்ந்த கதி பற்றிய ஒரு சிறுவெட்டுமுகமாக "நரசிம்மம்" கதை யினைக் கொள்ளலாம். புனிதவதி எனும் வனிதை, இராணுவ முகாம்களில் அனுபவித்த தொடர் பாலியல் பலாத்காரங்களையும் சித்திரவதைகளையும் அதன் விளைவால் தாய்மையுற்று பெற்றெடுத்த தன் குழந்தைக்கு ஒருவித வன்மத்துடன் பெயர் சூட்டுவதை யும் மனதை விட்டகலா முறையில் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். புதிய வாழ்விட வெளியில் நின்று கொண்டு, தான் பிறந்த மண்ணில் நிகழ்ந்த போரையும் அதன் பின்னால் நிகழ்ந்த இத்தகு வலிமிகுந்த சம்பவங்களை யும் ஆசி நோக்கிய முறைமையே இங்கு பிரதானமா கிறது. மறுபுறமாக ஆயுதக் கலாசாரத்தின் ஆதிக்கம் தனிமனித வாழ்வினை எவ்வாறு சின்னாபின்ன மாக்கியது, சீர்குலைத்தது என்பதனையும் மேற்படி கதை களில் துணிவுடன் ஆசிரியர் பதிவு செய்துள்ளமையும் நோக்கற்பாலது. புலம் பெயர்ந்து வாழும் காரணமாகவும் ஆசிக்கு இத் தைரியம் சாத்தியமாகி இருக்கலாம்.

புலம்பெயர் எழுத்தாளர்களில் ஒரு சாரார் ஈழத்து வாசகர்களுக்கு தம் படைப்புகளின் வாயிலாக புத்தனுப வங்களை தரிசிக்க வைப்பர். இன்னோர் வகையினர் வாழ்வியலின் பண்பாட்டுக் கூறுகளை விமர்சனத்துக் குள்ளாக்கும் வகையில் தமது பதிவுகளை முன்னெடுப் பர். தமது அனுபவ வளங்களையெல்லாம் புனை கதைக்குள் கொண்டு வந்து சேர்க்கும் முதலாவது வகை யினரையே வாசகர் பெரிதும் உவப்பர். புலம்பெயர்வின் பின்னரான பிறந்த மண் பற்றிய ஏக்கங்கள், கலாசாரம், பண்பாடு, பாரம்பரியங்கள் முதலானவைகள் அந்நியமாவதாலான சிக்கல்கள், புதிய நாடுகளில் வாழ்வினை முன்னெடுத்துச் செல்வதில் முகங் கொடுக்க வேண்டிய சவால்கள், தொழிற்தளப் பிரச் சினைகள், முதியோர் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் போன்றனவே பொதுவாக புலம்பெயர் இலக்கியங்களின் பாடுபொருளாகின்றன. ஆனால் இவற்றிற்கு அப்பாலும் சென்று அறிவுபூர்வமான அணுகுமுறை,

சிந்தனைகளால் தம் சிறுகதைகளை சுவாரசியம் மிக்கதாக சிருஷ்டிப்பதாலேயே ஆசி புலம்பெயர் எழுத்தாளர்களுள் எடுத்துப் பேசத்தக்கவராகிறார்.இந்த வகையில் இத்தொகுதியில் இடம் பெற்றிருக்கும் "எதலீன் என்னும் ஹோமோன் வாயு" எனும் கதை குறிப்பிடத்தக்க ஒன்றெனலாம்.

"வெயில் சூட்டுக்கு எலுமிச்சங் காயிலிருந்து எதலீன் வெளியேறியதாலேயே பிஞ்சு வெண்டிக்காய் முத்தியது" என்ற வேதியல் மாற்றத்தை ஒரு சிறுகதை யின் அடிநாதமாக, பாடுபொருளாக ஆக்கி கதை நிகழும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தினை கால் நூற்றாண்டு வரை நகர்த்தத் தக்க பக்குவமும் முதிர்ச்சியும் ஆசிக்கே உரித்தானது. அதுவே அவரது தனித்துவமுமாகிறது. "பணச்சடங்கு" எனும் கதையில் எம்மண்ணிற்கே உரிய பாரம்பரியம் எவ்வாறு அவுஸ்திரேலியா வரை வியாபித்திருக்கிறது என்பதை அங்கத நடையுடன் ஆசி நாசூக்காக சொல்லியிருப்பது நயத்திற்குரியது. 50 வயதைக் கடந்த தம்பதியினரிடையே "தவணை" தவறியதால் ஏற்படும் இயல்பான பதகளிப்பை நம்பகத் தன்மையுடன் சித்தரித் திருக்கிறது, "சாத்திரம் உண்டோடி" எனும் சிறுகதை. இவ்வாறாகவே அந்திமம், முகமூடி மனிதர்கள், வேதியின் விளையாட்டு போன்ற கதைகளிலெல்லாம் ஆசி தானாகவே நின்று கதை சொல்வதால் அவரது மெய்யனுபவங்கள் யாவுமே எமக்குரியதாகி எம் முன் தொற்றிக்கொள்கின்றன.

தொகுதியில் இடம்பெற்றிருக்கும் மூன்றாவது வகையான கதைகளின் களங்கள் ஈழத்து வாசகர் களுக்கு முற்றிலும் அந்நியமானவை. புதிதானவை. ஈரான்., லெபனான், ஜெருசலேம், ஜோர்தான் போன்ற தேசங்களை கதைமாந்தர் களமாகக் கொண்டு இந்த ஆறு கதைகளும் புனையப்பட்டுள்ளன. தொழிலின் நிமித்தமாக அந்நாடுகளுக்குச் சென்றிருந்த வேளை களில் அங்கு தான் அவதானித்தவற்றையும் அனுபவித்த வற்றையும் கருப்பொருட்களாக்கி காத்திரமானதாக ஆசி வடிவமைத்த கதைகள் அவை. இந்த வகையிலே அ.முத்துலிங்கத்தின் கதைகூறு முறையின் தொடர்ச்சியை ஆசி கந்தராஜா பேணி வருகிறார் எனலாம். "பல நாட்டு மனிதர்களின் அனுபவங்களுடன் விஞ்ஞான அறிவும் ஆசியின் கதைகளை அலங்கரிக் கின்றன" என ஓரிடத்தில் அ. முத்துலிங்கம் கூறியதனை இவ்விடத்தே மனங்கொள்ளல் தகும்.

இவ்வகைமையில் அமைந்த "ஆண் குழந்தை", "காதல் ஒருவனைக் கைப்பிடித்து", "ஆண்சுகம்", "எதிரியுடன் படுத்தவள்" , "கையது கொண்டு மெய்யது பொத்தி" , "தலைமுறை தாண்டிய காயங்கள்" ஆகிய ஆறு கதைகளுள்ளும் "ஆண்குழந்தை", "கையது கொண்டு மெய்யது பொத்தி" ஆகிய இரண்டும் கவனத் தைக் கோருவனவாக அமைந்துள்ளன. மகப்பேறின் மைக்கும் தொடர்ச்சியாக பெண் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் பெண்கள் அல்ல பொறுப்பாளிகள் என்ற அறிவியல் பூர்வமான உண்மையை "ஆண் குழந்தை" கதை மூலம் ஆசிரியர் உணர வைத்திருக் கின்றார். சிரிய யுத்தத்தால் இடம் பெயர்ந்து லெபனா னின் தலைநகரான பெய்ரூத்தில் சிக்குண்டு அல்லலுறும் இரண்டு குழந்தைகளின் கதையாக "கையது கொண்டு மெய்யது பொத்தி" திகழ்கிறது. சிறுவன் அலியையும் அவனது தங்கை பாத்திமாவையும் பொலிஸிலிருந்து தப்ப வைத்த அந்த இஸ்லாமியப் பெரியவர் கதை வாசித்து முடித்து நீண்ட நாட்கள் சென்றும் நினைவை விட்டு அகலாதிருந்தார். 15 கதைகளுள்ளும் மூச்சைத் திணற வைத்த கதை இது எனலாம்.

அந்திமம் முதல் பணச்சடங்கு வரை 15 கதைகளை உள்ளடக்கியுள்ள இப்பனுவலில் உச்சம் பெற்ற கதைகளாகக் குறைந்தது 5 கதைகளையாவது பரிந்துரைக்கத் தக்கதாயுள்ளது. அந்த வகையில்



பெரும்பாலான கதைகள் கனதியுடனமைந்து புனை கதை வெளியில் ஒரு புதிய எல்லையினை இப்பனுவல் தொட பாலம் அமைத்துள்ளன எனலாம். "எனது ஆக்கங்கள் எதையுமே நான் ஒரே முறையில் எழுதியது கிடையாது. அவை திரும்பத் திரும்ப எழுதப்பட்டவை. அவற்றில் உண்மை கலந்த நம்பகத்தன்மை உள்ளதா எனப் பார்க்கப் பட்டவை. ஏற்ற சொற்களைப் பாவித்து, முடிந்தவரை எளிமையான உரைநடையில் விவரிக்கப் பட்டவை" என நூலின் என்னுரையில் ஆசிரியர் ஆசி கந்தராஜா கூறியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. குறிப்பாக புனைகதை வெளியில் இன்று காலடி பதித்திருக்கும் இளம் எழுத்தாளர்கள் ஆசியின் இக்கூற்றினை ஓர் அறிவுரையாகக் கூட கொள்ளலாம்.

நூலிற்கு பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் வழங்கி யிருக்கும் நீண்ட முன்னுரையும் குறிப்பிடற்பாலது. புலம்பெயர் இலக்கியம் பற்றிய ஆய்வுகளை மேற் கொள்பவர்களுக்கு உசாத்துணையாகவல்ல இம் முன்னுரை நூலின் கனதிக்கும் ஓர் காரணமாகின்றது என்றால் அதுமிகையாகாது. தெளிவான அச்சுப் பதிப்பு, கண்களுக்கு இதமான எழுத்துரு, கனதியான தாள், கவர்ச்சியான பக்க வடிவமைப்பு முதலானவைகளும் புத்தகத்தினை மேலும் பெறுமதியாக்கியுள்ளன. இதே தரத்துடன் எங்கட புத்தகங்களை தொடர்ந்தும் குலசிங்கம் வசீகரன் வெளிக்கொணர வேண்டும்.

ஊரெல்லாம் சொல்லி பணச்சடங்கினை பேராசிரியர் ஆசி கந்தராஜா ஒழுங்குபடுத்தியுள்ளார். வாசகர்களும் விமர்சகர்களும் நிச்சயம் கோலாகலமாக அதைக் கொண்டாடுவார்கள்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் அறிவியல் பேசும்

## “செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்”

பூங்கனியியல், உயிரியல் தொழில்நுட்பத்துறைப் பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் “செல்லப் பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்” ஒரு அறிவியல் புனைவுகளை உள்ளடக்கிய அற்புதமான படைப்பு. பேராசிரியரும் எழுத்தாளரும் போட்டி போடும் ஓர் அறிவியல் நூலாக வெளிவந்த இந்நூலினை இரு பிரிவுகளாக வாசகர்கள் வகைப் படுத்தலாம். ஒன்று தாவரவியல் சார்ந்த அறிவியற் புனைவுகள், இரண்டாவது பிறதேசங்களின் வரலாற்றுப் பின்னணிகள் சார்ந்த அறிவியற் புனைவுகள். இவை இரண்டுமே பல புதிய தகவல் களைச் சொல்வதோடு வெளி நாட்டவர்கள் சிலரின் வரலாற்றுப் பின்னணிகள், அரசியல், வாழ்வியல், கலாசார முறைகளுடனான ஒரு புதிய அனுபவத்தையும் வாச கனிடத்தில் விட்டுச் செல்கின்றது. கதைவடிவத்தைக் கொண்ட புனைவுக் கட்டுரைகளாக அமைந்த இந் நூலை இன்னுமொரு கோணத்தில் பார்க்கும்பொழுது சில புனைவுகள் தான் பிறந்த மண்ணையும், நேசித்த மக்களையும், தாவரங் களையும் சம தளத்தில் வைத்து எழுதப்பட்டவையாகவும் இன்னும் சில புனைவுகள் வெளிநாடுளை மையப்படுத்தி அவர்களைப்பற்றிப் பேசுபவையாகவும் அமைந் துள்ளன. இவற்றினூடாக எம்மவர் களின் பரம்பல் உலகநாடுகளில் எப்படியெல்லாம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்ற ஒரு தகவலையும் மறைமுகமாகத் தருகின்றது. கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்ற கூற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பல பாத்திரங்களை வடிவமைத்துள்ளதும் இந்த நூலின் சிறப்பம்சமாகும்.

தெருவிற்குத்தெரு ஆங்கில மருத்துவங்கள் நிறைந்துள்ள எமது தேசத்தில் அன்று ஊருக்கொரு பரியாரியார்கள் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதுகளுக்கு முன்பு பரம்பரையாக வைத்தியம் செய்தவர் களையே அவ்வாறு அழைத்திருந்தனர். அவர்களால் வழங்கப்பட்ட நோய் நிலைபற்றிய கடிதங்களுக்கு அரச அலுவலகர்களுக்கு மருத்துவ விடுமுறை வழங்குமளவிற்கு அவர்களின் செல்வாக்கு இருந்துள்ளது. சூனியம், செய்வினை என்ற போர்வையில் ஊரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பல சம்பவங்களையும் விபரித்து அறிவியல் வளர்ச்சிக்கான ஒப்பீட்டுச் சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளாக சில கட்டுரைகள் அமைந்துள்ளன.

ஒவ்வொரு துறையிலும் விளக்கங்களை அறியாத சில திரிபுபட்ட நம்பிக்கைகளுக்கும் அல்லது மிகைப்படுத்தப்பட்ட நம்பிக்கைகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும் துறைசார்ந்த விளக்கங்களை வழங்கி எமது பகுத்தறிவுச் சிந்தனையை மெருகூட்டும் வகையில் மிக நுணுக்கமான கட்டுரைகளும் இங்கு தரப்பட்டுள்ளன. காய்க்காத பலாமரத்தைக் கோடாரிப் பின்புறத்தால் அடித்தால் காய்க்கும், அதிலும் நடு இரவில் நிர்வாணமாக பலாமரத்தை கோடாரியால் அடித்தல் அதிக பலனைக் கொடுக்கும், மரவள்ளியோடு இஞ்சி உண்பது விசத்தைத் தோற்றுவிக்கும் போன்ற நம்பிக்கைகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணங்களாகக் கூறலாம். இவை அனைத்தும் எமது மொழியில் இருப்பது எமக்கு பேராசிரியர் செய்த பெரும் பணியாகவே அமையும். அனைத்துக் கட்டுரைகளிலும் செவியை நிறைக்கும் ஊர் மொழிவழக்குகள் அவரது பூர்வீக மண்வாசத்தை எம்முள் வீசிவிட்டுச் செல்கின்றன.

தனது அறிவியல்சார் சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு எடுத்துவரப்பட்டுள்ள பாத்திரங்களின் நேர்த்தியும், கேள்வி பதில் போன்ற உரையாடல்களும் ஒரு சிறந்த உத்தியாக அடையாளப் படுத்தமுடியும். பெரும்பாலான தாவரவியல்சார் கலைச்சொற்களுக்கு ஆங்கிலப் பெயர்களையும் தந்துள்ளமை வாசகனுக்கான இன்னொரு தேடற் பரப்பையும் திறந்து விடுகின்றது. "செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்" என்ற முதலாவது கட்டுரை தான் பிறந்த ஊரைப்பற்றிய சிறப்புக்களையும் மட்டுவிலில் விளையும் முட்டிக் கத்தரிக்காயையும் அறிவியல்ரீதியாக அலசும் கட்டுரையாக அமைந்துள்ளது. இதில் சில பிரதேசங்களின் அடையாளமாக இருந்துவந்த தாவரங்கள் குறிப்பாக காய்கறிகள், பழங்கள் தற்பொழுது அவற்றின் விசேட தன்மைகளையும் தனித்துவத்தையும் இழந்துவருகின்றன என்ற அபாய மணியை அடிக்கின்ற கட்டுரையாக அமைகின்றது. மரபணு மாற்றங்கள், முளைதிறன் கால எல்லை, பயிரிடும் மரபுகள், உரு மாற்றமும் நிறமாற்றமும் என்று நீண்டுசெல்லும் இக்கட்டுரை கைவிட்டுப்போகும் பாரம்பரிய விவசாய முறைகளில் புதைந்திருந்த தாவரவியல்சார் அறிவினை இலகுவாக தெளிவுபடுத்தியுள்ளது. இக் கட்டுரை எனது சிறுபராயத்தில் கார்பிடித்து யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி ஆலயத்திற்கு வந்து முட்டிக் கத்தரியோடு சமைத்து உண்டு, மோதகத்திற்கு சண்டையிட்டு மகிழ்ந்த காலங்களின் நினைவுகளை மீட்டுத்தந்தது. தற்பொழுது அதற்கு அருகில் வசித்தும் அங்கு போவதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்துவிட்டன. நூலாசிரியர் குறிப்பிட்டதுபோல் எமது மண்ணின் பல தனித்துவங்களை நாம் தொலைத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

ஒட்டுக்கன்றுகள் என்ற புனைவுக் கட்டுரையில் ஒட்டுத் தேசி மரத்தையும் செய்வினை செய்வதையும் வைத்து ஒரு அறிவியல் விளக்கத்தினூடாக எமது கண்களைத் திறந்துள்ளார். வெட்டிய தேசிக்காயை வீட்டு வாசலில் கண்டால் செய்வினை என்று அஞ்சும் நிலை இன்னமும் எம்மிடையே இருக்கின்றது. அறிவியல் வளர்ச்சி என்பது எமது மூடநம்பிக்கைகளிலிருந்து எம்மை விடுவித்து பகுத்தறிவோடு வாழவைக்கின்றது. இந்த நூலும் இலக்கியப் பணியைவிட அறிகைசார் பணியையே அதிகம் செய்கின்றது. பரியாரியார், செய்வினை சூனியம் செய்வோர் தாம் சார்ந்த பிரதேசத்தையே தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்த காலம் ஒன்று இருந்தது. பேயை ஏவிவிடுதல் என்பதும் இன்னொருவகை பயமுறுத்தல். அறியாமையில் அல்லது மூடநம்பிக்கைகளில் வாழ்ந்த மக்கள் ஒருவிதமான அடிமைத்தனத்தில் அல்லது அச்சத்துக்குள் கட்டுண்டுகிடந்த காலத்தினை தனது நகைச்சுவை ததும்பும் பேச்சுவழக்கிலும் துறைசார்ந்த கலைச்சொற்களாலும் விளக்கியுள்ளார்.



மரங்களும் நண்பர்களே என்ற புனைவு வேதவல்லி அக்காவிற்கும் சுந்தரமூர்த்தி அண்ணனுக்கும் இடையிலுள்ள காதலையும் அவர்களுக்குள் இருந்த தாவரவியல் அறிவை எப்படி நூலாசிரியர் அவர்களிடம் பெற்றுக்கொண்டார் என்பதையும் விளக்குகின்ற ஒரு சுவாரசியமான புனைவு. தாவரங்களைப் பற்றிய புனைவுகளாயினும் அதில் இடம்பெறும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் மிகவும் காத்திரமானவை. வேதவல்லி அக்காவிடம் கற்ற அனுபவப் பகிர்வு நான் உயிரியல் பிரிவில் உயர்தரத்தில் படிக்கும்போது அயலில் உள்ள வேம்படி மகளீர் கல்லூரியின் தலைமை மாணவ முதல்வியிடம் கற்ற அனுபவத்தையும் பின்பு இடப்பெயர்வால் தென்மராட்சிக்கு நகர்ந்து அங்கு எனது நண்பனின் அக்காவிடம் தாவரவியல் கற்ற அனுபவத்தையும் மீட்டுத்தந்தது. எமக்கு இப்படியொரு கற்றல் வாய்ப்போ சூழலோ அமையவில்லையே என்று ஏங்கும் விதத்தில் தன்னைச் சுற்றி ஒரு அறிவாற்றல் உள்ள அயலவர்களைக் கொண்டிருந்ததும் நூலாசிரியரின் கல்விச் சாதனைகக்கு உரமிட்டிருக்கும் என நம்பமுடிகின்றது.

வீரசிங்கம் பயணம் போகிறார் என்ற கட்டுரை லெபனானின் வரலாற்றையும், அரசியலையும் அவர்களின் பொருளாதாரத்தையும் விளக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. லெபனான், துருக்கி, சிட்னியின் உணவுப் பழக்கங்களையும், லெபனானில் பணிப்பெண்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அவர்களின் நாடு மற்றும் நிறங்களை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கப்படுவதையும் விளக்கியுள்ளார். அங்குள்ள மதங்களின் பின்னணிகளும் அவர்களின் பொருளாதார ஆதிக்க நிலையையும் ஒரே கட்டுரைக்குள் அடக்கி லெபனானியர்களோடு வாழ்வதுபோன்ற அகக்காட்சியையும், அனுபவத்தையும் உணரும் வகையில் தரநிறைவோடு கட்டுரையை அமைத்துள்ளார்.

விலாங்கு மீன்கள் என்ற புனைவுக் கட்டுரை பரமலிங்கம் என்ற பாத்திரத்தினூடாக "அபோர்ஜினி" என்று அழைக்கப்படும் ஆஸ்திரேலிய ஆதிவாசிகளைப் பற்றி ஆராய்கின்றது. பூங்கனியியல், உயிரியல் தொழில் நுட்பத்துறைப் பேராசிரியர் வரலாற்றை துல்லியமாக விளக்குவது ஆச்சரியத்தைத் தந்தபோதும் அவரது பிற நாடுகளுடனான உறவுநிலை மேம்பாட்டை எடைபோட வல்ல கட்டுரைகளாகவும் இவை அமைந்துள்ளன. பல்வகைத் திறனும் திறனாய்வுப் பண்பும் பரவிக்கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



கட்டுரைகளில் இக்கட்டுரை தனித்துவமானது. இதுவரை கலப்பினத் தாவரங்களைப் பேசியவர் இக்கட்டுரையில் கலப்பின மனித குலத்தின் குழந்தைகளையும் அடையாளப்படுத்துகின்றார். ஆதிவாசிகளின் வேறுபட்ட இன வர்க்கங்கள், சனத்தொகை ஒப்பீடு, அவர்களின் வாழ்வாதாரம், கலாசாரம், ஓவியங்கள், வேட்டையாடும் கருவிகள் என அவர்களின் வாழ்வை வெளியுலகிற்கு புடம்போட்டுக்காட்டும் கட்டுரையாக அமைந்துள்ளது. அவர்களுக்கு நடைபெற்ற அடக்குமுறைகளும், பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகளும் ஒரு கலப்பினத்தைத் தோற்றுவித்த துன்ப வரலாற்றை ஆதிவாசிகளின் தலைவரால் சொன்ன முறை மனவெழுச்சியை எமக்குள் ஏற்படுத்தத் தவறவில்லை.

எம்.பி.கே என்ற கட்டுரை வன்னி நிலப்பரப்பின் விவசாயத்தைப் பேசுவதாக அமைந்துள்ளது. தனது படசாலை நண்பனுக்கு தாவரவியல் தொழில்நுட்ப உதவிக்காக அவருடன் உரையாடும் படலத்தினூடாக தனது பாணியில் உரம்பற்றிய விளக்கத்தைக் கொடுக்கின்ற முறை ஒரு இரசாயன வகுப்பறையின் அனுபவத்தைத் தருவதாகவே அமைந்துள்ளது. மூலகங்களும் மண்ணிற்கு ஆற்றும் பணியும், அவற்றைப் பாவிக்கும் அளவு, நெல் இனங்கள் என நீளும் இக்கட்டுரை தாவரத்தை நேசிக்கக் கற்றுத்தருகின்றது. கிளி வளர்த்தேன் பறந்துவிட்டது, அணில் வளர்த்தேன் ஓடிவிட்டது மரம் வளரத்தேன் இரண்டும் வந்துவிட்டது என்ற அப்துல் கலாமின் கூற்றை நினைவூட்டியது இக்கட்டுரை.

மைனாக்கள் என்ற கட்டுரை காவா என்ற ஒருவகை போதைகொண்ட பானத்தைப்பற்றிக் கதைப்பதாக ஆரம்பித்து இந்திய வம்சாவழிகளின் வருகையையும் அதன் பின்னணியையும் விளக்கும் இந்திய வம்சாவழி இளைஞனுடனான உரையாடல் மிகவும் அற்புதமானது. பிரித்தனியர்கள் கரும்புத் தோட்டத்திற்கு கூலியாகக் கொண்டுவந்தவர்களே இந்த இந்தியர்கள் என்பதையும் அதைப்பற்றிய பாரதியின் பாடலையும் நினைவூட்டி அடிமைத்தனங்களின் மறைக்கப்பட்ட ஒரு வரலாற்றை ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எழுதியுள்ளார். பல்வேறு மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் தமக்கென "பிஜி ஹிந்தி" என்ற மொழியை உருவாக்கி தாய் நாட்டுக்குச் செல்வதையே தமது கனவாகக்கொண்டு வாழும் அந்தச் சமூகத்தின் வாழ்வியல் மாற்றங்களை எடுத்தியம்பிய விதம் எமக்கிருக்கும் உலகறிவின் சொற்ப நிலையைக் காண்பிக்கின்றது. கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்பதையே இவரது கட்டுரைகள் எமக்கு புலப்படுத்துகின்றன.

பதிப்புரையினை ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனும், முன்னுரையை தமிழ்த்துறைத் தலைவர் பேரதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வ.மகேஸ்வரனும், வாழ்த்துச் செய்தியை இந்தியாவைச் சேர்ந்த வாஸந்தியும் எழுதியுள்ளனர். பன்முக ஆளுமையுள்ள பேராசிரியர் உலகளாவிய அறிவினையும் தனது பட்டறிவினால் தெளிந்தவற்றையும் இந்த நூலின் வாயிலாக எமக்கு வழங்கியுள்ளார். நூலினைப் படித்து முடிக்கையில் தாவரவியல் அறிவோடு, ஆய்வுணர்வோடும் பல நாடுகளிற்கு பயணித்துவந்த அனுபவத்தைப் பெறமுடிகின்றது. நூல்கள் அறிவு, அனுபவத்தின் மிகப் பெரியதொரு பகிர்தல் வெளி என்பதையும், பகிர்தலே அறிவை வளர்க்கும் வழி என்பதையும் உணர்த்தும் ஒரு படைப்பாக இந் நூல் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பச்சைமண்ணும் சுட்டமண்ணும்

ஆசி கந்தராஜா

-1-

இந்த முறையும் அப்படித்தான்!

பல்கலைக்கழக பணி நிமிர்த்தம் பயணிக்கும் நாடுகளைப்பற்றி முன்னரே அறிந்துகொள்வது அவரின் வழக்கம். தொழில்முறை வேலைகளுக்கு அப்பால், அந்நாட்டு மக்களோடு மக்களாக நெருங்கிப் பழக இது பெரிதும் உதவியிருக்கிறது.

ஆபிரிக்க நாடொன்றுக்கான சுந்தரமூர்த்தியின் முதலாவது பயணம் இது. எதியோப்பியாவை நோக்கிய பறப்பு. கவனமாய்ப் போய்வாங்கோ எனப் பலமுறை சொல்லி, தந்திவளவு வைரவருக்கு வடைமாலை சாத்துவதாக நேத்தி வைத்து, மனைவியும் பிள்ளைகளும் விமான நிலையத்தில் வழியனுப்பிவைத்தார்கள்.

காற்றழுத்தப் பிரச்சனைகள் ஏதுமின்றி விமானம் ஒரேசீராகப் பறந்துகொண்டிருந்தது. அந்த விமானத்தில் சின்னத் திரைகள் இல்லாததால், பிரதான சாப்பாடு பரிமாறி முடிந்ததும் விளக்குகளை அணைத்து நடுவிலிருந்த பெரிய திரையில் ஆங்கிலப் படமொன்றை ஓடவிட்டார்கள். முன்னரே அவர் அதைப் பார்த்திருந்ததால் இருக்கையைச் சரித்து வசதியாக அமர்ந்து, எதியோப்பியா பற்றித் தான் வாசித்த கட்டுரை ஒன்றின் மீது சிந்தனையைப் படரவிட்டார்.

உலகமெங்கும் குடியேற்ற நாடுகளை நிறுவி, தமது பொருளாதார வளங்களைப் பெருக்கிக்கொண்ட ஐரோப்பிய நாடுகள் செய்த அடாவடித் தனங்களினால், அவர்கள் அடக்கியாண்ட நாடுகளில் ஏற்பட்ட சோகங்களுக்கு, எதியோப்பியா ஓர் எடுத்துக்காட்டு என்பதைக் கட்டுரை விளக்கியிருந்தது. இதன் பின்னணியில், எதியோப்பியாவில் நிலவிய இனப் பிரச்சனைக்கும் இலங்கையில் இன்றும் தீர்க்கப்படாத இனப்பிரச்சனைக்கும் உள்ள ஒருமைப்பாடு, சுந்தரமூர்த்தியின் மனதில் விரிந்தது.

-2-

அன்று சனிக்கிழமை!

அயலிலுள்ள அராபிய நாடுகள் போலல்லாமல், எதியோப்பியாவின் சனிக்கிழமையும் விடுமுறை நாள். காலை உணவை முடித்ததும், சற்றே உலாத்த வேண்டும் போலத் தோன்றியது. வீதிக்கு வந்தார் சுந்தரமூர்த்தி. அது, எதியோப்பியாவையும் கென்யாவையும் இணைக்கும் நீண்ட நெடுஞ்சாலை. உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ், சாலை அமைக்கப்பட்டதாகவும் சாலையின் தூரம், ஆரம்பித்த நிறைவு செய்த தேதிகள், செலவு செய்த தொகை ஆகிய சகல விபரங்களும் தாங்கிய விளம்பர பலகையொன்று சாலையோரம் வைக்கப்பட்டிருந்தது. எதியோப்பியாவின் நெடுஞ்சாலைகளிலும் வீதிகளிலும் இப்படியான விளம்பரப் பலகைகளையும், எயிட்ஸ் விழிப்புணர்வு தட்டிகைகளையும், உதவி வழங்கும் உலக நிறுவனங்கள், தங்கள் பெயர்களுடன் சென்னை நகரில் அரசியல் தலைவர்களின் டிஜிற்றல் பனர்கள் வைப்பது போன்ற மோஸ்தரில் அடுத்தடுத்து வைத்திருந்தார்கள். எதியோப்பியா வறிய நாடு என்றும், பிற நாடுகளின் தயாளத்திலே அது வாழ்கின்றது என்றும் அவை மறைமுகமாக முரசறைகின்றனவோ என்று, சுந்தரமூர்த்தி நினைத்ததும் உண்டு.

சுந்தரமூர்த்தி தங்கியிருந்த ஹோட்டல், நெடுஞ்சாலையைக் கடக்கும் குறுக்கு வீதியில், அந்தக்குறுக்கு வீதியையே முகப்பாகக் கொண்டு அமைந்திருந்தது. நெடுஞ்சாலையில் யப்பானிலிருந்து இறக்குமதியான ஆடம்பர வாகனங்கள் அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்தன. பாதசாரிகள் சர்வசாதாரணமாகக் குறுக்கும் நெடுக்குமாக நெடுஞ்சாலையைக் கடந்தார்கள்.

ஹலோ சேர்! என்னை ஞாபகம் இருக்கிறதா? எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவாறே வீதியில் நின்ற எதியோப்பிய இளைஞன் ஒருவன் புன்னகைத்தான். கண்ணியமாக உடையணிந்து, அவன் சரளமாக ஆங்கிலம் பேசினான். வேறு மொழிகளும் தெரியும் என்பதைக்காட்ட ஜேர்மன், இத்தாலி மொழி களிலும் ஆங்கிலத்தில் கூறிய கருத்தைப் பேசிக் காட்டினான்.

நான்தான் நேற்று இரவு உங்களுக்கு ஹோட்டலில் உணவு பரிமாறினேன். நான் எட்வேட், என்னைத் தெரிய வில்லையா? எட்வேட் மெக்கோனன் எனத் தன் முழுப் பெயரையும் சொன்னான்.

சுந்தரமூர்த்தி தங்கியிருந்த ஹோட்டலில் உணவு பரிமாறுபவர்கள் அனைவரும் பெண்கள். இவன் பொய் பேசு கிறான் என்று தெரிந்தும் அவனைப் பார்த்து புன்னைகைத் தார். இவனைப் போன்றவர்கள் ஏமாற்றுப் பேர்வளிகள். இவர்களிடம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். இருப்பினும் அவனது மொழிப்புலமையும், பல்வேறு மொழி களைப் பேசிய லாவகமும் அவனைக் கவனிக்க வைத்தன. சுந்தரமூர்த்தியின் புன்னகையை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு, வெகு இயல்பாக எதியோப்பிய கலாசாரம் பற்றி ஆங்கிலத்தில் பேசினான். கறுப்பை மூடி, லேசாக வெள்ளை நிறம் பூசினால் கலவை நிறம் ஒன்று தோன்றுமே. அத்தகைய ஒரு அரிதான நிறத்தில் அவன் அழகாகத் தோன்றினான். எதியோப்பாயர்கள் மிக அழகானவர்கள். ஆபிரிக்க, அராபிய, இந்திய சங்கமத்தில் பல்வேறு மனித சாயல்களை அங்கு காணலாம். எடுப்பான மூக்கும், தொந்தி இல்லாத இறுக்க மான நெடிய உடல்வாகும் ஒருவகைக் கவர்ச்சியை ஏற்படுத் தும். இதன் காரணமாகத்தான் குழந்தைகள் இல்லாத பல ஐரோப்பிய தம்பதிகள் எதியோப்பிய குழந்தைகளைத் தத்தெடுக்க எதியோப்பியா வருவார்கள்.

இன்று சனிக்கிழமை, விடுமுறைதானே? கேளிக்கைகள் நிறைந்த உல்லாசக் கிளப்புகள் இங்கு நிறையவே இருக்கின்றன. எதியோப்பிய நடனமும் உண்டு. மார்பை குலுக்கி ஆடும் எதியோப்பிய நடனம், மிகவும் பிரபல்யமானது. போவோமா? எனக்கேட்டு, எட்வேட் தன் தொழிலில் சிரத்தையாக இருந்தான். இவனைப் போன்றவர்கள், இரவு விடுதிகளாலும், கேளிக்கை விடுதிகளாலும் வாடிக்கையாளர்களை அழைத்து வருவதற்கென கொமிஷன் அடிப்படையில் ஏஜண்டுகளாக அமர்த்தப்பட்டிருப்பவர்கள். நாம் கொஞ்சம் அசமந்தமாக இருந்தாலும் இந்த ஏஜெண்டுகள் ஏமாற்றக் கூடியவர்கள் என்பதையும், அவர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுவதுதான் தற்பாதுகாப்புக்கான சூத்திரம் என்பதை யும் சுந்தரமூர்த்தி ஏற்கனவே அறிந்திருந்தார். ஆனாலும் இவர்களிடம் மிக அவதானமாக நடந்துகொண்டால் நிறையவே தகவல்களையும் புதினங்களையும் அள்ளிக் கொள்ளலாம் என்றும் கேள்விப்பட்டிருக்கிறார்.

எட்வேட் தன் தொழிலுக்கு புதியவன் என்பதை அவனுடன் பேசிய கொஞ்ச நேரத்தில் சுந்தரமூர்த்தி புரிந்து கொண்டார். கற்றுக்குட்டியான அவனிடம் ஏமாறமாட்டேன் என்கிற நம்பிக்கை வந்தது.

கோப்பி குடிப்போம் வா, என அவனை அழைத்தார். அவனுக்கு மகிழ்ச்சி. அருகிலிருந்த கோப்பிக்கடை ஒன்றைக் கண்டுபிடித்து அதற்குள் நுழைந்தார்கள். எதியோப்பியாவின் மலைப்பகுதிகளிலே நிறைய கோப்பிச் செடிகள் பயிரிடப் படுகின்றன. அங்கு விளையும் கோப்பி பற்றி எதியோப்பியர் கள் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள். எதியோப்பியா ஸ்பெஷல் கோப்பி என்ற விளம்பரங்களுடன் வீதியோரம் பல கடைகள் வியாபாரம் செய்கின்றன. கண் அசைவால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்கும் எதியோப்பிய அழகிகள் இங்கும் தமது வாடிக்கையாளர்களுக்காக காத்திருப்பார்கள். காலை வேளைகளில் கோப்பிக் கடையில் கூட்டம் அதிகம் இருப்பதில்லை. கோப்பிக்கடையின் மூலை யொன்றில் இருவரும் வசதியாக அமர்ந்துகொண்டார்கள். அவனுடன் கேளிக்கை விடுதியொன்றுக்கு சுந்தரமூர்த்தி செல்லாத ஏமாற்றம் அவன் முகத்தில் தெரிந்தது. அன்றைய அவன் சீவியம், அவனுக்கு கிடைக்கும் கொமிஷனில் தான் தங்கியுள்ளது. அவரிடம் எந்தவித பிரயோசனமும் இல்லை என்றெண்ணி, அவரைக் கழற்றிவிட எத்தனித்தான்.

ஆயிரம் "Birr"(எதியோப்பிய பணம்) எடுத்து, இதை வைத்துக்கொள், என்றார்.

சேர், என ஏதோசொல்ல அவதிப்பட்டான். வார்த்தை கள் தொண்டையில் அடைத்துக் கொண்டன. ஒருவகைத் திணறல். அவனுடைய செயலுக்கான காரணம் அவருக்குப் புரிந்தது. அவனுக்கு அவர் கொடுத்த பணம் அவனது ஒருவார ஊதியம். டொலரிலே செலவு செய்து பழகிய அவருக்கு அது பெரிய தொகையல்ல. உண்மையாகவே இந்தப் பணம் எனக்கா? கேளிக்கை விடுதிக்கும் வரமாட்டேன் என்கிறீர் களே? என, ஒருவித சந்தேகத்துடன் ராகம் இழுத்தான்.

உனக்குத்தான், உன்னுடன் சாவகாசமாகப் பேச வேண்டும். எடுத்துக்கொள் என்றார் சுந்தரமூர்த்தி. நன்றியுடன் அவரைப் பார்த்து சலாம் வைத்தபோது அக்கண்களிலே சுரந்து நின்ற கண்ணீரை சுந்தரமூர்த்தி அவதானிக்கத் தவறவில்லை.

-3-

எதியோப்பிய மலைப் பிரதேசத்தின் எரிற்றியா எல்லை யில் அமைந்த அழகான கிராமமொன்றில் எட்வேட் பிறந்து வளர்ந்தவன். இருப்பினும், படித்ததெல்லாம் கிராமத்தை ஒட்டிய Axum என்ற நகரத்தில். கிறீஸ்தவ மிஷனரி பாடசாலை யொன்றில், சரித்திரம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை முதன்மைப் பாடங்களாகவும் ஜேர்மன், லற்றின், இத்தாலி ஆகிய மொழிகளைத் துணைப் பாடங்களாகவும் கற்றதாகச் சொன்னான்.

சரித்திரரீதியாக, எதியோப்பியா அபிசீனியா (Abyssinia) என்று அழைக்கப்பட்டது. ஒருகாலத்தில் அண்டை நாடான எரிற்றியாவை இத்தாலியர் தமது குடியேற்ற நாடாக்கினர். அங்கிருந்து எதியோப்பியாவை எரிற்றியாவுடன் இணைத்துக் கொள்ள இத்தாலி முயன்றாலும் அது முழுதாக நிறைவேற வில்லை. இவை பற்றிய பூரண எதியோப்பிய வரலாற்று அறிவு அவனுக்கு இருந்ததை, அவனுடன் பேசிய குறுகிய நேரத்தில் சுந்தரமூர்த்தி தெரிந்துகொண்டார்.

எரிற்றியா தனிநாடாவதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ, அவை அனைத்தும் இலங்கை ஈழப்பிரச்சினை யிலும் உண்டு. எதியோப்பிய புத்திசாலி இளைஞன் ஒருவன் இதை எப்படிப் பார்க்கிறான் என்பதை தெரிந்துகொள்ளவே அவனிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார். இல்லையேல் விலைமாதர்களுக்கு வாடிக்கை பிடிக்கும் ஒரு ஏஜெண்டிற்கு ஆயிரம் "Birr" பணத்தை விட்டெறிந்திருக்க மாட்டார்.

எதியோப்பியாவில் பெரும்பான்மையாகப் பேசப்படும் மொழி Amharic. இதுவே எதியோப்பிய அரசால் அங்கீகரிக் கப்பட்ட தேசிய மொழி. இலங்கையில் சிங்கள மொழிபோல. எரிற்றியாவில் Tigrinya என்கிற மொழியே பொது வழக்கில் உண்டு. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்தாலிய ஆட்சி அதிகாரத்தின் கீழிருந்த எரிற்றியா, இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர், பிரித்தானியர் களின் நிர்வாகத்துக் குரிய நிலப் பரப்பாக்கப்பட்டது எனத் தான் வாசித்த தகவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியலுடன் பொருத்திப் பார்த்தார் சுந்தரமூர்த்தி.

இலங்கையின் தமிழ்ப்பகுதிகள் எவ்வாறு 1832ம் ஆண்டு பிரித்தானியரின் நிர்வாக வசதிக்காக சிங்கள பகுதிகளுடன் இணைக்கப்பட்டனவோ, அவ்வாறே ஆட்சி வசதிக்காக 1952ம் ஆண்டு பிரித்தானியர்களால் எரிற்றியாவும் எதியோப்பியாவும் ஒரே நாடாக இணைக்கப்பட்டன. இது பச்சை மண்ணையும் சுட்ட மண்ணையும் இணைக்கும் விவகாரம் என, சுந்தரமூர்த்தி புரிந்து கொண்டார்.

எரிற்றிய மக்கள் எதியோப்பிய தேசியத்தில் கரைந்து போகத் தயாராக இல்லை. இதனால் இனப்போர் எழுந்தது. இரண்டு பக்கமும் உயிரச் சேதம் பெருகியது. எட்வேட் பிறந்து வளர்ந்த எரிற்றிய எல்லையோர மலைப்பிரதேசத்தில் கிளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப் பட்டதாக சுந்தரமூர்த்தி அறிந்திருந்தால் இதுபற்றி அவனிடம் கேட்டார். சிறிது நேரம் மௌனமாக இருந்தவன் தன் முன்னே மேசையில் இருந்த கோப்பியை ஒரே மடக்கில் குடித்த பின்னர் பேசத்துவங்கினான்.

எரிற்றியாவில் இருந்து கொண்டே எதியோப்பியாவை அடிமைப்படுத்த ஆரம்பத்தில் இத்தாலி முயன்றது. காடுகளும் தொடர் மலைகளும் நிறைந்துள்ள எதியோப்பியாவில், மலைவாழ்க்கைக்கு நன்கு பழக்கப்பட்ட எதியோப்பிய அரசனையும், வில்லும் அம்பும் ஏந்திய அவரது படையையும் வெல்ல முடியவில்லை. 1936ம் ஆண்டு தொடக்கம் 1941ம் ஆண்டு வரை இத்தாலிய ஆதிக்கம் எதியோப்பியாவின் சில பிரதேசங்களில் இருந்த போதிலும், எதியோப்பியா யாருக்கும் என்றுமே அடிமைப்பட்ட நாடாக இருந்ததில்லை. என் தந்தை வழிப்பாட்டனார் இத்தாலியர்களுடன் தீரமுடன் போர் புரிந்து மாண்டதாக என் தந்தை கூறுவார் என்றான். இதனைக் கூறியபோது எட்வேட் பெருமிதமடைந்தான். அது நியாயமானதும் கூட.

உன் தந்தை இப்போதும் நீ பிறந்த கிராமத்தில்தான் இருக்கிறாரா?

அவரும் கொல்லப்பட்டு விட்டார் என்றவன் கோப்பிக் கடை முலையிலே தாங்கள் தத்தெடுத்த எதியோப்பியக் குழந்தையுடன் அமர்ந்து, இத்தாலிய மொழியில் பேசிக் கொண்டிருந்த தம்பதிகளை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பொறுத்த நேரத்தில் உரையாடல் முறிந்து போனது சுந்தரமூர்த்தியின் மனதை நெருடியது. கதையைத் தொடர அவனை நல்ல மனநிலைக்கு கொண்டு வரவேண்டும். விரிவுரைகளின்போது மாணவர்களை உயிர்ப்புடன் வைத்திருக்க பொருத்தமான நகைச்சுவைகளை அவ்வப்போது அவர் அவிழ்த்துவிடுவார். அது இங்கும் கைகொடுத்தது.

இந்தாலியில் இந்தக் குழந்தை வளர்ந்து, தனது இத்தாலிய காதலியுடன் அட்சரசுத்தமாக இத்தாலி மொழி பேசுவதைக் கற்பனை செய்துபார், என்றதும் தன்னை மறந்து எட்வேட் வாய்விட்டுச் சிரித்தான். கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாது "ம்" சேர்த்ததும், எட்வேட் தொடர்ந்தான்.

இத்தாலிய ஆதிக்கத்ததுக்கெதிராக எதியோப்பியர்கள் தீரமுடன் போரிட்டார்கள். இங்கேதான் பிரித்தானியர்கள் வழமை போலத் தங்கள் மூக்கை நுழைத்துக் கொண்டார்கள். எதியோப்பிய வீரர்களுக்கு உதவுகிறேன் பேர்வழி எனக்கூறிக் கொண்டு, போரில் இத்தாலியர்களை வெற்றிகொண்டு இரு நாடுகளாக இருந்த எதியோப்பியாவையும் எரிற்றியாவையும் இணைத்தார்கள்.

அங்கேதான் பாரிய வரலாற்றுத் தவறு ஏற்பட்டது எனப் புத்தகங்களிலேபடித்த ஞானத்தை சுந்தரமூர்த்தி அவிழ்க்கத் துவங்கிய பொழுது சைகை மூலம் நிறுத்தி, அவன் தொடர்ந்தான்.

நீங்கள் சொல்வது உண்மைதான். இத்தாலியர்களை வெளியேற்றுவதில் எதியோப்பியர்களும் எரிற்றியர்களும் சேர்ந்தே போரிட்டார்கள். பிரித்தானியர்களால் இரு நாடுகளும் இணைக்கப்பட்டபின், எதியோப்பியர்களின் ஆதிக்கம் மேலோங்க, எதியோப்பியர்களுக்கும் எரிற்றியர்களுக்குமிடையில் போர் எழுந்தது.

இதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு. இதே நிலைமைதான் எனது தாய் நாடாகிய ஸ்ரீலங்காவிலும் நடந்தது. என் தந்தையர் நாடான தமிழ் ஈழத்தைச் சிங்கள நாட்டுடன் இணைத்த ஆங்கிலேயர், சிங்கள இனத்தின் மேலாதிக்கத்திற்கு வழிவகுத்தார்கள் என்றார்.

உங்கள் நாட்டுப் பிரச்சனைபற்றி நான் படித்த மிஷன் பாடசாலையில் மதபோதகர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். சிங்களம் அங்கு அரச மொழியாக்கப்பட்டது போலவே, இங்கும் இணைக்கப்பட்ட இரண்டு நாட்டுக்கும் எதியோப்பிய மொழியாகிய Amharic பொது மொழியாக பிரகடனப் படுத்தப்பட்டது.

எதியோப்பியாவுடன் ஒப்பிடும்போது எரிற்றியா பரப்பளவில் மட்டுமல்ல, மக்கள் தொகையிலும் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவானது. எரிற்றியர்களின் மொழி, கலாசாரம் ஆகியன எதியோப்பியர்களிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்டன. செயற்கையான அரசியல் இணைப்பு ஓர் இனத்துக்கு இழைக்கப்படும் அநீதியல்லவா? கொதிக்கும் எண்ணைக் கொப்பரையிலிருந்து தப்புவதற்கு நெருப்பில் குதித்த கதை போல இத்தாலியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு எதியோப்பியரின் ஆதிக்கத்திற்குள் சிக்கி எரிற்றியர்கள் விழித்தார்கள் என்றார் சுந்தரமூர்த்தி. இதைச் சொல்லும் பொழுது ஈழத்தமிழர் அநுபவிக்கும் துயர்களை நினைவு படுத்திக் கொண்டதால் உணர்ச்சி வசப்பட்டார்.

நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். எரிற்றியர்களால் மொழித் திணிப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எரிற்றிய மக்கள் Amharic மொழியைப் பேசவும் பயிலவும் மறுத்தார்கள். இதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட கிளர்ச்சியில் 1993 ம் ஆண்டு "எரிற்றிய மக்கள் விடுதலை இயக்கம்" எரிற்றியாவை தன்னிச்சையாக தனிநாடாகப் பிரகடனப் படுத்திக் கொண்டது.

அந்த வரலாற்றைக் கொஞ்சம் விபரமாகச் சொல்லேன்.

1974ஆம் ஆண்டில் எதியோப்பியாவில் சோவியத் சார்புடைய கம்மியூனிச சித்தாந்தத்திற்கு ஆதரவானவர்களுடைய கையோங்கி, இராணுவப் புரட்சி மூலம் சோவியத் யூனியனுக்கு விசுவாசம் தெரிவித்த இராணுவம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

உலகில் பழமைவாய்ந்த கிறிஸ்தவ மதத்தை ஏற்றிருந்த எதியோப்பிய மக்களால், கம்யூனிச சித்தாந்தங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதனால் "எதியோப்பிய மக்கள் புரட்சிகர இயக்கம்" எதியோப்பியாவில் தோன்றியது.

எதிரிக்கு எதிரி நண்பன் அல்லவா?

எரிற்றிய விடுதலைக்குப் போராடிய எரிற்றிய மக்கள் விடுதலை இயக்கத்துடன் கம்யூனிச இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட ஆரம்பிக்கப்பட்ட எதியோப்பிய மக்கள் புரட்சிகர இயக்கம் சேர்ந்து கொண்டது.

இந்த இடத்தில் எட்வேட் ஒரு முத்தாய்ப்பு வைத்தான். ஏன் பேச்சை நிறுத்தி எழுந்தான் என்பது விளங்கவில்லை. சிரித்தவாறே சங்கடத்துடன் சிறுநீர் கழித்து வருவதாகக் கூறிச் சென்றான்.

-4-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதியோப்பிய மக்கள் விடுதலை இயக்கம் போன்றே இலங்கையிலும், ஜே.வி.பி. என்கிற மக்கள் விடுதலை முன்னணி, சிங்கள விடுதலைக்கென்று ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் இனவாத சக்தியாக வளர்ந்ததை, சுந்தரமூர்த்தி அந்த இடைப்பட்ட நேரத்தில் நினைவுபடுத்திக் கொண்டார்.

கழிப்பறையிலிருந்து திரும்பிய எட்வேட், ஒரு சிக ரெட்டை பற்ற வைத்துக்கொண்டு மீண்டும் வந்தமர்ந்தான்.

எரிற்றிய விடுதலைக்குப் போராடிய எரிற்றிய மக்கள் விடுதலை இயக்கமும் கம்யூனிச இராணுவ ஆட்சிக்கு எதிராகப்போராட ஆரம்பிக்கப்பட்ட எதியோப்பிய மக்கள் புரட்சிகர இயக்கமும், சோவியத் சார்புடைய இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போர் புரிந்தார்கள். மிகுதியைச் சொல்லு என விட்ட இடத்தை நினைவுபடுத்தி அடி எடுத்துக் கொடுத்தார் சுந்தரமூர்த்தி.

சோவியத் சார்பு இராணுவ ஆட்சி, சர்வதேச முதலாளித் துவத்துக்குத் தோதுப்படவில்லை. முதலாளித்துவ நாடுகள், இரண்டு விடுதலை அமைப்புகளும் இணைந்து போராடுவதை சாத்தியப்படுத்துவதில் வெற்றிபெற்றன. இதனால் சோவியத் சார்பு ஆட்சி வீழ்ந்தது. இந்த போட்டத்தின் தொடர்ச்சியாக, எரிற்றியர்கள் 1993ம் ஆண்டு எரிற்றியாவை தனிநாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள் என்றவன், அந்த நிகழ்ச்சி களை அசைபோடுபனைப் போல மௌனம் சாதித்தான்.

இந்தப் பிரிவினைப் பிரகடனத்திற்குப் பின்னர் அமைதி நிலவியதா? எனக் கொக்கி போட்டு அவனை மீண்டும் சம்பாஷனைக்குள் இழுத்தார்.

அதுதான் இல்லை. 1998ம் ஆண்டு மீண்டும் எதியோப்பிய எரிற்றிய எல்லைப் பிரச்சினை துவங்கியது. அந்தக் கிளர்ச்சியில்தான் என் தந்தை படுகொலை செய்யப் பட்டார். எரிற்றிய எல்லையில், எதியோப்பியாவுக்குள் எரிற்றியர்கள் கணிசமான அளவில் வாழ்ந்தார்கள். அவர்கள் அனைவரும் இரவோடு இரவாக உடுத்த உடுப்புடன் எரிற்றியாவுக்குத் துரத்தப்பட்டார்கள். அவர்களுள் என் காதலியும் ஒருத்தி. அவளை இன்னும் நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். அவளை இனிப்பார்ப்பது சாத்தியமாகுமென நான் நினைக்கவில்லை என்றான் பரிதாபமாக.

உன் தாயார் எங்கிருக்கிறார்? உனக்கு சகோதரர்கள் இல்லையா?

ஏனைய உறவுகளை நினைவுபடுத்தல், காதலியை மறப்பதற்கான வடிகாலாய் அமைதல் கூடுமென்கிற எண்ணத்தாலும் சுந்தரமூர்த்தி அவ்வாறு கேட்டார்.

தொழில் நிமிர்த்தம் என் தாய் எரிற்றியாவில் இருந்து எதியோப்பியாவின் எல்லையோரம் உள்ள Axum நகரத்துக்குக் குடிபெயர்ந்ததாக அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் ஒரு மருத்துவத் தாதி. என் தந்தை இத்தாலியில் பயிற்சி பெற்ற பிரபல மருத்துவர். என் தந்தையின் தாதியாகப் பணிபுரிந்த போது இருவரும் காதலித்து மணம் முடித்துக் கொண்டார்களாம்.

இந்தக் தகவல்களை கூறியபின், எட்வேட் தன் இரு கைகளாலும் முகத்தை பொத்தியவாறு மௌனமாக இருந்தான். அவனது மனநிலையைப் புரிந்துகொண்ட சுந்தர மூர்த்தி அவனுக்கு ஒரு எதியோப்பிய ஸ்பெஷல் காப்பி வரவழைத்துக் கொடுத்தார். அவனது வருமானத்துக்கு அந்த ஸ்பெஷல் காப்பி உயர்வானது. அதை அனுபவித்துக் குடித்து, தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

அவன் கதை தொடர்ந்தது.

கிளர்ச்சியாளர்களுக்கு மருத்துவ உதவி புரிந்ததாக குற்றம்சாட்டி, சோவியத்சார்பு எதியோப்பிய இராணுவம், என் தந்தையை சிறையில் அடைத்தது. பல மாதங்களின் பின்னர் அவர் அங்கேயே கொல்லப்பட்டதாகத் தகவல் வந்தது. தந்தையை கொலை செய்த ஆத்திரத்தில் எனது தாய் எரிற்றிய மக்கள் விடுதலை இயக்கத்துக்குத் தாதியாக பணிபுரிந்திருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் ஓர் இரவு இராணுவம் என் தாயையும், அவருடன் வசித்த அனைவரையும் அவர்களுடைய வீட்டிலேயே சுட்டுக் கொன்றது. நான் மிஷனரி பாடசாலை யின் விடுதியில் தங்கியிருந்ததால் தப்பிப் பிழைத்தேன். அதன்பின் எங்கெல்லாமோ சுற்றித் திரிந்து இப்போது அடிசபாபாவில் வாழ்கிறேன். நான் படிக்க வேண்டும் அதற்கு பணம் வேண்டும். அதற்காகத்தான் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளேன், என்றவன் சிகரெட்டை வெறுப்புடன் நூர்த்து எறிந்தான்.

அந்த நேரத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் நாமிருந்த கோப்பிக் கடைக்குள் நுழைந்து எயிட்ஸ் நோய் பற்றிய விழிப் புணர்வு பிரசுரத்தை விநியோகித்தார்கள். உணவு விடுதிகள், கேளிக்கை நிலையங்கள் எனப் பொது இடங்களில் அடிக்கடி இவர்கள் இத்தகைய பிரசாரங்களில் ஈடுபடுவார்கள். இதற்கு ஐக்கிய நாடுகள் சபை உலக வங்கியூடாக பெருந் தொகை பணத்தைச் செலவு செய்கிறது. இருப்பினும் எயிட்ஸ் நோய் எதியோப்பிய சௌக்கியத்துக்கு பெரும் சவாலாகவே இருக் கிறது. எட்வேட் துண்டு பிரசாரத்தை வாங்கவில்லை. வேண்டா மென, தலையசைத்தலின் மூலம் தெரிவித்தான். அது, அதி தீவிர பிரசாரத்தினால் ஏற்படச் சலிப்பாகக்கூட இருக்கலாம்.

நீ ஒரு வைத்திய பரம்பரையில் பிறந்து வளர்ந்தவன். எயிட்ஸ், இங்கு பாரிய பிரச்சனை என்பது உனக்குத் தெரியும். இருப்பினும் கேளிக்கை விடுதிக்கு ஆட்களைக் கூட்டிச் செல்வது உனக்குத் தவறாக தெரியவில்லையா? என அவனது செயலுக்கு அர்த்தம் தேட விழைந்த சுந்தரமூர்த்தி கேட்டார்.

தவறுதான். எனக்கு வேறு வழி தெரியவில்லை. என் கனவு, சரித்திர பாடத்தில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று ஒரு பேராசிரியராக வரவேண்டுமென்பதே. அதற்குப் பணம் வேண்டும். முன்பின் தெரியாத, எனக்கென யாருமற்ற இந்த அடிசபாபா நகரத்திலே, அன்றாடம் உயிர் வாழ்வதே ஒரு போராட்டமாக உள்ளது. போரின் தாக்கத்தினால் நல்லொழுக்க விதிகள் செத்துவிடுகின்றன.

உனக்குத்தான் பல மொழிகள் தெரிகிறதே. இந்தத் தகைமையை வைத்து நல்ல வேலை என்று தேடிக்கொள்ள முடியாதா?

சேர், நீங்கள் வாழும் உலகம் வேறு. ஆபிரிக்கா வேறு. இங்கு வேலை எடுப்பதானால் சிபார்சு வேண்டும். யாராவது பிணை நிற்கவேண்டும். முன்பின் தெரியாத இந்த நகரத்தில் எனக்கு பிணை கொடுக்க யார் வருவார்கள், நான் பார்ப்பது நியாயமான தொழிலல்ல என்பது எனக்கு நன்றாகவே தெரியும். இருப்பினும் எனக்கு வேறு வழி தெரியவில்லை எனச் சொல்லி நிறுத்தினான் எட்வேட்.

மதியம் தாண்டிவிட்டது என்பதை சுந்தரமூர்த்தி சடுதி யாக உணர்ந்தார். எதியோப்பியாவுக்கு வந்த நாள்முதல், மேற் கத்திய உணவு வகைகளையும், மேல்நாட்டுப் பாணியில் தயாரிக் கப்பட்ட ஒரு சில எதியோப்பிய உணவுகளையும் மாத்திரம் சுவைத்திருந்தார். சம்பிரதாயமான அசல் எதியோப்பிய உணவு உண்பதற்கும், அவர்களுடன் ஒருவனாய் பழகுவதற்கும் சுந்தர மூர்த்தி மிகவும் விரும்பினார். எட்வேட்டின் உடல்மொழியும் கண்களும் அவனை நம்பலாம் எனச் சொல்லின.

இருவரும் எழுந்து அருகிலுள்ள லோக்கல் எதியோப்பிய சாப்பாட்டுக் கடையை நோக்கி நடந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி. கந்தராஜாவின் "தமிழ் முழங்கும் வேளையிலே..!"

ஆசி கந்தராஜா அவுஸ்திரேலிய-ஈழத்து எழுத்தாளர், கல்வியியலாளர். ஓய்வுபெற்ற பூங்கனியியல், உயிரியல் தொழிநுட்பத்துறைப் பேராசிரியர். ஜேர்மனி, யப்பான் நாடுகளில் உயர் கல்வி பெற்று அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் பணிபுரிந்தவர். இலங்கை அரச சாகித்திய விருதை இரு தரம் வென்றதுடன் இந்திய தமிழக அரசின் உலகத் தமிழ்ச்சங்கம் மதுரை விருது உட்பட பல உலக இலக்கிய விருதுகளை வென்ற 21ஆம் நூற்றாண்டின் முக்கியமான ஓர் ஈழத்துப் புலம்பெயர் எழுத்தாளர்.

ஆசி கந்தராஜாவின் முதலாவது நூலான "பாவனை பேசலன்றி" சிறுகதைத் தொகுப்பு - மித்ர வெளியீடாக 2000 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு, 2001 ஆம் ஆண்டு இலங்கை அரசின் சாகித்திய விருதைப் பெற்றது. 2024 ஆம் ஆண்டு இவர் சைவ முட்டை என்னும் நூல் வெளியிடும் வரை 14 நூல்களை எழுதியுள்ளார்.

சிட்னியின் முதலாவது பல்லின, பல்கலாசார சமூக வானொலியாகிய தமிழ் முழக்கம் வானொலியின் ஆரம்ப கர்த்தவாக அதன் ஒலிபரப்பை முதலில் வானலைக்குக் கொண்டு வந்தவர் என்பது எனக்குக் கிடைத்த செய்தி. தற்போதும் அவுஸ்திரேலியாவில் இருந்து ஒலிபரப்பாகும் தாயகம் தமிழ் வானொலியில் தன்னார்வமாக ஒலிபரப்பாளனாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

1990-2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ் முழக்கம் என்னும் மேற்படி சமூக வானொலிக்காக ஆசி கந்தராஜா நேர்காணல் செய்த 18 பிரபலங்களின் செவ்விகள் அழகாகத் தொகுக்கப்பட்டு மித்ர வெளியீடாக 2000 ஆம் ஆண்டில் அவரது இரண்டாவது நூலாக வெளிவந்துள்ளது.

தமிழ் முழங்கும் வேளையிலே நூலுக்கு தென்கச்சி சுவாமிநாதன், கலாநிதி வேந்தனார் இளங்கோ ஆகியோரின் அணிந்துரைகளும், எஸ் பொ என்றழைக்கப்படும் பிரபல ஈழத்து எழுத்தாளர் எஸ் பொன்னுத்துரையின் முன்னுரையும் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலிய தமிழ் வானொலிகளின் வரலாற்றையும், தமிழ் முழக்கம் மற்றும் ஆசி கந்தராஜாவின் பங்களிப்பையும் எஸ் பொவின் முன்னுரை தொட்டுச்செல்வதுடன் சிட்னி தமிழ் அரங்க கலைகள், இலக்கிய பவர் ஆகியவற்றின் வரலாற்றையும் சுருக்கமாக நேயர்களுக்கு தெரியப்படுத்தியது பாராட்டத்தக்கது. எஸ் பொவின் மேடை நாடகங்களில் ஆசி கந்தராஜாவும் பங்கெடுத்திருப்பது இந்த முன்னுரையில் இருந்து வாசகர்கள் அறியலாம். இந்நூலில், பின்வரும் பிரபலங்களின் நேர்காணல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.மாலன், 2. பீர்முகம்மது, 3. ஞாநி, 4. சுஜாதா, 5.ஆதி குமணன், 6.நவநீதகிருஷ்ணன். 7.கலைஞர் கருணாநிதி, 8. வைகோ, 9. கமல்ஹாசன், 10. பிரபஞ்சன், 11. நாகேஷ், 12. மனோரமா, 13. காரைக்குடி மணி, 14. தமிழ்க்குடிமகன், 15. இரா. ஜனார்த்தனன், 16. துக்ளக் சோ, 17. அம்பை, 18. அம்பி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தெடுக்கப்பட சில பிரபலங்களின் அறிமுகங்களையும், நேர்காணல்களின் சுவாரஷ்யமான கேள்வி பதில்களையும் சுருக்கமாக இங்கு தருகின்றேன்.

செவ்வி-1: மாலன் நாராயணன்

இந்தியா டுடே (தமிழ்), தினமணி, குமுதம், குங்குமம், திசைகள் (இணைய சஞ்சிகை) ஆகியவற்றின் ஆசிரியராகவும் இருந்து, சண் தொலைக்காட்சியில் அப்போது செய்தி ஆசிரியராகவும் பணியாற்றிக் கொண்டிருந்த மாலனை ஆசி கந்தராஜா அவர்கள் தமிழ் முழக்கம் வானொலிக்காக கண்ட செவ்வி முதலாவதாக இடம்பெற்றுள்ளது. 21ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியத்திற்கு புலம்பெயர் ஈழத் தமிழரே தலைமை தாங்குவர் என்ற கோஷம் பற்றியும், தமிழ் இலக்கிய வல்லமையை தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் பணம் சேர்க்கும் வழியாக கொள்கின்றனரே என்ற கருத்து பற்றியும் கேட்ட கேள்விகளுக்கு மாலனின் பதில்கள் சுவாரசியமானவை.

செவ்வி-4: சுஜாதா

ரங்கராஜன் என்னும் இயற்பெயரைக் கொண்ட இயற்பியல் பட்டதாரியும், இலத்திரனியல் பொறியியலாளருமான சுஜாதா சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் நூல்கள், கவிதைகள், கட்டுரைகள், திரைப்பட கதை-வசனங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் எனப் பல துறைகளில் தன் முத்திரையினைப் பதித்ததுடன் பல விஞ்ஞான புனைகதைகளையும் எழுதியவர்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழர்களுக்கு எழுத்தாளன் என்னும் வகையில் என்ன கூற விரும்புகின்றீர்கள் என்ற கேள்விக்கு சுஜாதா கூறும் பதிலில் இருந்து ஒரு வரி. "உங்களைப் பற்றி, உங்கள் பிரச்சனைகளைப்பற்றி, உங்களுடைய உண்மையான தேடல்களைப்பற்றி நீங்கள் எழுதும்போது தான் உங்கள் இலக்கியம் சிறக்கின்றது" என்ற அவரின் கூற்று முக்கியமான ஒரு அறிவுரை என்று நினைக்கின்றேன்.

உண்மையில் ஆசி கந்தராஜாவினால் எழுதப்பட்டு பெரும்பாலானோரால் இரசிக்கப்பட்ட கதைகள், விஞ்ஞான புனைகதைகளுக்கு சுஜாதாவின் இந்த ஆலோசனைதான் மூலகாரணமோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

செவ்வி-7: கலைஞர் கருணாநிதி

ஐந்து முறைகள் தமிழ் நாட்டின் முதல்வராக பதவி வகித்தவரும், சினிமாவிலும், மேடையிலும் புதுத்தமிழ் புகுத்தியவரும், அரசியல் சாணக்கியருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் வழங்கிய இந்த செவ்வி நிச்சயமாக ஒரு வரலாற்று ஆவணமாகும். பலருக்கு மாற்றுக்கருத்து இருப்பினும் ஈழ விடுதலைப் போராட்டத் தில் அவரின் பங்கு மறைக்கப்பட முடியாதது.



இந்த செவ்வி எடுக்கப்பட்ட 90 களின் பிற்பகுதியில் கலைஞர் தமிழகத்தின் எதிர்க்கட்சி தலைவராக இருந்தார்.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு போல் தற்போது ஆதரவு கொடுப்பதில்லையே என்ற மக்களின் அபிப்பிராயம் பற்றி கேட்ட கேள்விக்கு நீண்டதொரு பதிலை கொடுத்திருந்தார். அதில் இருந்து சில வரிகளை இங்கு தருகின்றேன்.

"நான் என்னிடம் வந்த பல போராளிக் குழுக்களுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம் நீங்கள் தனித் தனிக் குழுக்களாக இருந்து விடுதலைப் போராட்டத்தை நடாத்துவது ஏலாத காரியம் எல்லாரும் ஒன்று படுங்கள் என்பதுதான் என் வேண்டுகோளாக இருந்தது. ஆனால் அதை அவர்கள் காதில் போட்டுக் கொண்டதாக தெரியவில்லை"

"எனது முயற்சியால் எல்லாக் குழுக்களும் இணைய சம்மதித்தன. சத்தியமாக ஒன்றாக இருபோமென உத்தரவாதம் தந்தார்கள். மறு நாள் ஸ்ரீசபாரத்தினம் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டார் என்று செய்தி வந்தது. தொடர்ந்து பத்மநாபா, அமிர்தலிங்கம்..."

இறுதியாக, ஆஸ்திரேலியா தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள் என்ற கந்தராஜாவின் வினாவுக்கு, "வெளிநாட்டிலாவது- அங்கேயாவது ஒற்றுமையாக இருங்கள் என்பது தான் எனது அறிவுரை, எனது வேண்டுகோள்" என்று தனது ஆதங்கத்தை கொட்டுகின்றார்.

செவ்வி-8: வைகோ

திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தலைவர்களுள் ஒருவராக திகழ்ந்து பின்னர் அதில் இருந்து பிரிந்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் கட்சியை நிறுவிய வைகோ என்றழைக்கப்படும் வை.கோபாலசாமியுடனான செவ்வி சுவாரஷ்யமானது. அவரின் ஈழ விடுதலையின் பேரிலான ஈடுபாட்டை அவரின் செவ்வி முழுவதிலும் காணலாம். தலைவர் பிரபாகரனை நேரில் சென்று வன்னி காட்டில் சந்தித்ததை விபரித்த பகுதியில் இருந்து ஒரு சில வசனங்களை தருகின்றேன்.

"எவ்வளவு வீரம் செறிந்த போராட்டத்தை அவர்கள் நடாத்தி வெற்றி பெற்று வருகின்றார்கள் என்பதை நான் கண்கூடாக கண்டேன். தம்பி பிரபாகரன் அவர்களோடு மணிக்கணக்கிலே நாள் தோறும் உரையாடுகிற பாக்கியம் எனக்கு கிடைத்தது."

"ஒரு நாள் என் விருப்பத்தை அவரிடம் சொன்னேன். "தமிழீழம் மலர்வது உறுதி, எனக்கொரு ஆசையிருக்கிறது" என்று அவரிடத்திலே சொன்னேன். என்ன ஆசையென்று கேட்டார். அந்த தனி ஈழ நாட்டில் - தமிழீழத்தை உலகம் அங்கீகரித்த பிறகு, ஐ.நா சபையிலே தமிழீழம் பிரதிநிதித்துவம் பெறும்போது தமிழீழத்தினுடைய பிரதிநிதியாக ஐ.நா மன்றத்திலே பேச வேண்டுமென்று எனக்கொரு ஆசை இருக்கின்றது என்றேன்"

"உடனடியாக சிரித்துக் கொண்டே சொன்னார்: இதிலொரு கஷ்டமும் இல்லையே"

அப்படி ஒரு நாள் வருமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை காலம் தான் சொல்ல வேண்டும் என்று சிறிது அவநம்பிக்கையாக வைகோ இறுதியில் கூறியுள்ளதை அவதானிக்கலாம்.

செவ்வி-10: பிரபஞ்சன்

சாரங்கபாணி வைத்தியலிங்கம் என்னும் இயற் பெயரைக் கொண்ட பிரபஞ்சன் புதுச்சேரியில் பிறந்து ஒரு முழு நேர எழுத்தாளராகவும் விமர்சகராகவும் வாழ்ந்தவர். தமிழ்நாடு அரசின் சாகித்திய விருது பெற்ற இவர் குமுதம், ஆனந்த விகடன் மற்றும் குங்குமம் ஆகிய வார இதழ்களில் பணிபுரிந்து பல புத்தகங்களை எழுதியுள்ளார். தமிழ் இலக்கியம் பற்றிய அவருடனான நீண்ட சுவாரஷ்யமான உரையாடல் நிச்சயம் வாசிக்கப் படவேண்டியது.

செவ்வி-11: நாகேஷ்

நாகேஸ்வரன் என்ற இயற்பெயரைக் கொண்ட நாகேஷ் ஒரு கன்னடப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். குணச்சித்திர நடிகராக சர்வர் சுந்தரம் திரைப் படத்திலும், நகைச்சுவை நடிகராக திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள் ஆகியவற்றிலும், பிற்காலத்தில் அபூர்வ சகோதரர்கள், மைக்கேல் மதன காமராஜன், மகளிர் மட்டும், அவ்வை சண்முகி, பஞ்ச தந்திரம் உட்பட்ட 200 இற்கும் மேற்பட்ட திரைப்படங் களில் நடித்த நாகேஷின் இறுதித் திரைப்படம் தசாவதாரம் ஆகும்.

"உங்கள் திருமணத்தின் பின்தான் நீங்கள் பெரிய நிலையை அடைந்தீர்களென்பது உண்மையா" என்ற கந்தராஜாவின் கேள்விக்கு அவர் "Marriage is a romance in which the hero dies in the first chapter" என்று நகைச் சுவையாக பதிலளித்துள்ளார்.

"நியாயமாக உங்களுக்கு வரவேண்டிய நல்ல பெயர் மற்றவர்களுக்குச் செல்லும் போது உங்களுக்கு எப்படி இருக்கும்" என்ற கேள்விக்கு நாகேஷ் அளித்த பதில் பலரும் வாசிக்க வேண்டியது.

"நான் கவலையே படமாட்டேன் சார். ஒரு கட்டடம் கட்டும்போது, சவுக்கு மரத்தை முக்கியமா வைச்சு சாரம் கட்டி, கட்டடம் கட்டி உயர்ந்து கொண்டே போய் பல ஆண்டுகளுக்குப் பிறகு அது முடிந்த பிறகு, ஒவ்வொரு சவுக்கு மரமாக அவிழ்த்துக் கொண்டே வரு வார்கள். கட்டடம் கட்டி முடிந்து கிருகப்பிரவேசத்தன்று கட்டடம் கட்டுவதற்கு முக்கிய காரணமாக இருந்த சவுக்கு மரத்தை மறைத்து வைத்து விட்டு வேறெங்கேயோ வளர்ந்த வாழை மரத்தை முன்னால் நட்டு கிருகப்பிரவேசம் நடாத்தி அனைவரையும் வரவேற்பர்.

அத்தனை பெருமையும் வாழை மரத்திற்கு போய்விடும். இதில் உள்ள உண்மை என்ன தெரியுமா? அந்த வாழை மரம் மூன்று நாள் வாழ்க்கை தான் வாழும். மறைந்து கிடக்கும் அந்தச் சவுக்கு மரம் கண்ணீர் விடுவ தில்லை. அடுத்த கட்டடம் கட்டு வதற்கு தயார் நிலையில் என்றைக்கும் சிரித்துக் கொண்டே இருக்கும்."



மிகவும் சிறப்பான கேள்விகளும் நாகேஷுக்கே உரித்தான சிந்திக்க வைக்கும் நகைச்சுவைப் பதில்களும் நிச்சயம் வாசிக்க வேண்டியவை.

செவ்வி-16: துக்ளக் சோ

சோ ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட சோ பத்திரிகை ஆசிரியர், நாடக ஆசிரியர், நடிகர், வக்கீல், அரசியல் ஆலோசகர் எனப் பல்வேறு பொறுப்பு களை மேற்கொண்டவர். துக்ளக் என்னும் அரசியல் வார பத்திரிக்கையின் நிறுவுநர் மற்றும் ஆசிரியர் ஆவார்.

மற்றவர்களை குறை கூறியே நீங்கள் பத்திரிகை யையும் அரசியலையும் நடாத்துவதாக பலர் குறை கூறு கின்றனரே என்ற கந்தராஜாவின் கேள்விக்கு பின்வரும் சோவின் பதில் சிந்திக்க வைக்கின்றது. "ஒருவர் ஒரு X-ray கிளினிக் நடாத்துகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கு எடுக்கப்பட்ட X-ray ஐ வைத்து உங்கள் உடலில் உள்ள குறைகளை எடுத்துக் கூறுவார் வைத்தியர். உடனே அவரிடம், எனது உடலில் உள்ள குறையைச் சொல்லி வியாபாரம் நடாத்து கின்றாயே என்று கோபப் பட்டு X-ray படத்தை கிழித்துப் போட்டு விடுவீர்களா? பத்திரிகையாளன், அரசியல் விமர்சகன் என்ற முறையில் நான் செய்யும் பணியும் அப்படிப்பட்டது தான்." என்று அதிரடியாக அவரின் பதில் வருகின்றது.

செவ்வி-17: அம்பை

அம்பை (Ambai) என்கிற புனைபெயரைக் கொண்ட முனைவர் சி. எஸ். லட்சுமி தமிழின் சிறந்த பெண் படைப்பாளிகளுள் ஒருவர். தமிழ் முழங்கும் வேளையிலே தொகுப்பில் நேர்காணல் செய்யப்பட்ட 18 பேர்களில் மனோரமாவும் அம்பையும் மட்டுமே பெண்கள் ஆவர். இதுவரை இந்திய அரசின் சாகித்திய பரிசு பெற்ற 4 பெண்களில் ஒருவரான பெண்ணியவாதி யான அம்பை தமிழிலும் ஆங்கிலத்திலும் பல கதை களையும் கட்டுரைகளையும் எழுதி வருகின்றார். பெண்ணிய நோக்கினை வெளிப்படுத்தும் வகையிலான தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடியாக, தமிழ் நவீனப் பெண்ணிலக்கியத்தில் அம்பை உருவாக்கிய தடம் அழுத்தமானது. பெண்ணிய இலக்கியம், புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய கந்தராஜாவின் கேள்வி களுக்கான அவரின் பதில்கள் வித்தியாசமானவை.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கு முன்பாக இணையம் பெரியளவில் பிரபலமாகாத காலத்தில் வெளிவந்த இந்த செவ்விகளின் தொகுப்புநூல் வித்தியாசமானது. செவ்வி காண்பவர் ஒரு ஒலிபரப்பா ளராக, விஞ்ஞானியாக, எழுத்தாளராக பன்முக ஆளுமை கொண்ட ஒருவராக இருக்கும் வேளையில் செவ்வி காணப்படுபவர்களும் பிரபலமானவர்களாக இருக்கின்றனர். இப்படியான செவ்விகளை எடுப்பவர்கள் பெரும் வாசிப்பனுபவம் கொண்டவர்களாக, சமகால நிகழ்வுகளை உள்வாங்கி பரிட்சயமானவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. அந்த வகையில் ஆசி கந்தராஜா தனது பணியை செவ்வனே செய்துள்ளார் என்றே கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனாக் கண்ட கல்லூரிக் காலங்கள்

■ செல்லையா சுப்ரமணியம்



இது ஒரு நட்பின் கதை

காலம்: 1969 – 1971

களம்: தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

கல்வியில், கலைகளில், விளையாட்டில் என்று அனைத்துத் துறைகளிலும் இக்கல்லூரி கொடி கட்டிப் பறந்த காலம். மகாஜனாவின் மிகச்சிறந்த நாடகப் பாரம்பரியத்தின் பிதாமகர் என்று போற்றப்படுகின்ற ஆசிரியப் பெருந்தகை, கவிஞர் அமரர் செ.கதிரேசர் பிள்ளை அவர்கள் கலை இலக்கிய உலகில் மாணவர்களுக்கு வழிகாட்டியாக கோலோச்சிய காலம்.

அந்தப் பொற்காலத்தில் தான் மகாஜனாவில் இரண்டு உற்ற நண்பர்கள் க.பொ.த.ப. உயர்தர வகுப்பில் கல்வி கற்றார்கள். இக் கல்லூரியின் நாடக வரலாற்றில் உச்சம் தொட்ட காலமான 1965 முதல் 1969 வரையான 5 வருடத்தில் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய அகில இலங்கை தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடையேயான நாடகப் போட்டிகளில் தொடர்ந்து ஐந்து முறை முதல் பரிசைத் தட்டிச் சென்ற சரித்திரம் மகாஜனாவுக்கு சொந்தமானதாக இருந்தது.

அந்த நாடகங்கள் சிலவற்றில் நடிகர்களாகும் வாய்ப்பு இந்த இரு நண்பர்களுக்கும் கிடைத்தது. நண்பர்களில் ஒருவனான கந்தராஜா "அம்பையின் வஞ்சினம்" "கோமகளும் குருமகளும்" என்று இரு நாடகங்களிலும் மற்றைய நண்பன் சுப்ரமணியம் "குருதட்சணை" என்ற நாடகத்திலும் நடித்த பேறு பெற்றார்கள்.

ஆம்! இப்படித்தான் எங்கள் நட்பின் ஆரம்பப் புள்ளி மஹாஜனா என்றானது. இந்த எமது நட்பு கலை இலக்கிய முன்னெடுப்புகள் சார்ந்து இன்னும் இறுக்கமாகியது. அந்த வரலாறு படைத்த நாடக வரிசையைத் தொடர்ந்து இன்னும் பல நாடகங்கள் நாங்கள் இருவரும் சேர்ந்து எழுதினோம் தயாரித்தோம் நடித்தோம். பேச்சுப்போட்டிகளில், எழுத்துப் போட்டிகளில், விவாதப்போட்டிகளில் கலந்து கொண்டோம். அது மாத்திரமல்ல மகாஜனாவின் தமிழ்ச் சங்கத்திலே மாறி மாறி தலைவர்களாக இருந்தோம். மாணவ முதல்வர்களாகத் தெரிவானோம்.

கல்லூரி விடுதியில் ஒரே காலத்தில் இருந்தபோது கல்லூரி விடுதியின் சிரேஷ்ட மாணவ தலைவனாக அவனும் உதவி சிரேஷ்டமாணவ தலைவனாக நானும் இருந்தோம்.

1970 ல் மகாஜனாவின் வைர விழாக்கொண்டாட்டங்களின்போது அங்கு இடம் பெற்ற எத்தனையோ கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு சொந்தக்காரர்களாக இருந்தோம். அப்போது எங்களுக்கு இணையாக எமது கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்குதாரராக சேர்ந்து கொண்ட நண்பன் சண்முகலிங்கனையும் (மேனாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் என்று இன்று அறியப்படுபவர்) எனது மலரும் நினைவுச்சுழலுக்குள் உள்வாங்குதல் தவிர்க்கமுடியாத மகிழ்வாகிறது.

ஒரு மாணவனது கல்லூரிக்காலம் அவனது எதிர்காலத்தைச் சொல்லிச்செல்லும் என்பது எனது நம்பிக்கை. ஆம்! அவனது இன்றைய உச்சத்திறமைக்கும் புகழுக்கும் அன்றைய கல்லூரி வாழ்வு கட்டியம் கூறிற்று. கந்தராஜாவின் கலை இலக்கிய ஆர்வம் திறமை அவனுடைய எழுத்துக்களிலே, நாடக ஆக்கங்களிலே அன்றைக்கே பரிணமித்தது.

கல்லூரி நாட்களில் அவன் ஒரு மிகச்சிறந்த எழுத்தாளனாக, பேச்சாளனாக, நடிகனாக எல்லாவற்றிக்கும் மேலாக ஒரு சிறந்த நகைச்சுவையாளனாக இருந்தான். அந்த நகைச்சுவைதான் இன்றைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரிச்சந்திரா மயான காண்டம் நாடகத்தில் வலது பக்கத்தில் ஆசி கந்தராஜாவும் இடப்பக்கத்தில் கட்டுரையாளரும்



"என் இந்த நடிப்பு?" என்ற நாடகத்தில் இடமிருந்து வலமாக சண்முகலிங்கன், கந்தராஜா, நாலாவதாக கட்டுரையாளர்

அவன் புனையும் கதைகளிலே வருகின்ற அங்கதச் சுவைக்கு அடிநாதம் என நினைக்கிறேன்.

இப்படி நாம் கனாக் கண்ட கல்லூரிக் காலங்கள் 1971ல் நிறைவு கண்டபோது, பாடித் திரிந்த பறவைகளாய் பழகிக் களித்த தோழர்களாய் திக்குக்கு ஒருவராக பிரிந்து சென்றோம். புலமைப்பரிசில் பெற்று ஜெர் மனிக்கு அவன் சென்று விட்டபிறகும் தொடர்ந்த கடிதத் தொடர்பும் ஓரிரு வருடங்களில் அறுந்துவிட கிட்டத் தட்ட 45 வருடங்கள் மௌனப் பெருவெளியொன்றின் இரு அந்தலைகளாக இருந்தோம். இந்த 45 வருட பிரிவில் முன்பிருந்த அதே நட்பு உயிர்ப்புடன் இருக்குமா என்ற கேள்வி எனக்குள் இருந்து கொண்டே இருந்தது.

ஆனால் அவ்வளவு காலத்திற்குப் பிறகு ஒரு முறை அவன் கொழும்பு வந்த போது எனது மைத்துனர் மூலமாக அலைபேசி எண்ணை அறிந்து எனக்கு அழைப்பெடுத்தான். அதை ஏற்று நான் "ஹலோ" சொன்ன போது அவன் சொன்ன வார்த்தை,

"டேய் சுப்பர்! நான் கந்தராஜா கதைக்கிறேன்!"

நான் அதிர்ந்து போனேன். அவ்வளவு காலம் தாண்டியும் அதே நட்போடு பேச முடியுமா? அத்தனைக்கும் இந்த இடைவெளியில் அவன் கல்வியில் வல்லவனாகி, பன்முக ஆளுமையில் முதல்வ னாகி, விஞ்ஞானியாகி, பேராசிரியராகி ஒரு சிறந்த உயர் ஸ்தானத்தில் இருக்கின்ற பொழுது கூட அந்த பழைய நட்பை நேசித்தவனுடைய அந்த நட்பின் தரத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.

அதன் பிறகு இப்போது 6 – 7 வருஷமாக எம்முடைய நட்பு முன்னைவிடவும் இறுக்கமாகத் தொடர்வது ஒரு நெகிழ்ச்சியான மகிழ்ச்சி. அவன் ஆஸ்திரேலியாவில் இருந்தாலும் நட்பின் நெருக்கத்துக் குப் பஞ்சமில்லை. அதில் இன்னும் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் மீண்டும் என்னை எழுதத் தூண்டிக் கொண்டிருக்கும் நட்பு.

எனது 13 வயதிலேயே முதன்முதலாக அச்சிலே வந்த என் சிறுகதையொன்றைத் தொடர்ந்து மகாஜனாக் காலங்கள் உட்பட கிட்டத்தட்ட ஒன்பது வருடங்கள் நிறையவே எழுதினேன். அதன் பிறகு எல்லாமே நின்று போய் விட்டது. ஆனாலும் இந்த "பெருங்காய டப்பாவில்" இன்னும் ஏதாவது இருக்கும் என்று நினைத் தானோ என்னவோ மீண்டும் எழுதத் தூண்டுகிறான். ஆனால் அவன் தூண்டுகிற அளவிற்கு என்னால் அதிகமாக எழுத முடிவதில்லை. ஏதோ ஒரு சலிப்பு. ஆனால் அவனுடைய நச்சரிப்புத் தாங்காமல் ஒரு கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் எழுதிக் கொண்டிருக் கின்றேன்

என்னுடைய பழைய கல்லூரிக்காலப் பெருமை களை மேதாவிலாசத்தை இன்றைக்கும் பொது வெளியில் எடுத்துக்கூறும் எனக்கான ஒரு "பிரச்சாரப் பீரங்கியாக" இருக்கிறான். எனது பழைய "வெட்டிக் கிழிப்புகளை" நான் மறந்தாலும் நினைவூட்டி அந்தப் பொற்காலத்திலே நான் சாதித்தவற்றை எடுத்துக்கூறி என்னை மகிழ்விக்கிறான். கலையிலக்கிய உலகில் அவன் இன்றைக்கு அடைந்திருக்கின்ற அடைவு மட்டத்தை பார்த்துப் பூரிக்கும் உற்ற நண்பனாக நான் இருக்கிறேன். இந்தப் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்! அவனுடைய சிறந்த சிநேகிதன் நான் என்பதில் எனக்கொரு தலைக்கனம்கூட உண்டு. அந்த நாட்களில் நான் எழுதிய நாடகங்களை பற்றி அதில் இருக்கின்ற சிறப்புகளை பற்றி அதில் வரும் உரையாடல்களைப் பற்றி இன்றைக்கும் விதந்துரைத்து என்னை பாராட்டுகின்ற ஒரு நண்பன் என்றால் இவன்தான். ஒரு பேராசிரியரை ஏகவசனத்தில் விளித்திங்கே எழுதுதல்கூட எமது ஆழமான நட்பின் பறைசாற்றல்தான். ஆம்! "பேராசிரியர் ஆசி கந்தராஜா" மற்றவர்களுக்குத்தான்.

எமக்குள் இன்றைக்கும் "வாடா... போடா... மச்சான்...மச்சி..." தான்

இத்தகைய உண்மை நண்பன் ஆசி கந்த ராஜாவினது இந்த பவளவிழா ஆண்டிலே ஈழத்தின் இணையற்ற சஞ்சிகையான ஜீவநதி வெளியிடும் ஆசி கந்தராஜா ஆளுமைச் சிறப்பிழில் எமது நினைவழியாக் கல்லூரிக் காலங்களை அசைபோட இடம் தந்த "பதிப்புச் சித்தன்" பரணிக்கு நன்றி.

தனது 75வது அகவையை 25.01.2025ல் கொண்டாடும் என் நண்பன் இன்னும் பல்லாண்டு சுகமாய் வாழ்வாங்கு வாழ்ந்து மேலும் பல இலக்கி யங்க்ள் படைக்க வேண்டும் என்று இயற்கையை வேண்டி வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நேர்காணல்



**பல்துறை ஆற்றல்கள் நிரம்பிய பேராசிரியர் ஆசி கந்தராஜா அவர்கள் ஈழத்தின் தனித்துவமான படைப்பாளி. சிறுகதை, நாவல், அறிவியல், கட்டுரை என பல படைப்புகளை தந்து கொண்டிருப்பவர். அருமையான அறிவியல் சார்ந்த புனைவுகளை தந்து கொண்டு இருப்பதுடன் பல்வேறு நாட்டு மக்களின் வாழ்வியலை தமிழ் மக்களுக்கு அறியச் செய்கின்றார். வானொலி ஒலிபரப்பாளராக, நாடக நடிகராக எனப் பல்துறை ஆற்றலுள்ளவரின் நேர்காணலை வெளியிடுவதையிட்டு மகிழ்கின்றோம்.**

**பரணி:**
**உங்கள் பெற்றோர், பிறந்த ஊர், சகோதரர்கள், குடும்பம் பற்றி அறிந்து கொள்ளலாமா?**

**ஆசி.கந்தராஜா:**
இலங்கையின் வட மாகாணம், தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி என்ற கிராமத்தில், ஆ. சின்னத் தம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளுக்கு 25 ஜனவரி 1950 அன்று பிறந்தேன். எனது தந்தை ஆறுமுகம் சின்னத்தம்பி புராண இதிகாசங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்த ஒரு தமிழ் ஆசான். எனக்கு மூன்று மூத்த சகோதரிகள். கடைக் குட்டி நான். எமது முன்னோர்கள் விவசாயிகள். பெற்றோர், சகோதரிகள், நான் என எல்லோரும் கைதடியிலேயே மணம்முடித்தோம். இதனால் நாங்கள் எந்தவித கலப்பு மற்ற தூய கைதடியார் எனச் சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுவதுண்டு.

**பரணி:**
**இலங்கையில் நீங்கள் கற்ற பாடசாலைகளைப் பற்றியும் உங்கள் திறமைகளை வெளிக்கொணரக் காரணமாக இருந்த ஆசிரியர்கள் பற்றியும் கூறுங்கள்?**

**ஆசி.கந்தராஜா:**
ஆரம்பக் கல்வியை, கைதடியிலுள்ள பாடசாலைகளில், குறிப்பாக நான்கு ஆண்டுகள் கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாசாலையில் கற்றேன். பின்னர் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியிலும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும் படித்தேன். கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் எனது தந்தையே எனது வகுப்பாசிரியராகவும் இருந்தார். அந்தவகையில் சிறுவயதுமுதல் எனக்குத் தமிழ் உணர்வை ஊட்டி வளர்த்தவர் அவரே.

**பரணி:**
**பாடசாலைக் காலத்தில் உங்களிடம் கலை இலக்கிய உணர்வு ஏற்படக் காரணம்?**

**ஆசி.கந்தராஜா:**
தமிழ் இலக்கிய சூழலிலேயே நான் வளர்ந்தேன். எங்கள் வீட்டில் எல்லாமே தமிழில்தான் நடந்தன. இதனால் தமிழ்மொழி எனக்கு இயல்பாகவே வாலாயப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில் (1960களில்), தினகரன் பத்திரிகையில், திங்கள் முதல் வெள்ளிவரை சவாரித்தம்பர் என்னும், கேலிச் சித்திரம் தொடராக வெளிவந்தது. இதன் மறுவடிவம், வார மஞ்சரியில் சித்திர கானம் என்ற பெயரில் பிரசுரமானது. இவற்றை வரைந்தவர் சுந்தர் என அழைக்கப்பட்ட திரு சிவஞானசுந்தரம் அவர்கள். இவரது கேலிச் சித்திர நாயகர்களான சவாரித்தம்பர், சின்னக்குட்டி, பாறிமாமி, மைனர் மச்சான் ஆகிய அனைவரும், நாம் அன்றாடம் ஊரில் சந்திக்கும் பாமர மக்கள், சாதாரண மனிதர்கள். யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில், இலங்கை அரசியல் மற்றும் சாதிவேறுபாடுகள், பிற்போக்குத் தனங்கள், மூடக் கொள்கைகளை, நகைச் சுவையாக இவர்கள் நையாண்டி செய்தார்கள். சுந்தரின் திறமையை ஊக்குவித்தவர் திரு கைலாசபதி அவர்கள். அவர் அப்போது பேராசிரியரல்ல. பின்னரே பல்கலைக்கழகத்தில் இணைந்தார். கால ஓட்டத்தில் திரு கைலாசபதி தினகரனிலிருந்து விலகியதும், கார்டுனிஸ்ட் சுந்தர் வீரகேசரியில் சேர்ந்தார். அவருடன் அவரது கேலிச் சித்திரப் பாத்திரங்களும் வீரகேசரிக்கு வந்தன. இவரே பின்னர் சிரித்திரன் என்ற கேலிச் சித்திர சஞ்சிகையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நடத்தியவர்.

அப்போது நான் ஆரம்ப பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். சவாரித்தம்பரை வாசிக்காமல் படுப்பதில்லை என்னும் அளவுக்கு அதில் ஊறிப்போயிருந்தேன். சவாரித்தம்பரை வாசிப்பதற்காகவே, நான் செய்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளுக்காக காத்திருந்த காலங்கள், இன்றும் என் நினைவில் சுழன்றடிக்கின்றன. ஐயா படிப்பித்த தமிழ் பாடசாலைக்கு காலை பத்து மணியளவில் அவர் வாங்கும் செய்தித்தாள் வரும். காத்திருந்து அதை நான்தான் வாங்குவேன்.

இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில், இலவசமாக இலங்கைப் பாடசாலைகளில் "பணிஸ்" கொடுத்தார்கள். இது தஹநாயக்க கல்வி மந்திரியாக இருந்த காலத்தில், அமெரிக்க உதவியுடன் கொண்டு வரப்பட்ட இலவச உணவுத் திட்டம். இந்த "பணிஸ்" இடைவேளையின் போது, செய்தித்தாளுடன் நண்பர்கள் புடைசூழ, வேப்ப மர நிழலில் அமர்வேன். அங்கு என்னுடைய சவாரித்தம்பர் ஓரங்க நாடகம், அமர்க்களமாக அரங்கேறும். அன்றைய செய்தித் தாளில் வந்த சவாரித்தம்பர் வசனங்களை ஏற்ற இறக்கங்களுடன் பேசி நடித்துக் காட்டுவேன். அத்துடன் சவாரித்தம்பர் சாயலில், நான் சுயமாக எழுதி வைத்திருக்கும் கதை வசனங்களையும் அவ்வப்போது எடுத்து விடுவேன். நண்பர்களின் சிரிப்பொலி அடங்க சிறிது நேரம் பிடிக்கும். அவசரமாக "ஒண்டுக்கு" இருந்துவிட்டு அந்த வழியால் வந்த அப்புத்துரை வாத்தியாரும் மாணவர்களுடன் சேர்ந்து வாய்விட்டுச் சிரித்தார். அடுத்த பத்து நிமிஷத்துக்குள் ஐயாவின் வகுப்பறைக்குள் போன அப்புத்துரை வாத்தியார் "சின்னண்ணை, உன்ரை மகன் நல்ல "புலுடா"க்காரனாய்தான் வரப்போறான். எட்டிப் பார், வேப்ப மரத்தடியிலை நடக்கிற சமாவை. இப்பவே கண்டிச்சுவை. பிறகு கவலைப் படாதை" என வத்தி வைத்தார். ஐயா வகுப்பறையில் இருந்து எட்டிப் பார்க்கவும், "பணிஸ்" இடைவேளை முடிந்து மணி அடிக்கவும் நேரம் சரியாய் இருந்தது. அப்போது எனக்கு பதினொரு வயது மட்டுமே. இந்த வயதில் மட்டுமல்ல எந்த வயதிலும் எழுத்து, நாடகம், இலக்கியம் என ஒரு மாணவன் ஆர்வம் கொள்வது, அபத்தம் என நினைத்த காலம். இவற்றில் ஈடுபாடு கொண்டவன் உருப்பட மாட்டான் என வாத்திமாரும் பெற்றோரும் நம்பினார்கள்.

அன்று மாலை இரவுச் சாப்பாட்டின் பின்னர், நான் எழுதிய கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு வரச் சொன்னார் ஐயா. பிரதிகளைக் கொடுத்த பின், அடி வாங்குவதற்கு ஆயத்தமாக பெருவிரலால் மறு உள்ளங் கையை, மாறிமாறி அழுத்தி மஸாஜ் செய்தபடி நின்றேன். எனது கையெழுத்துப் பிரதிகளை நிதானமாக வாசித்து முடித்தவர், சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்தபடி நின்றார். பின்னர், "நித்திரை வந்தால் போய்ப் படு தம்பி" என அனுப்பிவிட்டார். "தம்பி" என ஐயா விளித்தது நான் தொடர்ந்து எழுதுவதற்கு அவர் தந்த அநுமதி என எடுத்துக் கொண்டு தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன். அந்த வகையில், பதின்பருவ காலங்களில் எனது சிறு கதைகள் ஈழநாடு, சுதந்திரன் பத்திரிகைகளில் வெளி வந்தன. எனது புனைவுகளில் இன்றும் அதிகம் காணப் படுவதாகச் சொல்லப்படும் நளினமும் நையாண்டியும், நான் சவாரித்தம்பரிடம் கற்றுக் கொண்டவையே.

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியும், குறிப்பாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் எனது ஆரம்ப கால கலை இலக்கிய ஆர்வத்துக்கு நிறையவே தீனி போட்ட கல்லூரிகள். 1965ம் ஆண்டு, கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் நான் பத்தாம் வகுப்பு படித்த காலத்தில் நடந்த ஒரு இலக்கியத் திருட்டையும் இங்கு பதிவு செய்ய வேண்டும். நாடளாவிய ரீதியில் கலை இலக்கிய அமைப்பு ஒன்று நடத்திய சிறுகதைப் போட்டிக்கு, நான் எழுதிய சிறுகதை ஒன்றை அனுப்பி யிருந்தேன். போட்டியின் முடிவு அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் சில காலங்களின் பின்னர், என்னுடைய கதை வேறு ஒரு எழுத்தாளரின் பெயரில், இந்தியாவில் இருந்து வெளிவரும் கலைமகளில் வெளிவந்திருந்தது. இதற்கு சாட்சியாக, என் பள்ளிக்கூட நன்பன் சுகுணசபேசன் இன்றும் லண்டனில் வாழ் கிறான். இந்த இலக்கியத் திருட்டுக்கு எதிராக, பதினைந்து வயது பள்ளி மாணவனான என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. எமக்கு தமிழ் இலக்கியம் கற்பித்த ஆசிரியரிடம் விஷயத்தைச் சொல்லி உதவி கேட்டேன். "ஐந்து சதத்துக்கும் பெறுமதி இல்லாத, இந்த வேலையை விட்டிட்டு பத்தாம் வகுப்பு சோதினை வருகுது, படி" என்றார். இருந்தாலும், "கலைமகளில் வெளிவருமளவுக்கு எனது கதை தகுதி பெற்றுள்ளது" என, எனக்குள் திருப்திப்பட்டுக் கொண்டு, பத்தாம் வகுப்பு இறுதிச் சோதனைக்கு படிக்க ஆரம்பித்தேன்.

**பரணீ:**
**மகாஜனாக்கல்லூரியில் கற்ற காலத்தில் நீங்கள் நடித்த நாடகங்கள் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

**ஆசி.கந்தராஜா:**
சிறுவயதிலேயே தமிழை ஒழுங்காக உச்சரிக்கவும் வசனங்களை ஒழுங்காகப் பண்பேற்றத்துடன் ஏற்றி இறக்கிப் பேசக்கூடியவனாகவும் இருந்த காரணத்தால் பாடசாலை, மாவட்ட, மாகாண பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்றேன். இதனால் இயல்பாகவே நாடகங் களில் நடிக்கும் வாய்ப்புகள் தேடிவந்தன. நான் முதன் முதலில் வேஷம் கட்டியது கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி யில் ஒரு பெண்ணாக. எழுத்தாளர் ஆசிரியர் நாவேந்தன் எழுதி இயக்கிய நாடகம் அது.

கலை இலைக்கிய ஆர்வமும் திறமையும் கொண்ட என்னை மகாஜனக் கல்லூரி மேலும் பட்டை தீட்டியது. கல்லூரிக்கு வந்து சேர்ந்த முதலாவது வருடமே ஆசிரியர் கவிஞர் செ கதிரேசம்பிள்ளை, அகில இலங்கை கலைக்கழக நாடகப் போட்டியில் (1967) முதல் பரிசுபெற்ற "அம்பையின் வஞ்சினம்" நாடகத்தில், முக்கிய பாத்திரத்தில் நடிக்க உள்வாங்கிக்கொண்டார். இந்தவகையில் 1968 கலைக்கழக நாடகமான "கோமகளும் குருமகளும்" நாடகத்திலும் எனது நடிப்பு வெளிப்பட்டது. இந்திய நாடக ஜாம்பவான்களான ஔவை சண்முகம், ரி.கே. பகவதி ஆகியோர் யாழ்ப் பாணம் வந்தபோது, அவர்கள் முன்னிலையில், "அம்பையின் வஞ்சினம்" நாடகம் 1967ல் யாழ்ப்பாண நகரசபையின் திறந்த கலையரங்கில் மேடையேறியது. அவர்களால் இந்த நாடகம் நயந்துரைக்கப்பட்டதுடன் எனது நடிப்புப்பற்றியும் மேடையில் சொல்லப்பட்டது. மகாஜனாக் கல்லூரியின் வைரவிழா, 1970ல் வந்தது. இவ்விழாவில் 3 மணித்தியால சமூக நாடகமான "ஏன் இந்த நடிப்பு" இரண்டு முறை அரங்கு நிறைந்த நாடகமாக அரங்கேற்றப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றது. இதில் நான் முக்கிய பாத்திரமேற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடந்தோறும் நடைபெற்ற இல்லங்களுக்கிடையே யான நாடகப் போட்டியிலும் எனது பாரிய பங்களிப்பு இருந்தது. பெற்றோர் தினவிழா 1968ல் மேடையேறிய "கிளாக்கர்" என்னும் நகைச்சுவை நாடகம், மகாஜனாவில் நீண்டகாலம் பேசுபொருளாகி 3 முறை மேடையேறியது. நான் எழுதி, முக்கிய பாத்திரத்தில் நடித்த இந்த நாடகம் அரங்கு குலுங்கச் சிரித்த, நீண்டகாலம் நினைவில் நின்ற நாடகமாகும்.

**பரணீ:**

**உங்கள் பல்கலைக்கழகக் கல்வி பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்றோம்.**

**ஆசி.கந்தராஜா:**

நான் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சை எழுதிய காலத்திலேதான் இலங்கையில் சேகுவேரா கிளர்ச்சி நடந்தது. இதனால் பல்கலைக்கழக அனுமதி தொடக்கம் எல்லாமே காலதாமதமாகியது. அந்த இடைப்பட்ட காலத்தில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் (கிழக்கு ஜேர்மனி) கல்விகற்பதற்கான புலமைப்பரிசில் பெறுவதற்கு, இலங்கை கல்வி இலாகா மூலம் விண்ணப்பித்திருந்தேன். இலங்கையில் இளமானிக் கல்வி ஆரம்பித்த காலத்தில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் கல்வி கற்பதற்கு எனக்கு ஸ்கொலஷிப் கிடைத்தது. இதனால் எனது இளமானி, முதுமானி பட்டப்படிப்புக்களை கிழக்கு ஜேர்மனியிலும் டாக்டர் பட்டத்துக்கான ஆராச்சிப் படிப்பை ஜேர்மன் சமஷ்டிக்குடியரசு என்று சொல்லப்பட்ட மேற்கு ஜேர்மனியிலும் ஸ்கொலஷிப் பெற்று, மேற்குபேர்ளினில் மேற்கொண்டேன். இக்காலத்தில் எனக்கு கிடை தடைத்த அனுபவங்களை வைத்தே "அகதியின் பேர்ளின் வாசல்" என்னும் நாவலை எழுதினேன். எனது கல்வி, ஆராய்ச்சி, ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் ஜேர்மன் மொழியிலேயே அமைந்தன. இந்தவகையில் மொத்தம் 13 ஆண்டுகள் ஜேர்மன் அரச ஸ்கொலஷிப் பெற்ற வெகுசிலரில் நானும் ஒருவன். இதன்பின்னர் டாக்டர் பட்டப் பின் பயிற்சியை யப்பான் சுக்குபா பல் கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்டேன். இவையெல் லாம் தானாக எனக்கு ஆகாயத்திலிருந்து வீழ்ந்தவை யல்ல. எனது கடின உழைப்பால் பெற்றுக்கொண்டவை என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

**பரணீ:**

**எப்போது. ஏன் புலம்பெயர்ந்து சென்றீர்கள்?**

**ஆசி.கந்தராஜா:**

1974ம் ஆண்டு ஜேர்மன் ஸ்கொலஷிப் பெற்று ஜேர்மனிக்கு கல்விகற்கச்சென்றேன். பின்னர் 1987ம் ஆண்டு திறமைசாலிகளுக்கான குடிவரவாளனாக ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தேன்.

**பரணீ:**

**புலம்பெயர் வாழ்வு பற்றிச் சொல்லுங்கள்.**

**ஆசி.கந்தராஜா:**

நான் ஜேர்மனிக்குச் சென்ற எழுபதாம் ஆண்டுகளின் காலப்பகுதியில் அங்கு தமிழர்கள் குறைவு. கிழக்கு ஜேர்மனியில், மேற்கு ஜேர்மனியிலும் மிகக் குறைவு. எனது பல்கலைக்கழகத்தில் நான் ஒருவன்தான் தமிழன். ஒருசில சிங்கள மாணவர்கள் இருந்தார்கள். எனக்குச் சிங்களம் தெரியாததால் நாம் ஜேர்மன் மொழியில் பேசிக்கொள்வோம். ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடு களில் ஆங்கிலம் செல்லாக்காசு. ஆங்கிலப் பத்திரிகை கள் புத்தகங்கள் குறைவு. இப்போதைய இணையத் தொடர்புகள், வற்சப், ஈமெயில் என்பன இல்லை. இதனால் ஜேர்மனியில் வாழ்ந்த காலத்தில் நான் தமிழில் எதையும் எழுதவில்லை. ஆனால் நிறைய ஜேர்மன் மொழியில் வாசித்தேன். ஜேர்மன் மொழியிலும் ஆங்கிலத்திலும் நிறைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினேன். ஜேர்மன் மொழியில் உயர் கல்வி கற்றதால், அந்த மொழி தமிழ்மொழிபோல என்னுள் வசப்பட்டது. கல்வியும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் என்னை நல்ல நிலைக்கு உயர்த்திவைத்ததுடன் பொருளாதார வலுவை யும் சேர்த்தது. ஒரு விஷயம் எப்படி சொல்லப்பட வேண்டும், எப்படி சம்பவங்களை கோர்வைப் படுத்த வேண்டும் என்ற நுணுக்கங்களை, நான் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிப்படியாகக் கற்றுத் தந்தன. அதேவேளை நான் வாசித்த பிற மொழி இலக்கியங்கள், என்னை புதிய தளத்துக்கு கொண்டு சென்றன. ஜேர்மன் வாழ்க்கையை நிறைவு செய்து கொண்டு, 1987ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த பின்னர், படிப்படி யாக தமிழில் எழுத ஆரம்பித்தேன். எனது சிறுகதைகள் காலச்சுவடு, இந்தியா ருடே, குமுதம் (முத்திரைக் கதை), விகடன், கல்கி (தீபாவளிமலர்), அம்ருத்தா, மூகரம், தீராநதி, கணையாழி, வீரகேசரி, தினக்குரல், ஞானம், மல்லிகை, மலேசிய நண்பன், ஜீவநதி, தமிழ் முரசு (சிங்கப்பூர்) ஆகிய தமிழ் பேசும் உலகத்து சஞ்சிகை களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

**உங்களின் முதல் நூல் எது? வெளியிட்ட பதிப்பகம்?**

**ஆசி.கந்தராஜா:**

1990ம் ஆண்டு, முதுபெரும் எழுத்தாளர் "எஸ்பொ"வை நான் ஆஸ்திரேலியாவில் சந்தித்தது எனது அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். எஸ்பொவின் எழுத்துக்களை இலங்கையில் நான் வாழ்ந்த காலங்களிலில் வாசித்திருக்கிறேன். கீழ்சாதி எழுத்தாளன், காமசூத்திர எழுத்தாளன், குதர்க்கவாதி என்று நான் வளர்ந்த சூழலில் அவர் முத்திரை குத்தப்பட்டிருந்தார். இதனால் அவரது சடங்கு நாவல் உட்பட அவரது படைப்புக்கள் பலவற்றை நான் ஒளித்து வைத்தே வாசிக்க நேர்ந்தது. அவரது சடங்கு நாவலை, பாடப் புத்தகங்களுடன் வைத்திருந்தமைக்காக பாடசாலை அதிபரால் நான் தண்டிக்கப் பட்டதுமுண்டு. எஸ்பொ ஆஸ்திரேலியாவில் இருந்த காலங்களில் எனது பல்கலைக்கழக பணிகளுக்கு மத்தியிலும், வாராவாரம் அவரைச் சந்திப்பதை வழமையாக்கிக் கொண்டேன். தமிழ் மொழி, இலக்கியம், அரசியல், சமூகம் என, பலதையும் சலிக்காது பேசுவார். எழுத்து நுணுக்கங்களையும், சொல் ஆளுமையையும் முறைப்படி எனக்குச் சொல்லித் தந்தவர் எஸ்பொ அவர்களே. அவரை சரியான முறையில் அணுகினால் அவரிடம் நிறையவே கற்றுக்கொள்ளலாம் என்பதற்கு நான் ஒரு சாட்சி. எஸ்பொவே, எனது சிறந்த பத்து சிறுகதைகளை தெரிவு செய்து, ஒரு சிறுகதை தொகுப்பாக வெளிக் கொணர வேண்டுமென்ற யோசனையை முன் மொழிந்தவர். பணப் பிரச்சனை எனக்கு இல்லாத காரணத்தால், உடனடியாக எனது முதலாவது நூல், சென்னையிலிருந்த எஸ்பொவின் மித்ர பதிப்பகத்தினூடாக "பாவனை பேசலன்றி" என்ற பெயரில், நவம்பர் மாதம் இரண்டாயிரமாம் ஆண்டு வெளிவந்தது. இந்த நூலின் வெளியீடு முதலில் சென்னையிலும் பின்னர் சிட்னி, கொழும்பிலும் நடந்தன. சென்னையிலுள்ள ஃபிலிம் சேம்பரில் நடந்த முதலாவது வெளியீட்டு விழாவில், எழுத்தாளர்கள் பிரபஞ்சன், வாசந்தி, செயப்பிரகாசம், எஸ்பொ, ஓவியர் மருது, கவிஞர் யுகபாரதி, கலைப்புலி தானு, வீ ரி கே பாலன், இளம்பிறை ரஃமான் என பலர் நூலை வாழ்த்தியும், சிலாகித்தும், விமர்சித்தும் பேசினார்கள். கொழும்பில் இராமகிருஸ்ண மிஷனில் நடந்த வெளியீட்டு விழாவை, தினக்குரல் வார மஞ்சரியின் அப்போதைய ஆசிரியர் பாரதி இராசநாயகம் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார். சிட்னியில் நடந்த அறிமுக விழா ஒரு "சாமத்தியச் சடங்கு" போன்றது. இலக்கியத்தில் ஆர்வமில்லாதவர்களும் எனக்காக வந்து மண்டபத்தை நிரப்பினார்கள்.

பரணீ:

**உங்களது கதைகள் மூலம் எதனைச் சொல்ல வருகின்றீர்கள் ?**

**ஆசி.கந்தராஜா:**

நவீன இலக்கியத்தில் எனது எழுத்துக்கள் சிறுகதை, அறிவியல்சிறுகதை, குறுநாவல், நாவல், புனைவுக் கட்டுரைகள், நனைவிடை தேய்தல் என்று பலவகையில் விரிந்துள்ளன. பல்கலைக்கழக பணி நிமிர்த்தம் பயணித்த நாடுகளில் நான் கண்ட வாழ்வின் தரிசனங்களே எனது ஆக்கங்கள். கதைகளின் கருக்கள் பெரும்பாலும் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை. அதனால்தான் யதார்த்தமெது, கற்பனையெது என்று பிரித்தறிய முடியாத சேர்மானமாக அவை இருக்கின்றன.

கதை எழுதுபவனுக்கு, கவனிப்பு முக்கியம். தொழில் காரணமாகவோ என்னவோ, விருப்பு வெறுப்பின்றி நான் எல்லாவற்றையும் கவனிப்பேன். கவனித்தவற்றுள், மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் என நான் நினைப்பவை, கதைகளாகின்றன. பொருத்தம் கருதி, எனது தரிசனங்கள் சிலவற்றை ஒன்றாகச் சேர்த்தும் கதைகளை எழுதியுள்ளேன். மற்றவர்களுக்குப் புரியாத வகையில், கடினமான மொழி நடையைப் பாவித்துக் கதை எழுவதில் எனக்கு உடன்பாடில்லை. ஒரு சிறுகதை இறுதிவரை வாசகரை வாசிக்கத் தூண்டவேண்டும். சிறிது காலமாவது நினைவில் நிற்க வேண்டும். வாசிப்பை இடையில் நிறுத்திவிட்டால் அது, அந்த எழுத்தின் தோல்வி. படைப்பாளி ஒருபோதும் தீர்ப்புச் சொல்லக்கூடாது என நம்புவன் நான். அது படைப்பாளியின் வேலையும் இல்லை. தீர்ப்பைச் சொல்ல வேண்டியவர்கள் வாசகர்களே. அதனால், எனது கதைகளின் முடிவில், தீர்வு என எதுவும் இருக்காது. எனது ஆக்கங்கள் எதையும் நான் ஒரேமுறையில் எழுதியது கிடையாது. அவை திரும்பத் திரும்ப எழுதப்பட்டவை. அவற்றில் உண்மை கலந்த, நம்பகத் தன்மை உள்ளதா எனப் பார்க்கப்பட்டவை. ஏற்ற சொற்களைப் பாவித்து, முடிந்தவரை எளிமையான உரை நடையில் விபரிக்கப்பட்டவை.

பரணீ:

**உங்கள் நூல்கள் பற்றியும் அவற்றுக்கு கிடைத்த விருதுகள் பற்றியும் அறியலாமா?**

**ஆசி.கந்தராஜா:**

"பாவனை பேசலன்றி" என்னும் எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பை மித்ர பதிப்பகம் வெளியிட்டது. இந்த நூலுக்கு 2001ம் ஆண்டின் சிறந்த சிறுகதை தொகுதிக்கான இலங்கை அரசின் சாகித்திய விருதும், ரூபா ஒரு லட்சமும் கிடைத்தது. அதைத் தொடர்ந்து 14 நூல்கள் வெளிவந்துள்ளன. ஒரு சில நூல்கள் விரைவில் வெளிவர பதிப்பகத்தில் காத்திருக்கின்றன. எனது நூல்களுக்கு, உயரிய விருதுகளான தமிழக அரசின் மதுரை தமிழ்ச்சங்க விருது, திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, இலங்கை அரசின் சில சாகித்திய விருதுகள், பணமுடிப்புகள் போன்றவை கிடைத்துள்ளன. இவற்றை நான் தகுதிகளாகக் கருதவில்லை. ஆனால் அவை எனக்கு ஊக்கம் தருவன.

பரணீ:

**உங்களது நாவல் பற்றிச் சொல்லுங்கள்.**

**ஆசி.கந்தராஜா:**

1949 தொடக்கம் 1990 வரை சோவியத்தின் கண்காணிப்பின் கீழே, ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு என்ற பெயரில் கிழக்குஜேர்மனியும் அமெரிக்கா, பிரான்ஸ், பெரியபிரித்தானியா, ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழே, மேற்குஜேர்மனி என அழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்ட பிரதேசம் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசாகவும் பிளவுபட்டிருந்தன. இந்தக் கால கட்டத்தில், 1974 முதல் 1980 வரை, கிழக்கிலும் பின்னர் தொடர்ந்து 1986 இறுதிவரை மேற்கிலும் வாழ்ந்திருக்கிறேன். சோவியத்தின் செல்வாக்கின் கீழிருந்த கிழக்கு ஜேர்மனியின் பொருளாதாரத்தில், மேற்குஜேர்மனி புகுந்து விளையாடி நெருக்கடி கொடுக்க, வந்திறங்கும் அகதிகள் மூலம் மேற்கு ஜெர்மனிக்குத் தொல்லை கொடுத்தது கிழக்குஜேர்மனி. இதற்கு பிளவுபட்ட ஜேர்மனியின் பூகோள அமைப்பும், பேர்ளின் நகரம் குறித்த பொட்ஸ்டம் உடன்படிக்கை விதிகளும், வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தன. மேற்குபேர்ளின் நகரம் கிழக்கு ஜேர்மனிக்குள் இருந்தாலும், அது மேற்கு ஜேர்மனியின் ஆளுகைக்கு உட்பட்டதால், மேற்குபேர்ளினுக்குள் வந்து சேர்ந்து விட்டால், மேற்குஜேர்மனியில் வசிப்பதற்கான அகதி அந்தஸ்துக் கோருதல் சாத்தியமாக அமைந்துவிடும். பின்னர் அங்கிருந்து வேறு பல மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், தரை எல்லையை கடந்து சென்றடைதல் அப்போது சாத்தியமாக இருந்தது. 1980ம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்த ஐரோப்பிய நாடுகளின் குடிவரவு விதிகளில், தற்போது புகுத்தப்பட்டுள்ள கெடுபிடிகள் இருக்கவில்லை. எனவே அகதிகள் பிரான்ஸ், சுவிஸ், ஒல்லாந்து, டென்மார்க், நோர்வே என்றும், பின்னர் அங்கு தமது வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக்கொண்டு பிரித்தானியா, கனடா என ஆங்கிலம் பயிலும் நாடுகளுக்குப் பெயர்தல் சாத்தியமாயிற்று. பிளவுபட்ட ஜேர்மனிகள் 1990ம் ஆண்டு இணையும்வரை பூமிப் பந்தெங்கும் தமிழன் புலம்பெயர்வதற்கு நுழைவாயிலாக அமைந்தது கிழக்குபேர்ளினும், அதனுடன் இணைந்த மேற்குபேர்ளினின் பூகோள அமைப்புமே என்பது இதுவரை பதிவு செய்யப்படாத உண்மையாக உள்ளது. கிழக்குபேர்ளின் விமான இறங்குதுறையைப் பாவித்து மேற்குபேர்ளினூடாக பூமிப்பந்தெங்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலருக்கு, பிளவுபட்ட ஜேர்மனியின் பூகோள அமைப்போ அல்லது தங்கள் நுழைவுக்கு வசதி செய்த பொட்ஸ்டம் உடன்படிக்கை பற்றியோ, இன்றுவரை தெரியாதிருக்கலாம். இந்த வரலாற்றுத் தகவல்கள் தமிழ்மொழியில் பதியப்படாதவை. இதனை மனங் கொண்டே இவ்வரலாற்றுப் புதினம் எழுதப்பட்டது. நாவலில் வரும் பல சம்பவங்களுக்கு நான் நேரடி சாட்சியாக இருந்துள்ளேன்.

**பரணீ:**

**ஈழத்தில் அறிவியல் சார்ந்த சிறுகதைகளை எழுதுபவர்கள் மிகச் சிலரே அவற்றுள் குறிப்பிடக்கூடிய எழுத்தாளராக விளங்குபவர் நீங்கள் என்ற வகையில் அறிவியல் கதைகளை எழுதும் போது நீங்கள் கவனத்தில் கொள்பவை எவை?**

**ஆசி.கந்தராஜா:**

அறிவியலைப் பின்புலமாக வைத்து, கற்பனை கலந்து ஆக்கப்படும் படைப்புக்களே அறிவியல் புனைவு என்பது பொதுவான கருத்து. காலப்பயணம், எதிர்காலக் கோட்பாடுகள், கண்டுபிடிக்கப்படக்கூடிய தொழில் நுட்பங்கள், வேற்றுக்கிரக வாசிகளின் தகவல்கள், ஊழிக்காலப் பேரழிவு என்பனவே பெரும்பான்மையான அறிவியல் புனைகதைகளின் கருப்பொருள்களாக அமைகின்றன. இங்கு, இவை குறித்த அச்சமும் இவற்றினால் ஏற்படும் தாக்கங்களும் தீங்குகளுமே அதிகம் பேசப்படுகின்றன. ஆனால், எனது அறிவியல் புனைகதைகள் இவற்றிலிருந்து மாறுபட்டவை. இவை சமுதாயத்துக்குத் தேவையான அறிவியல் விஷயங்களை பாமர மொழியில் நேரடியாகச் சொல்வன. இவ்வாறு இருக்கலாம் என்ற ஊகத்தில் எழுதப்படாதவை, எளிமையான நேரடி மொழியில் வாசகர்களுக்குச் சொல்லப்படுபவை.

எனது கறுத்தக்கொழும்பான், செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய், மண்ணளக்கும் சொல் போன்ற புனைவுக்கட்டுரைத் தொகுப்புக்கள் வேளாண் அறிவியலையும் சமகால வாழ்க்கையையும் வெவ்வேறு வகைகளில் தொடர்புபடுத்தி எழுதப்பட்டவை. இவை தமிழுக்குப் புதுவரவு. இவை தமிழிலில் இதுவரை பதிவு செய்யப்படாத தாவர உலக மொன்றிற்கான திறப்பாக அமைந்தவை எனச் சொல்லப்படுகின்றன.

**பரணீ:**

**பேராசிரியராக விளங்கும் நீங்கள் பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்திருக்கின்றீர்கள். அந்தவகையில் இலங்கைக் கல்வி முறை பற்றி உங்கள் கருத்து?**

**ஆசி.கந்தராஜா:**

சோஷலிசத்தைப் பின்பற்றிய கிழக்கு ஜேர்மனியிலும் முதலாளித்துவக் கொள்கைகளைக் கடைப்பிடித்த மேற்கு ஜேர்மனியிலும் நான் 13 வருடங்கள் படித்தவன் பணிபுரிந்தவன். இதன் பின்னர் ஜப்பானில் தொழில் பயிற்சி பெற்றவன். ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களிலும் மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலும் பேராசானாக இருந்தவன். நான்கு வருடங்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் செனட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை அங்கீகாரம்பெற்ற வருகைதரு பேராசிரியனாக நியமிக்கப்பட்டவன். அவ்வப்போது தேவைகருதி யாழ்ப் பாணப் பல்கலைககழகத்தில் விரிவுரை நிகழ்த்துபவன்.

அவுஸ்திரேலிய அரசசார்பிலும் ஆய்வு மையங் கள், நிறுவனங்கள் சார்பிலும் கென்யா, யுகண்டா, தன்சானியா, எதியோப்பியா, தென் ஆபிரிக்கா, சீனா, இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், வியட்நாம், தென் கொரியா, இந்தோனேசியா, பிலிப் பைன்ஸ், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடு களுக்கு விரிவுரை நிகழ்த்தவும் தொழில் பயிற்சி அளிக்க வும் சென்றிருக்கிறேன். இந்த அனுபவங் களிலிருந்து நான் சொல்வது என்னவென்றால், அரைத்த மாவையே வருடாவருடம் மீண்டும்மீண்டும் அரைக்காமல், வாழ்க்கைமுறைக்கும் பயன்பாட்டுக்கும் ஏற்ற வகையில் இலங்கையில் கல்விமுறைகளும் பாடத்திட்டங்களும் அமையவேண்டும். இத்தகைய மாற்றங்கள் இலங்கை யில் தற்போது படிப்படியாகத் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

**பரணீ:**

**இந்தியாவில் உங்களது நூல்கள் சில பதிப்பிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். அங்கு உங்களது நூல்களுக்கான வரவேற்பு எப்படி உள்ளது?**

**ஆசி.கந்தராஜா:**

இந்தியாவில் மித்ர பதிப்பகத்திலும் காலச்சுவடு பதிப்ப கத்திலும் எனது நூல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளி வந்துள்ளன. இலங்கையில் ஞானம்பண்ணை, கொடகே, எங்கடபுத்தகங்கள், ஜீவநதி ஆகிய பதிப்பகங் கள் மூலம் எனது புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இந்தியாவில் பதிப்பிக்கப்படும் புத்தகங்கள் கிண்டிள், அமெசோன் போன்ற இணையத்தளங்கள் மூலமும் விற்பனையாகும். காலச்சுவடு பதிப்பிக்கும் புத்தகங் களுக்கு நாம் பணம் கொடுக்கத்தேவையில்லை. தகுதி யான நூல்களை அவர்களே தங்கள் செலவில் பதிப்பித்து வினியோகித்து, விற்பனையாகும் நூல் களுக்கு ஒழுங்காக புத்தக ராயல்டி பணம் தருவார்கள். எழுத்தாளரக்குத் தேவையான நூல்களை 40 வீத கழிவு விலையில் வாங்கிக்கொள்ளலாம். இது இந்தியாவி லுள்ள எல்லாப் பதிப்பகங்களும் பின்பற்றும் நடை முறையல்ல.

**பரணீ:**

**உங்களுடைய Master piece ?**

**ஆசி.கந்தராஜா:**

பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் எனக்கு முழுத் திருப்திதந்த ஆக்கம் ஜூலாய் 2020 காலச்சுவடு இதழில் வந்த "நரசிம்மம்" என்ற எனது சிறுகதை.

**பரணீ:**

**இன்னும் எழுத வேண்டும் என நினைத்து எழுதப்படாமல் ஏதாவது வைத்திருக்கின்றீர்களா?**

**ஆசி.கந்தராஜா:**

ஆஸ்திரேலிய ஆதிவாசிகளான அபொறிஜினி மக்களை, கதை மாந்தர்களாகக் கொண்ட ஒரு நாவல் தற்போது எழுதிக் கொண்டிருக்கிறேன். விரைவில் அது வெளிவரும்.

**பரணீ:**

**நிறைவாகச் சொல்ல விரும்புவது?**

**ஆசி.கந்தராஜா:**

இளமைப் பருவத்திலே தமிழ் உணர்வையும் இலக்கிய தாகத்தையும் ஊட்டி இன்று என்னைத் தமிழ் ஊழியக்காரனாக வளர ஊக்கம் தந்தவர் எனது தந்தை ஆ சின்னத்தம்பி வாத்தியார். அவர் எனது பதின்பருவ காலத்தில் மறைந்தார். பொருள் சோக்காவிட்டாலும் நல்ல மனிதர் என்ற பெயருடன் வாழ்ந்தவர்.

எனது நூல்கள் தற்போது பரவலாக வரவேற் பைப் பெற்றுள்ளன என்பது எனது கணிப்பு. அவற்றுக்கு விருதுகளும் கிடைத்துள்ளன. இருந்தாலும் எனக்குள் இன்றுவரை ஒரு நெருடல். தமிழுக்கும் தமிழ் இலக்கியத் துக்கும் தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்து, நேர்மையான தமிழ் ஆசிரியராக வாழ்ந்த எனது தந்தை, எனது நூல்களை வாசிக்க உயிருடன் இல்லை என்பதே. அவரின் நினைவாகவே, அவரின் முதல் ஏழுத்துக் களான "ஆ" "சி" என்ற இரண்டு எழுத்துக்களை முன் நிறுத்தி, அவரின் ஆசி வேண்டி, "ஆசி கந்தராஜா" என்ற பெயரில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எனது சிறப்பிதழை, எனது 75வது அகவையில் *(25.01.2025)* ஜீவநதி பதிப்பகம் வெளிக்கொணர்வதை யிட்டு மகிழ்ச்சி. அதற்கு ஜீவநதி ஆசிரியரும் பணிப் பாளருமான திரு பரணீதரனுக்கு எனது நன்றிகள். இவரின் தந்தையார் முனைவர் த. கலாமணி அவர்கள் எனது நல்ல நண்பர். திறமைசாலி, கலைஞர், அறிவாளி, கல்வியாளர். ஆஸ்திரேலியா வூலொன்கொங் பல்கலைக் கழகத்துக்கு முதுமானிப் பட்ட ஆராய்ச்சிக்கு ஸ்கொலஷிப் பெற்று வந்தவர். அவரது புத்திக்கூர்மை காரணமாக டாக்டர் பட்ட ஆராச்சிக்கு தரமுயர்த்தப் பட்டு முனைவரானவர். அவர் விரும்பியிருந்தால் குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவில் தங்கி வாழ்ந்திருக்க லாம். மண்பற்றுக் காரணமாக இலங்கை திரும்பினார். பரணீதரன் அப்பொழுது சிறு பையன். சிட்னியில் ஆரம்ப பாடசாலைக்கு புத்தகப் பையுடன் போன பரணீதரனை எனக்குத் தெரியும். அவரது இன்றைய அயராத உழைப் பும் அசுர வளர்ச்சியும் என்னைப் பிரமிக்க வைக்கின்றன. கலாமணி எப்பொழுதும் தனது தந்தையார் திரு தம்பியையாவை முன்னிறுத்தி வாழ்ந்தவர். அதேபோல பரணீதரனும் இப்பொழுது தனது தந்தைக்கு பெருமை சேர்த்து வாழ்பவர். வாழ்த்துகள் பரணீ. தொடரட்டும் உங்கள் அயராத உழைப்பு. ஆசி கந்தராஜாவின் ஆசிகள்!

**பிழை திருத்தம்**

**மார்கழி மாத ஆளுமைச் சிறப்பிதழான செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் இதழின் 31 ஆம் பக்கத்தில் "மேலும் 05.05.2010 இல் ஆரம்பித்து பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பி.ப.5.30 க்கு கொழும்புத் தமிழ்சங்கத்தில் நடைபெற்று வந்த "நூல்நயம் காண்போம்" நிகழ்ச்சி..." என்பதில் 05.05.2010 என்பது 05.05.2000 என வரவேண்டும் என்பதை வாசகர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.**

**- ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சௌந்தரி கணேசன்

# ஆசி கந்தராஜா அவர்களின் ஊடகப்பணி




ஆசி கந்தராஜா அவர்கள் தமிழ் சமூகத்தில் தனித்துவமான ஆளுமை கொண்டவர்களில் ஒருவர். பேராசிரியராக, அறிஞராக, எழுத்தாளராக, கலைஞராக, ஊடகவியலாளராக என அனைத்துத் தளங்களிலும் சிறப்பாகச் செயலாற்றி சராசரி மனிதர்களிடமிருந்து வேறுபட்டு நிற்பவர். அவர் மீது அளவுகடந்த அன்பும், அக்கறையும், மதிப்பும், மரியாதையும் கொண்டு எனது எண்ணங்களை அவரது ஜீவநதி சிறப்பிதழில் பதிவு செய்வதையிட்டு மிகவும் பெருமையடைகிறேன்.

அவுஸ்திரேலியத் தமிழர்கள் ஒரு காத்திரமான சமூக அந்தஸ்துள்ளவர்கள். இங்கு ஊடகப் பணி என்பது பலரும் மதிக்கின்ற சமூகப் பொறுப்புள்ள ஒரு பணி. அதை நிறைவாகச் செய்தால் மட்டுமே அந்தப்பணிக்கான மகத்துவத்தையும், மதிப்பு மரியாதைகளையும் தக்க வைத்துக் கொள்ள முடியும். இங்குள்ள ஊடகங்கள் வணிக ஊடகங்களாக இயங்குவதில்லை. ஊடகவியலாளர்கள் பகுதிநேர, தொண்டர் அடிப்படையில் பணி புரிபவர்கள். ஓர் ஊடகவியலாளராகப் பணியாற்றுவதற்கு குறைந்தபட்சத் திறமையோடு ஆர்வமும் அர்ப்பணிப்பும் பொது நல நாட்டமும் இருந்தால் போதும். ஊடகவியல் என்பது இங்கு ஒரு தொழில் அல்ல அது ஓர் கடமை.



இப்பின்னணியில் அவுஸ்திரேலியாவில் 35 வருடங்களாக தொடர்ந்து ஊடகப் பணியில் ஈடுபட்டு வருகின்றார், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆசி கந்தராஜா அவர்கள். ஆக்க இலக்கியங்களில் சிறப்புப்பெற்ற இவர், பிறிஸ்பேன் தமிழ் ஒலி, தமிழ்முழக்கம் (MCRA), அவுஸ்திரேலியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தாயகம் தமிழ் ஒலிபரப்புச் சேவை போன்ற சமூக வானொலிகளில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், செய்தியாளராகவும் பணியாற்றி தனது ஊடகப்பணியை இன்றுவரை வெற்றிகரமாகத் தொடர்கின்றார்.

*1992* ம் ஆண்டில், சிட்னியின் முதலாவது பல்லின, பல்கலாசார சமூக வானொலியாகிய தமிழ் முழக்கம் வானொலியின் ஆரம்ப கர்த்தாவாக, அதன் ஒலிபரப்பை முதலில் வானலைக்குக் கொண்டு வந்தவர். அப்போது தமிழ் முழக்கத்தினூடாகவே புலம்பெயர் தமிழர்கள் தாயகத் தகவல்களை அறிந்து கொண்டார்கள். அதனால் இவரை தமிழ்முழக்கம் கந்தராஜா என்று இங்குள்ளவர்கள் அழைத்ததாகவும் அறிந்தேன். மேலும், தன்னைத் தனது விருப்பத்திற்கு விட்டிருந்தால், வானொலியிலோ அல்லது பத்திரிகை ஊடகத்திலோ தான் பணி புரிந்திருப்பேன் என நேர்காணல் ஒன்றில் அவர் கூறியதையும் கேட்டிருக்கின்றேன்.

தனது எழுத்துத் திறமையால் உலகளாவிய ரீதியில் பிரபலமாகியதால், ஊடகங்கள் ஊடாகத் தான் முன்வைக்கும் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதென்பது இவருக்கு மிகவும் சுலபமாக இருக்கிறது. தனிப்பட்ட பிரபலம், கல்வியறிவு, உயர்பதவி என்பன ஊடகவெளியிலும் இவரைத் தனித்துவமாக மிளிரச் செய்கிறது. தன் எழுத்து, தன் வானொலி நிகழ்வுகள் போன்றவை மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதால், அவர்களுக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது எப்படிச் சொல்லவேண்டும் என்பதில் மிகவும் கவனமெடுத்து செயல்படுவார். இவரது நிகழ்ச்சிகளில் சர்ச்சைகளுக்கும் குறைவில்லை. ஆனாலும் மக்களின் மனநிலை குறித்த பிடிமானம் இவரிடம் அதிகம் இருப்பதால் உலகத் தமிழர்களின் விருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியாக இவரது வானொலி நிகழ்ச்சிகள் அமைகின்றன.

ஊடகவியலாளன் என்பவன் எந்த ஒரு கருத்தையும் அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. முடிந்தவரையில் அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துவான். அத்தகைய பண்பும், சமூகத்தில் உள்ள முக்கிய பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவற்றை வெளிப்படையாகப் பேசுகின்ற இயல்பும் இவரது வானொலி நிகழ்ச்சிகளின் சிறப்பிற்கு காரணமாக இருப்பவை. சாதாரண மனிதர்களிடம் அறிய முடியாத பலவிடயங்களை இவர் சுவைபடக் கூறுவதால் அவை பாராட்டைப் பெறுகின்றன. மேலும், இலங்கை இந்தியா போன்று தமிழ் பேசும் நாடுகளிலுள்ள பிரபலங்களை நேர்முகம் செய்து அவற்றை நூலாக்கிய பெருமையும் இவரைச் சாரும். நேரடிச் செய்திகள், நேரடி நிகழ்வுகள், நேரடிக் கள அறிக்கைகள் என அனைத்துத் தளங்களிலும் சிறப்பாகச் செயல்படுபவர்.

புலம்பெயர் தேசத்தில் தமிழில் பேசி தமிழர்களை மகிழவைப்பதே ஓர் மகத்தானபணி. உலக நிலவரங்கள், ஊர் நிலவரங்கள், அரசியல், கலாசாரம், விழுமியங்கள் என அனைத்துத் தகவல்களையும் தன்னகத்தே கொண்டு, வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக இல்லாமல் மக்களின் நலன்களை நோக்காகக்கொண்டு பொறுப்புணர்வோடு தனது பணியைத் தொடர்ந்து வருகின்றார். ஈழத்து வட்டார மொழிகளை ஊடகங்களில் அறிமுகப்படுத்துவதில் இவரது பங்கு அளப்பரியது.

பொதுவாக ஊடகவியலாளர்களில் ஒரு சாராருக்கே கற்பிக்கும் தன்மையும் ஆர்வமும் இருக்கும். இவரிடம் கற்பிக்கும் திறன் இயல்பாக இருப்பதால் ஊடகத்துறைக்குள் புதிதாக நுழையும் இளம் சந்ததியினர் இவரிடமிருந்து ஊடகத் துறையின் அனுபவங்கள் மற்றும் அவற்றின் நேர்த்தி போன்றவற்றைக் கற்றுக்கொள்ள முடியும்.

இணையம் வழியாக சமூகவலைத்தளங்களும் இன்று வல்லமை பெற்றுள்ளன. சில சமூக வலைத் தளங்கள் எவ்வகையான அறிவுப்பரிமாற்றத்துக்கும் ஆற்றலற்றவை, வெறும் அரட்டைகளுக்கு அப்பால் அவற்றில் எதையும் காணமுடியாது. ஆனால் சமூகத்துடன் உரையாட தனது முகநூல் ஊடகப் பரப்பை சிறப்பாகச் சாத்தியமாக்கிக் கொண்டிருக்கிறார், ஆசி கந்தராஜா அவர்கள். பல விடயங்களையும் எளிமைப் படுத்தி மக்களின் பொதுச்சிந்தனைக்கு கொண்டு சென்று, ஆக்கபூர்வமான விவாதத்தையும் முடுக்கி விடுகின்றார். உரையாடல் தொடர்பை நிகழ்த்தும் ஊடகங்களே இன்று பொதுச் சிந்தனையை உருவாக்குபவை. அதன் மூலம் ஒரு சமூகத்தின் தேச உணர்வு, வரலாற்றுணர்வு, அரசியல் மாற்றம், சமூக அமைப்புகளின் தோற்றம், தனிநபர் உறவுகள் போன்றவை உருவாக்கப்படுகின்றன.

புலம்பெயர் சூழலில் ஊடகங்கள் வகிக்கும் பங்களிப்பு முதன்மையானது. அப்படிப்பட்ட அனைத்து ஊடகங்களின் வல்லமையையும் நுட்பமாகப் புரிந்துகொண்டு தன் எழுத்துப்பணிக்கும் அவற்றைப் பயன்படுத்திக்கொண்ட சிந்தனையாளர் ஆசி கந்தராஜா அவர்கள். அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் பற்றிய முழுமையான தகவல்களையும் அவரது முகநூலினூ



டாக எவரும் அறிந்து கொள்ளமுடியும். இதிலிருந்து அவரது அணுகுமுறையை அறிந்துகொள்ளலாம்.

இன்று ஊடகங்கள் மெல்ல மெல்ல சினிமாவை நோக்கிச் செல்வதைக் காணமுடிகிறது. ஆனாலும் சில தரமான வானொலி நிகழ்ச்சிகள் அறிவளிப்பை செய்து வருகின்றன. தரமான நிகழ்ச்சி, ஆழமான எழுத்து போன்றவை கிடைக்காமல் ஊடகங்கள் அவற்றைத் தேடும் அளவுக்கு இன்று ஊடகப்பெருக்கம் அமைந்துள்ளது. தரமான ஆக்கங்களைத் தயாரித்து வழங்கக்



கூடிய அறிவும், திறனும் கொண்ட ஆசி கந்தராஜா அவர்கள் உலகளாவிய ரீதியில் கவனம் பெற்றிருப்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

உன்னதங்கள் தானாகவே அடையாளப் படுத்தப்படும் அவற்றிற்கு அதிக விளம்பரங்கள் தேவையில்லை. ஆனாலும் சில நல்ல விடயங்களை உரத்துக் கூறவேண்டும். அப்போதுதான் அவர்களது படைப்பூக்கம் மேலும் மேம்படும். ஆசி கந்தராஜா அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் அவரது ஊடகப்பணி என்றும் நல்லதொரு அடையாளமாக விளங்கும் எனக்கூறி அவரது பணியை மனதாரப் பாராட்டி, போற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கறுத்தக்கொழும்பான்” சுவை நிறை பஞ்சாமிர்தம்

சிவகுருநாதன் கேசவன்




சிறுகதை, நாவல் என்கிற புனைகதைகளைப் படிப்பதைக் காட்டிலும் புனைவுக் கட்டுரைகளைப் படிப்ப தென்பது வித்தியாசமான, சுவாரஷ்யமான அனுபவம் தான். இரு துருவங்களினது இணைவின் வெளிப்பாடாக வாசகர்களைக் கட்டிப்போடும் வல்லமையை அது கொண்டிருக்கிறது. கட்டுரைகள் தகவல்களை, தரவுகளைத் தருகின்ற; கருத்துகளைத் தர்க்கித்து நிறுவுகின்ற பொதுப்போக்கினைக் கொண்டிருந்தாலும் வெவ்வேறான இயல்புகளையும் வெளிப்பாட்டுமுறை களையும் கொண்டிருக்கும். நிறைந்த தகவல்களைத் தரும் கருத்துச் செறிவோடும் சுவாரஷ்யத்தையும் ஆர்வ மூட்டலையும் தரும் புனைவுக் கோர்வையோடும் புனைவுக் கட்டுரைகள் இரட்டையனுபவத்தை வாசகர் களுக்குத் தருகின்றன. புனைவு தரும் அழகியல் நெகிழ்ச்சி பரந்ததும் ஆழமானதுமான தகவல்த் திரட்சியை வாசகனிடம் மகிழ்வனுபவமாகவே கொண்டு சேர்த்துவிடுகிறது. அதுதான் புனைவுக் கட்டுரைகளின் வெற்றியின் இரகசியம். இதனைப் “படைப்புக் கட்டுரை” என்றும் குறிப்பர். “ஆக்க இலக்கியம் படைக்கும் எத்தனங்களின் விகற்பங்களினால் உருவானதே படைப்புக் கட்டுரை என்னும் வகை. புதிய படைப்புத் தேவைகளின் குழந்தையே இந்த இலக்கிய வகை” என்கிறார் எஸ்.பொ. படைப்பாளியின் அறிவும் ஆற்றலும் அனுபவமும் ஆளுமையும் ஒரு படைப்புக்கு உயிரூட்டுகின்றன. குறித்த இலக்கை மையச்சரடாகக் கொண்டு, தகவல்களைத் தேவையான அளவில் தொடுத்து, அனுபவப் பகிர்வுகளைத் தூவி, புனைவுச் சரங்களால் அழகூட்டி வெற்றிகரமான புனைவுக் கட்டுரையைப் படைத்தல் என்பது பல்துறையாற்றலாளர் களுக்கே சாத்தியமாகிறது. இவர்களின் கைகளால் கிடைக்கின்ற புனைவுக்கட்டுரைகளே அறிவையும் மகிழ்வையும் புதிய அனுபவத்தையும் தந்து வாசகனைக் கட்டிப்போடுகின்றன.

**நுழைவு**

ஆசி.கந்தராஜாவால் எழுதப்பட்ட, புனைவுக் கட்டுரைகள் ஏழினைக் கொண்டுள்ள “கறுத்தக் கொழும்பான்”, நம்மை உலக சஞ்சாரத்திற்கு அழைத்துச் செல்கிறது. “உயிரியல் தொழில்நுட்பத் துறையில் பெற்ற ஞானத்தைக் குழைத்து, இத்தகைய படைப்புக் கட்டுரைகளை ஆசி.கந்தராஜாவைத் தவிர வேறு யாராலும் எழுத முடியாது” என்றும் “தன்னைக் கைதடித் தமிழன் என்று ஆசி. கந்தராஜா அடையாளப் படுத்துகிறார்” என்றும் எஸ்.பொ குறிப்பிட்டுள்ளமை நூலின் சிறப்பையும் நூலாசிரியரின் ஆற்றலையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றது. உயிரியல் தொழில் நுட்பத்துறையில் பெற்ற ஞானத்தோடு பயண அனுபவங் கள், புதிய மக்களையும் அவர்களது பண்பாடுகளையும் அறியும் ஆர்வம், அர்ப்பணிப்பு, உலகியல் மற்றும் வரலாற்றறிவு, அரசியல் பார்வை, சமூக நோக்கு, பிறந்தமண் மீதான பற்று, புனைவுத்திறன், மொழி யாளுமை முதலிய பல்வேறு இயல்புகளையும் ஒருங்கே பெற்ற ஆசி. கந்தராஜா போன்ற ஒருவரைத்தவிர வேறொருவரால் இத்தகைய படைப்பினைத் தருவது சாத்தியமில்லைத்தான்.

நூலில் முதலாவதாக இடம்பெற்றுள்ள “கறுத்தக்கொழும்பான்”. அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழும் மாம்பழப்பிரியர் ஒருவரின்(உடையார் மாமாவின்), கறுத்தக் கொழும்பான் மாமரத்தை சிட்னியில் வளர்க்கவேண்டும் என்ற ஆசையை மையப் படுத்தியதாவுள்ளது. “கறுத்தக் கொழும்பானின் சுவை யிலும் பார்க்க தமிழ் மொழியின் சுவை மேலானதும் பாதுகாக்கப்படவேண்டிய ஒன்றும்“ என்கிற உடையார் மாமாவின் ஞானத்தினால் நான் புதிது கற்றுக்கொண்ட உற்சாகம் பெறலானேன்” என்ற கட்டுரையின் நிறைவுப் பகுதி கட்டுரையின் செய்தியை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. “தல விருட்சம்” பனை மரத்தை மையப்படுத்தியது. “வரகு மான்மியம்” வரகு என்ற சிறுதானியத்தின் சிறப்புகளைப் பேசுகின்றபாங்கில் அமைந்தது. “சாத்தானின் விரல்களி”ல் முருங்கைக் காய்தான் நாயகன்/நாயகி. “இயலாமையின் மத்தியில் இயலுமானவற்றைப் பேசி மகிழுதல் மனித சுபாவம். இந்தச் சுபாவமே, இந்த முருங்கைக்காய்க் கட்டுரைக்குப் பின்னால் ஒழிந்து நிற்கிறதா?” என ஆதங்கத்துடன் ஆசிரியர் படைப்பை முடித்திருப்பது சிந்தனையைக் கிளறுவதாயுள்ளது. “கிழக்கும் மேற்கும்”, கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளை மையப்படுத்தியது. “கோளமயமாதல்”. உகண்டாவைச் சுற்றிவருகிறது. இதன் நாயகனாகப் பீற்றரைச் சொல்லலாமோ? “எல்லைகள் அறுந்து போன கோளமயமாதல் என்கிற வார்த்தைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தத்தினை, நாளை என் வீடு நோக்கிய பறப்பிலே தேடுவேனா?" என்ற கதாசிரியரின் ஏக்கத்தோடு நிறைவு பெறும் இப்படைப்பு முன்வைக்கும் சமூக விமர்சனங்கள் கனதியானவை. எதியோப்பியா, எரிற்றியா ஆகிய நாடு களைச் சுற்றிச் சூழன்றாலும் ஈழத்தமிழரின் அவலத்தை யும் பதிவுசெய்யும் படைப்பு "ஒட்டாத மண்". நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், மேற்குறித்த விடயங் களைப் பற்றியதாகத் தெரிந்தாலும் அவை அலசும் விடயங்கள் பல. சில கட்டுரைகளில் பிரதானமானது போல் தோன்றும் விடயம், வேறொரு விடயத்தை அழுத்தமாக உணர்த்தவே உத்தியாகப் பயன்பட்டது முண்டு.

**உள்ளீடு சதையும் சாறும்**

கறுத்தக்கொழும்பான் பல்வேறு துறைகளின்; விடயங்களின் சங்கமமாக, பஞ்சாமிர்தத்தைப் போலவே விளங்குகின்றது. ஒவ்வொன்றும் தனித்தனித் துறை களாக; விடயங்களாகத் தெரிந்தாலும் ஒன்றோடொன்று பிணைந்து; இணைந்து கலவையாக அது தரும் சுவை புதியது; அலாதியானது. ஒவ்வொரு துறைகளும்; விடயங்களும் தனித்தனியாகத் தரும் பரிமாணங்களை விட இந்நூலில் படைப்புக் கட்டுரைகளாகப் பெறும் பரிமாணம் வேறானது. இக்கூறுகளைத் தனித்தனி இயல்புகளோடு பிரித்துக்காண்பது கடினமானதேயா யினும் நூலின் கனதியைப் புரிந்துகொள்ளும் நோக்கில் பகுப்பாய்ந்துகாண முயற்சிக்கலாம்.

**அ. வாழ்க்கை முறைகளும் மக்களின் பண்பாடும்**

தென்னாபிரிக்கா, ஐக்கிய அரபு இராஜ்ஜி யத்தின் புஃஜேரா, கென்யா, தன்சானியா, கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகள், உகண்டா, எதியோப்பியா ஆகிய நாடுகள் தொடர்பான விடயங்களும் அனுபவங் களும் முறையே நூலிலுள்ள கட்டுரைகளில் விபரிக்கப் படும்பொழுது அந்தந்த நாடுகளினது மக்களின் வாழ்க்கைமுறைகள், பழக்க வழக்கங்கள், உணவு முறைகள் முதலான பண்பாட்டம்சங்கள் விபரமாகத் தரப்பட்டுள்ளன. அதேவேளை யாழ்ப்பாண மண்ணின்; தமிழர்களின் பண்பாட்டினைத் தெளிவாகப் பேசுவதற்கு, முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் தோட்டங்களில் நீர் இறைப்பதற்காகப் பயன்படுத்தப் பட்ட பாரம்பரிய நீர் இறைப்பு முறைகளான துலா மிதித்தல், பட்டைகளால் நீரூற்றல் முதலியன பற்றியும் பட்டைகளைச் செய்யும் முறைபற்றியும் துலாமிதிப் போரின் உடல்வாகு, அத்தொழிலுள்ள ஆபத்துகள் பற்றியும் துலாமிதிக்கையில் கூத்துப் பாடல்கள் பாடப் பட்மை பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மக்களின் உணவுகள் பற்றியும் அவற்றின் சுவை, சிறப்புகள் பற்றியும் பல இடங்களில் சிலாகித்துப் பேசப்பட்டுள்ளது. ஈச்சம் பழந்தின்னலில் தொடங்கிக் கடவுளுக்காகப் படையலிடப்படும் உணவுகளைச் சுவைத்தல்வரை விபரிக்கப்பட்டுள்ளன. முருங்கைக் காயுடன் இணைந்ததுதான் எமது ஈழக் கலாசாரம் எனத்தன் கருத்தினைப் பதிவுசெய்யும் நூலாசிரியர், முருங்கைக்காய் மற்றும் முருங்கையிலையின் நன்மைகளை மட்டுமன்றி முருங்கைக்காயின் தோலைச் சப்புதலின் பயன்பற்றியும் விஞ்ஞானபூர்வமாகச் சுட்டிக்காட்டி வியக்கவைக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் அடையாளமான பனைமரம் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர் அதன் பலவகைப் பயன்கள் பற்றிச் சிலாகித்திருப்பது சிறப்பானது. "பனையும் அதன் பானமும் அவற்றை உண்டு தமிழிலே களிப்புற்ற பாணருமே நமது தமிழ்க் கலை இலக்கிய வடிவங்களுக்கு முதன் முதலாக வடிவமும் வகையும் சுவையும் அளித்தனர்" எனப் பனை மரத்தைத் தமிழரின் பண் பாட்டோடு இணைத்துப் பேசியுள்ளார் ஆசிரியர். அதே வேளை போரினால் சுமார் 5,500,000 பனைகள் அழிந்து போனமை பற்றி வேதனையோடு சுட்டிக்காட்டியு முள்ளார். மிகக் கடினமான தொழிலாகப் பனைமர மேறும் தொழிலை குறிப்பிடும் ஆசிரியர் ஏறுபட்டி, தளநார், நெஞ்சுத்தோல், பாளைக் கத்திகளுடன் பனை மரமேறுபவரை நினைவுகூருகிறார். அன்றைய யாழ்ப் பாணத்தின் ஒற்றுமையான, மகிழ்ச்சியான கூட்டுக் குடும்ப வாழ்க்கை பற்றிப் பதிவுசெய்திருக்கிறார். பண வசதி இல்லாவிட்டாலும் வந்தவர்களையும் உறவினர் களையும் மனதார வரவேற்று உபசரிக்கும் யாழ்ப்பாணத் தாரின் விருந்தோம்பல் பண்புபற்றி வியந்து கூறியுள்ளார்.

எமது வழிபாட்டு முறைகள், அதனோடு தொடர்புபட்ட விடயங்களும் அழகாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன. தோட்டங்கள், பனங்கூடல்கள், வளவு களில் மரங்களுக்குக் கீழும் சிறு குடிசைகளிலும் உறைந்த அண்ணமார், வைரவர், புதிராயர், வீரபத்திரர் முதலிய சிறுதெய்வ வழிபாடுகள் பற்றியும் அவற்றிற்கு பொங்கல் மற்றும் படையலிடும் முறைகள் பற்றியும் விபரித்து, அக்கோவில்களை அண்டி நடைபெறும் கூத்துகள் பற்றியும் குறிப்பிடுகிறார். "வைரவர் வழிபாடு அனேகமாக யாழ் குடாநாட்டின் சமய வழிபாட்டு முறை யென்பது எனது அபிப்பிராயம். இந்தியாவில் வைரவருக் குத் தனியான கோவில்கள் இருப்பதாகத் தெரிய வில்லை" எனக் குறிப்பிடும் ஆசிரியர், போர்த்துக்கேயர் காலத்தில் வயிரவர் சூல வழிபாடு பரவலானமை பற்றிய வரலாற்றுச்செய்தியை எடுத்துக்காட்டி, விக்கிரகங்களை விட சூலங்கள் வழிபட எளிமையானவை என்பத னாலேயே சூல வழிபாடு பரவலானதாகத் தன்தாய் கூறிய காரணத்தையும் பதிவுசெய்துள்ளார். சூலங்கள் இலகுவில் சிலுவைகள் போல மாற்றப்படக் கூடியதாக இருந்தமையே சூல வழிபாட்டின் எழுச்சிக்கு அடிப் படைக்காரணம் என்பதையும் பதிவு செய்திருக்கலாம். கோவில் கோபுரக் கலசங்களில் வரகு முதலிய தானியங்களை நிரப்புகின்ற வழக்கம், தாவரங்களின் பரம்பரையலகுகளை பாதுகாக்க சைவத் தமிழ் மூதாதையர்கள் செயற்படுத்திய நடைமுறை என்பதனை விஞ்ஞான பூர்வமாக ஆசிரியர் பதிவுசெய்துள்ளார்.

மக்கள்தம் பண்பாட்டில் சில நம்பிக்கைகளும் நடைமுறைகளும் தொடர்ந்து பேணப்படுவது வழக்கம் தான். அவை பகுத்தறிவு சாராததாகவோ ஒவ்வா நடைமுறைகளாகவோகூட இருக்கலாம். இருந்தும் அவை தவிர்க்கமுடியாது தொடர்ந்து கொண்டே யிருக்கும். அத்தகைய விடயங்கள் சிலவற்றையும் நூலாசிரியர் பதிவுசெய்யத் தவறவில்லை. அரிசிச்சோறு சமைக்கும்போது உப்புப் போட்டால் வயல் உவர் பத்திப்போகும், வீடுகளில் விளையும் முருங்கைக் காய் முதலியவற்றைப் பிறருக்குக் கொடுத்தால்; பிறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் ஆசைப்பட்டால் கண்பட்டு குறித்த மரம் காய்க்காது முதலிய நம்பிக்கைகளை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். சீதன நடைமுறைகள் தொடர்பாக வேதனையுடன் சுட்டிக்காட்டவும் ஆசிரியர் தவற வில்லை.

**ஆ. நிகழ்வுகளும் வரலாறும்**

யாழ்ப்பாணத்தில் உடையார், மணியகாரர், விதானையார் போன்றோர் செல்வாக்குப் பெற்றிருந்த முறையும் அவர்கள் நிலபுலன்கள், சொத்துகள் சேர்த்த பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளன. என்.எம்.பெரேரா 1960ஆம் ஆண்டுகளில் நிதியமைச்சராக வந்து செய்த நிதிச் சீர்திருத்தங்களின் விளைவாகத் தோன்றிய "கள்ளுக் கோப்பரேஷன்" முறை, மரவரி முறை தொடர் பான தகவல்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம் தோற்றுவிக்கப் பட்டமை பற்றியும் இதன் செயலூக்கத்தினால் பொன். கந்தையா முதலாவது மார்க்ஸியவாதியாக பாராளு மன்றத்திற்குத் தெரிவானமை பற்றியும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தின் முக்கிய கல்வியாளர் களுள் ஒருவரான பேராசிரியர் கந்தையா, இலங்கையின் விவசாய முன்னேற்றத்திற்கும் பனை வளத்தைப் பெருக்கவும் மௌனமாகச் செய்த பாரிய பங்களிப்பை நூல் சுட்டிக்காட்டியுள்ளது. போராட்ட காலங்களில் பஸ் போக்குவரத்து இல்லாத நிலையிலும், கிளிநொச்சியில் இயங்கிய யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து மிதிவண்டியிலே சென்று பணி யாற்றிய பேராசிரியர், இத்தகைய பிரயாணமொன்றின் போது மரணித்தமையைப் பற்றி நூல் பதிவு செய்திருப்பது முக்கியமானது.

எழுபதுகளில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா "சோசலிஷ ஜனநாயகக் குடியரசாகப் பிரகடணப் படுத்தப்பட்டமை, சுதேசிய உணவு உற்பத்தியை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட தீர்மானம், இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடை, இவற்றால் ஏற்பட்ட நெருக்கடிகள், யாழ்ப்பாண விவசாயிகளின் எழுச்சி, யாழ்ப்பாணத்தில் புதிய பணக்கார வர்க்கம் உருவானமை முதலான விடயங்களும் எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற சுற்றிவளைப்புகள், கைதுகள், புலம்பெயர்வுக்கான தூண்டல்கள், ஒரு தாயே தாய் நாட்டுக்குத் திரும்பாதே என மகனுக்குக் கடிதம் எழுதிய துர்ப்பாக்கிய நிலைமை என்பவற்றையும் ஈழத்தமிழர் களின் புலப்பெயர்வுக்கும் இறங்கு துறையாகக் கிழக்குப் பேர்ளின் நகரம் உதவியமையையும் இந்நூல் ஆவணப் படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவிற்குக் கூலிகளாகக் கொண்டு வரப்பட்ட தமிழர்கள் உள்ளிட்ட தென்னிந்தி யர்கள் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் வணிக நோக்கங் கங்களுக்காகக் குடியேறி வணிகத்தை விரிவுபடுத்தி தென்னாபிரிக்காவரை வந்த குஜராத்திகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள், தமிழரான மன்றீ தமிழ் தெரியாத வராக இருக்கும் நிலை, அவரது பெயரான "மன்றீ" என்பது "மந்திரி" என்பதிலிருந்து வந்த முறை, "ஐயர்" என்பதன் அர்த்தம் தெரியாமலேயே ஐயர் என்ற பெயரோடு கிறிஸ்வராக வாழும் பெண் முதலிய சுவாரஷ்யமான தகவல்களையும் இன ஒதுக்கல் கடுமையாக இருந்த காலத்தில், கறுப்பர்களுக்கும் இந்தியர்களுக்கும் உயர்கல்வி மறுக்கப்பட்டதன் பின்னணியில், 1960ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியர்களுக்கான பல்கலைக்கழகக் கல்லூரி 1971ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமானமை பற்றியும் அங்கு மாணவர்கள், விரிவுரையாளர்களின் இனவிகிதாசாரங் களில் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் கென்யாவிற்கு இந்தியர்கள் கொண்டுவரப்பட்டமை, பின்னர் அவர் களின் வளர்ச்சி, இந்தியர்கள் மீது சுதேசிகளுக்கு ஏற் பட்ட துவேஷத்தின் அடிப்படை முதலான விடயங்களும் தரப்பட்டுள்ளன.

கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனிகளின் உருவாக்கம், அந்நாடுகளின் அரசியல் மற்றும் பொருளா தார நிலைமைகள், மேற்கு நாடுகள் மேற்கு ஜேர்மனியி னூடாக கிழக்கு ஜேர்மனிக்குக் கொடுத்த நெருக்கடி, சோவியத்யூனியனும் கிழக்கு ஜேர்மனியும் புலம்பெயரும் அகதிகள் விடயத்தை மேற்கு ஜேர்மனிக்கெதிரான ஆயுதமாக்கி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் அடித்தமை, கிழக்கு மேற்கு ஜேர்மனிகளின் இணைவு, இணைப்பின் பின் கிழக்கு ஜேர்மனியின் நிலை, உண்மை யான பொதுவுடைமைவாதிகளின் நிலை முதலானவை பதிவாகியுள்ளன. கிழக்கு, மேற்கு ஜேர்மனி நாடுகள் பற்றி விபரிக்கையில் அவற்றோடு ஒப்பிட்டு, இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான உடன்படிக்கைக் காலத்தில், யாழ்ப்பாண மக்களின் ஏ9 பாதையூடான யாழ்ப்பாணம் - கொழும்புப் பயணம் போன்றதுதான் எனப் பதிவுசெய்து, அந்தப் பயண அனுபவத்தின் அடிப்படையில் தனது மகள் வினாவிய "அப்பா வன்னி என்பது ஸ்ரீலங்காவைச் சேராத ஒரு தனி நாடா...?" என்ற வினாவையும் தந்திருப்பது முக்கிய மான வரலாற்றுப் பதிவாகவுள்ளது. எதியோப்பியா, எரிற்றியா நாடுகள் தொடர்பான வரலாற்றுச் செய்தி களும் தரப்பட்டுள்ளன.

**இ. மண்வாசனையும் மணப்பற்றும்**

நூலாசிரியரை விட்டுப்பிரியா அவரது மண்ணின் வாசனையும் மண்மீதான அவரது பற்றும் நூல் முழுவதிலும் பரவிக்கிடக்கின்றது. உடையார் மாமாவை கறுத்தக்கொழும்பான் மாம்பழம் மீது அதீத பற்றுக் கொண்டவராகவும் யாழ்ப்பாணத்துக்கே உரித்தான தாவர இனங்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆவலுடையவராகவும் அதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துபவராகவும் கண்டி, கன்னொருவ என்ற இடத்திலுள்ள பரம்பரை மூலங்களைப் பாதுகாக்கும் நிலையத்தில் எமது தாவரங்களின் பரம்பரை மூலங்கள் பாதுகாக்கப்படாமை குறித்து கவலையையும் அதிருப்தி யையும் வெளிப்படுத்துபவராகவும் காட்டுவதன் மூலமாக மணப்பற்றினையும் தமிழரான டொக்டர் மன்றீ தமிழில் பேசமுடியாதவராக இருப்பதையிட்டு கவலை கொள்பவராகவும் தமிழ் மொழியைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்ற ஆர்வத்தோடு செயற்பட முனைபவராகவும் முன்னிறுத்துவதன் மூலம் மொழி, இனப்பற்றினையும் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார் எனலாம். "தென்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்காவிலையும் மொறிசியஸ் தீவிலையும் தமிழ் அழிஞ்சதைத் தமிழ்க் காவலர்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டுதானே இருந்தவை" என்றும் "நமது நாளைய தலைமுறைகளின் நாவிலே தமிழ் வாழ்ந்திடவேண்டும்" என்றும் உடையார் மாமாவின் வாய்களினூடாக ஒலிப்பது ஆசிரியரின் குரலே எனலாம்.

அம்மாவின் வாயால், முருங்கையின் பெருமைகளைச் சிலாகித்துப் பேச வைத்திருப்பதும் பழப்புளியை மையப்படுத்தி யாழ்ப்பாணச் சமையல் முறைகளை வியந்து பேச வைத்திருப்பதும் ஆசிரியரின் மண்பற்றையே காட்டுகிறது. அவுஸ்திரேலியாவில் முருங்கை பயிரிட்ட பாலனும் தன்சானியாவில் முருங்கை பயிரிட்ட ராஜாவும் பெரும் இலாபம் சம்பாதித்தமையைச் சுட்டிக் காட்டுவதன் மூலமும் "ஆனால் நாம்?" எனக் கேள்வியெழுப்புவதன் மூலமும் சிறப்பாக முருங்கை விளையக் கூடிய மண்ணிலே அதைச் சாத்தியமாக்கவில்லையே என்ற ஏக்கத்தினை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். பனைமரத்தின் பயன்களையும் பெருமைகளையும் ஆசிரியர் விபரிக்கிறார். பனைமரங்கள் மிக உயரமாக வளர்வதால், இன்று அம்மரங்களில் ஏறி கள்ளிறக்க யாரும் முன்வருவதில்லை என்பதனைச் சுட்டிக்காட்டி, பேராசிரியர் கந்தையா குட்டைப் பனைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கூறியிருப்பதையும் பனைவள ஆராய்ச்சியில் கணிசமான பங்களிப்பை வழங்கிருப்பதையும் எடுத்துக்காட்டி பனை அபிவிருத்திச் சபை அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டிருப்பது எம்மால் கற்பக தருவாம் பனையிலிருந்து பொருளாதார ரீதியாக முழுப்பயனையும் பெற முடியவில்லையே என்ற ஆசிரியரின் ஆதங்கத்தையே வெளிப்படுத்துகின்றது.

#### ஈ. யாழ்ப்பாணப் பாரம்பரிய விவசாய முறைகளும் முயற்சிகளும்

யாழ்ப்பாண மண்ணில் புகையிலை, மிளகாய் முதலியன பொருளாதாரப் பயனைப் பெறத்தக்க வகையில் சிறப்பாக பயிரிடப்பட்டமை பற்றியும் புதிதாகத் திராட்சை வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டமை பற்றியும் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகள் மற்றும் விவசாயிகளின் அறிவும் ஈடுபாடும் பற்றியும் உரிய வேளைகளில் உரிய பராமரிப்பு வேலைகளை முன்னெடுத்தல், நீரிறைப்பு, நீரூற்றல், சாறுதல், வாடவிட்டு நீர்ப்பாய்ச்சல் முதலான செயற்பாடுகளைக் காலம் பார்த்து மேற்கொள்ளல் என யாழ்ப்பாண விவசாய முயற்சிகள் பற்றியும் பல்வேறு தகவல்களை நூல் பதிவுசெய்துள்ளது. "நமது முன்னோர்கள் பாவித்த விவசாய செய்முறைகளில் பாரிய விஞ்ஞானத் தத்துவங்கள் பொதிந்திருந்ததை நான் பின்னாளில் புரிந்துகொண்டேன். சோமநாதர் தாத்தாவின் தாவர உடற்றொழில் (Plant Physiology) தத்துவங்களை நினைத்து, பல்கலைக் கழகங்களில் விவசாய ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது வியந்திருக்கிறேன். தாவரங்கள் வாடுவதற்கும் பூப்பதற்கும் இடையிலான தாவர உடற்றொழில் தத்துவங்களை விஞ்ஞான மாநாடொன்றில் நான் ஆராய்ச்சிக் கட்டுரையாகச் சமர்ப்பித்துப் பரிசு பெற்றபோது சோமநாதர் தாத்தாவைக் கனிவுடன் நினைத்துக் கொண்டேன்" என்று ஆசிரியர் வாக்கு மூலம் தந்திருப்பதனூடாகப் பாரம்பரிய யாழ்ப்பாண விவசாயிகளின் அறிவுக்கூர்மையும் பட்டறிவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

#### உ. விஞ்ஞானத் தகவல்களும் அணுகுமுறைகளும்

கறுத்தக்கொழும்பான் என்ற நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளுக்கு புதிய பலத்தினையும் பரிமாணத்தையும் அதில் இடம்பெற்றுள்ள விஞ்ஞானத் தகவல்களும் அதுசார்ந்த அணுகுமுறைகளும்தான் வழங்கியுள்ளன. நூலாசிரியர் தாவரவியல் மற்றும் வேளாண் அறிவியல் துறைசார் நிபுணராக இருக்கின்றமை இத்தகைய வரப்பிரசாதத்தைக் கட்டுரைகளுக்கு வழங்கியுள்ளது. கட்டுரைகளில் விஞ்ஞானத் தகவல்கள் விரவிக் கிடக்கின்றன. தாவரங்களுக்குரிய தாவரவியல் பெயர்கள் தரப்படுதலில் தொடங்கி மரபணுமாற்றச் சாத்தியப்பாடுகளை இயம்புதல் வரைக்கும் எளிமையாக அறிவியல்சார் விடயங்கள் பேசப்பட்டுள்ளன. தாவரங்களின் குடும்பம், ஒத்த இயல்புகள், பழமரங்களின் வகைகள், இளைய ஒட்டுமுறை, இளைய வளர்ப்புமுறை, மரபணு சேகரிப்பு, மரபணுக்களைக் பாதுகாத்துப் பேணுதல், அவ்வாறு பேணுவதற்கான அவசியம், பரம்பரை அலகுகளைப் பாதுகாக்கும் நிலையம் (Germplasm Bank), பனை, பேரீச்சை முதலிய சில தாவரங்களில் காணப்படும் பால் வேறுபாடுகளும் அதன் விளைவுகளும், பெண் பேரீச்சை மரங்களை உருவாக்குதல், குட்டைப்பனைகளை உருவாக்குதலின் சாத்தியப்பாடு, IVF முறையில் கருத்தரித்தல் பற்றிய அடிப்படை விளக்கம், கருமுட்டை மற்றும் விந்தணுக்களின் சேகரிப்பும் வியாபாரமும், வாடகைத்தாய் முறைமை, முருங்கைக்காய் முதலியன தொடர்பாக உள்ள நம்பிக்கைகளுக்கான விஞ்ஞான விளக்கம், பசுமைக்கூட பயிர் வளர்ப்பு, சொட்டு நீர்ப்பாசனமுறை முதலான அறிவியல் தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

#### ஊ. சமூகப் பார்வையும் விமர்சனமும்

சமூகம் தொடர்பான தனது பார்வையையும் கரிசனையையும் சமூகச் செயற்பாடுகளையும் நடைமுறைகள் தொடர்பிலான விமர்சனங்களையும் பதிவுசெய்ய ஆசிரியர் தவறவில்லை. முதலாளித்துவம் வழங்கிய சுகபோக வாழ்வு வாழ்ந்துகொண்டு, தீவிர கம்யூனிசம் பேசும் போலிகளைப் பற்றிக் குறிப்பிட்டு, ஆசிரியர் நடைமுறைக் கம்யூனிசம் பற்றிய தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளார். சித்தாந்தங்களிலும் பார்க்கச் சிக்கலானவை நடைமுறைகள் என்பதைத் தான் ஜேர்மனியில் வாழ்ந்த காலத்தில் அனுபவத்தில் அறிந்துகொண்டதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதே வேளை, தன்னைக் கொம்யூனிஸ்ட் என்று அடையாளப் படுத்தாது வாழ்ந்த சோமநாதர் தாத்தாவைக் குறிப்பிடும் ஆசிரியர், அவரை மையப்படுத்தி "ஏட்டிலே கற்றுத் தேறுவதல்ல மனித நேயம். அது மனித மனங்களின் அருட்சுரப்பிலே தோன்றுவது" எனச் சுட்டிக்காட்டிக் காட்டுகிறார். "பணம் சுற்றிச் சுழலவேண்டியது" என்ற கார்ல் மார்கஸ் தத்துவத்தை குறிப்பிடும் ஆசிரியர், யாழ்ப்பாணத்தானுக்குச் சோசலிஷம் சரிவருமா எனத் தனக்கு அன்று ஏற்பட்ட ஐயத்துக்கு இன்றுவரை பதில் கிடைக்கவில்லை எனப் பதிவுசெய்திருப்பது மௌனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனமாகவேயுள்ளது. கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளின் இணைவின் பின்னரான நிலையில் பொதுவுடைமை பேசியவர்களில் பலர் பச்சோந்திகளாக மாறி முதலாளித்துவம் பேசத் தொடங்கிவிட்டமையைச் சுட்டிக்காட்டி கம்யூனிசம் நடைமுறையில் தோற்றதற்கு அவர்களைப் போன்றவர்களும் ஒரு காரணம் என்ற எரிக்கின் கூற்றையும் அவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள் என்ற மேரியின் கருத்தையும் ஒருங்கே தந்திருப்பது யதார்த்தத்தை உணர்த்துகிறது. அதேவேளை தான் கொண்ட கொள்கையை விட்டுவிட விரும்பாமல் தனது பேராசிரியர் பதவியை உதறிவிட்டுத் தச்சுத் தொழில் செய்யும் ஒருவரையும் எம்முன் நிறுத்துகிறார்.

கம்யூனிச நாடுகளின் ஆதரவோடு அங்கு கல்விகற்கச் சென்ற மாணவர்கள் தாம் சம்பாதித்த மேற்குலகப் பணத்தைக் கள்ளச் சந்தையில் மாற்றி, தமக்கு ஆதரவு தரும் கம்யூனிச நாட்டின் பொருளாதாரத்திலே பணவீக்கத்தை ஏற்படுத்த உதவியது மிகத் தவறான செயற்பாடு என்றும் சோஷலிச நாடுகளில் அக்காலத்தில் நிலவிய ஆடம்பர மோகத்தை மூன்றாம் உலக மாணவர்கள் சுரண்டி ஆதாயம் கண்டமை எத்தகைய தர்ம நியாயங்களுக்கும் ஏற்றதல்ல என்றும் ஆசிரியர் கண்டிக்கின்றார். "ஆடம்பரம்" என்ற மாயையைப் பற்றி அழுத்தமாக உணர்த்தும் ஆசிரியர், கடனுக்கு வாங்கிய பென்ஸ் காரின் பெறுமதி பூச்சியமாகிவிட அதற்காக வாங்கிய கடனோ பல மடங்காகிவிட்ட அவலத்தை எடுத்துக்காட்டி, ஆடம்பரப் பொருள்களுக்காக மேற்கு ஜேர்மன் நிறுவனங்களால் ஏமாளியான எரிக் உள்ளிட்ட மக்களின் அவலமான கதையைத் தெளிவாகப் பதிவுசெய்கிறார். இன்று யாழ்ப்பாணத்திலும் பலர் கடனாளியாகி நிற்பது இத்தகைய சுரண்டலினாலல்லவா?

உகண்டா நாட்டின் சுதேசிகளை எம்மவர்கள் நடாத்தும் முறைபற்றி "வயிற்றுப் பிழைப்புக்காக அவர்கள் நாட்டில் வாழ்ந்துகொண்டே அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக நடாத்துவது என்ன நியாயம்?" எனக் கேள்வி எழுப்புகிறார் ஆசிரியர். யாழ்ப்பாணத்தின் சீதனப் பிரச்சினையையும் உகண்டாவின் மணப்பெண் கூலி முறைமையையும் ஒப்பிட்டு விரிவாக அலசி அதன் பாதிப்புகளை எடுத்துக்காட்டும் ஆசிரியர், "என் நண்பன், பீற்றருக்குத் தன் தங்கையைக் கலியாணம் செய்து கொடுப்பானா? அன்றேல் மாஸ்டரின் தங்கையைக் கலியாணம் செய்யப் பீற்றர் முன்வருவானா?" என வினவுவதன் மூலம் இப்பிரச்சினைக்கான தீர்வொன்றை அமைதியாக முன்வைக்க முனைவது தெரிகிறது.

சோளமா ஏற்றிவந்த லொறி மினிபஸ்ஸூடன் மோதி விபத்துக்குள்ளானபோது, விபத்தில் காயமடைந்தவர்களை மீட்கும் அமளிக்குள்ளும் மறுபக்கத்தில் வீதியில் கொட்டுப்பட்டுக் கிடந்த சோளமாவை இரத்தத்தில் சகதியான பகுதியை விலத்திவிட்டு, இரத்தம் திட்டுத் திட்டாக படிந்திருக்கும் பைகளுக்குள்ளேயே அள்ளும் காட்சியும் அதற்குப் பிரதிபலிப்பாக "வயிற்றுப் பசி மனிதநேயத்தை வென்றுவிடும்" என்ற கூற்றை நினைவுபடுத்துவதும் காயப்பட்ட சாரதியை மீட்க முயன்ற வெள்ளைக்காரன் ஒருவனுக்கு "உன் கைகளில் காயம் ஏற்படுத்திக் கொள்ளாதே, இங்கு ஓடும் குருதியில் எயிட்ஸ் கிருமிகள் இருக்கக்கூடும்" என மனைவி எச்சரிப்பதும் எதியோப்பிய நிலைமைகளை உணர்த்துகின்றன. அதேவேளை "தொடர்புசாதனங்கள் விளம்பரப்படுத்தும் எலும்பும் தோலுமாகப் பட்டினியால் மரித்துக்கொண்டிருக்கும் மனிதர்களை எதியோப்பியாவில் தான் கண்டதில்லை" என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதனையும் கவனிக்கவேண்டும். எதியோப்பியா, எரிற்றியா ஆகியவற்றுக்கு இடையிலான கிளர்ச்சிகள், போர்களினால் தனது குடும்பத்தை இழந்து அனாதையான எட்வேட், பேராசிரியராக வேண்டும் என்ற தன் கனவை நிறைவேற்றும் செலவுகளுக்கான பணத்தை உழைப்பதற்கு வேறு மார்க்கமின்றி, தவறென்று தெரிந்தும் கேளிக்கை விடுதிகளுக்கு ஆள்பிடிக்கும் வேலையைச் செய்கிறான். அவனுக்கு நூலாசிரியர் ஆயிரம் Birr பணம் கொடுத்தபோது அவன் நன்றியுடன் கண்கள் பனிக்க நின்ற நிலையைப் பதிவு செய்ததிலிருந்து எதியோப்பியாவின் இன்னொரு யதார்த்தம் தெரியவருகிறது. "போரின் தாக்கத்தினால் நல்லொழுக்க விதிகள் செத்துவிடுகின்றன" என்ற எட்வேட்டின் கூற்று சிந்திக்கப்பாலது. எதியோப்பியா, எரிற்றியா என்பவற்றுக்கிடையிலான மொழிப்பிரச்



சினையின் அடிப்படையிலான முரண்பாடுகளையும் தனித்தனி நாடுகளான அவை இணைக்கப்பட்டமையையும் பின்னர் தனித்தனி நாடுகளானமையையும் இலங்கையின் இன முரண்பாடுகளுடன் ஒப்பிட்டு விபரித்திருப்பதும் இலங்கையில் நீதி நிலைநாட்டப்படாமை பற்றிச் சுட்டிக்காட்டியிருப்பதும் நியாயமான விமர்சனமே. இலங்கை தொடர்பான இந்தியாவின் முரண்பட்ட நிலைப்பாட்டினைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், இந்திய நாட்டின் வெளியுறவுக் கொள்கை வகுப்போர் எதியோப்பியாவின் வரலாற்றினை அசைபோட்டுப்பார்த்தல் நன்றெனக் குறிப்பிட்டிருப்பது நியாயமானதே.

**எ. நினைத்தலும் வியத்தலும்**

நூலாசிரியர் தனது நினைவுகளை மீட்டுப் பல தகவல்களை இந்நூலில் பரவலாகத் தந்துள்ளார். இதன் மூலம் இந்நூலுக்குச் சுய வரலாற்றிற்குரிய தன்மையையும் வழங்கியுள்ளார் எனலாம். தனது வாழ்க்கையில் ஜேர்மன் நாட்டிற்குரிய முக்கியத்துவத்தை அந்நாட்டை தன் "இரண்டாவது தந்தை மண்" எனக்குறிப்பிடுவதன் மூலமாக உணர்த்திய ஆசிரியர், அதற்கான காரணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக உலக வாழ்வின் இயல்புகளை இனங்கண்டு, தீதும் நன்றும் பகுத்தறியும் வாலிபப் பருவத்து பதின் மூன்று ஆண்டுகளை ஜேர்மன் மண்ணிலே களித்ததை யும் வாழ்க்கைக்கும் உழைப்புக்கும் ஏற்ற கல்வியைத் தந்து தன்னை மனிதனாய் நிமிர்ந்து நிற்கச் செய்த மண் அது என்பதையும் பதிவுசெய்துள்ளார். தனது முதல் விமானப் பறப்புப் பற்றி, முதன் முதலில் அப்பிள் சாப்பிட்டதுபற்றி, சிறு வயதில் தோட்டங்களில் திரிந்தது பற்றி, பலவகை உணவுகளைச் சுவைத்தமைபற்றி எனப் பல விடயங்களை ஆசிரியர் நினைவுபடுத்தி வியக்கிறார். தான் 1987இல் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்தமை, அதற்கான பின்னணி மற்றும் காரணங் களை நூலில் பதிவுசெய்துள்ளார். தன்னோடு கிழக்கு ஜேர்மனியில் படித்த சிங்கள நண்பனைக் கொழும்பில் சந்தித்தமை, அந்த நண்பன் பற்றிய பழைய நினைவுகள், அவனின் தற்போதைய நிலை என்பவற்றை மீட்டுத் தந்துள்ளார். இந்த மீட்டலில் கிழக்கு ஜேர்மன் பெண்கள் மேற்கு ஜேர்மனிக்குள் நுழைவதற்கான வாய்ப்பாக புலம்பெயர்ந்த இளைஞர்களைப் பயன் படுத்திய தகவல்களைத் தருகிறார். தன்னோடு ஒன்றாகப் படித்த மற்றொருவனான ஜேம்ஸ் சிமித்தை, மதுவுக்கு அடிமையானவனாக பேர்ளின் சுரங்க ரயில் நிலையத்தில் சந்தித்தமை பற்றியும், ஜேம்ஸ் சிமித்தின் இயல்புகள் பற்றியும் நினைவுகளை மீட்கும் ஆசிரியர் "எனக்கு எல்லாம் தெரியும். நான் சொல்வதைத்தான் மற்றவர்கள் கேட்கவேண்டும்" என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு சிமித்தின் வாழ்க்கையை ஒரு பாடமாகத் தந்துள்ளார்.

**படையல் அழகும் சுவையும்**

கறுத்தக்கொழும்பான் என்ற இந்த நூலில் இடம்பெற்றுள்ள புனைவுக் கட்டுரைகளின் எடுத்துரைப்புப் பாங்கில், ஆசி.கந்தராஜா தான் ஒரு கைதேர்ந்த புனைகதையாளன் என்ற தனது அடை யாளத்தை வலுவாகப் பதித்துள்ளார். வாசகர்களை ஈர்த்து சுவாரஷ்யமாக அழைத்துச்செல்லும் அவரது பாங்கு அலாதியானது. தேவையான இடங்களில் அவர் கையாண்டுள்ள வர்ணனைகள் நபர்களையும் காட்சிகளையும் சம்பவங்களையும் கண்முன்னே நிறுத்துகின்றன. அனுபவப் பகிர்வுகள் எமக்கும் அத்தகைய அனுபவத்தைப் பெற்றுத்தருகின்றன. அவர் வெளிப்படுத்தும் உணர்ச்சிச் சிதறல்கள் எம்மையும் அத்தகைய உணர்வுக்குள் இழுத்துச்செல்கின்றன. கருத்தாடல்கள், தர்க்கத்துடனான அலசல்கள் குறித்த விடயங்களின் நியாப்பாடுகளை வலுவாக வெளிப்படுத்தி நிற்கின்றன. சில இடங்களில் கதைசொல்லியாகவும் வேறுசில இடங்களில் வரலாற்றாசிரியனாகவும் இன்னும் சிலஇடங்களில் விமர்சகனாகவும் பல்பரிமாணத்துடன் கட்டுரைகளை வளர்த்துச்செல்ல முடிந்திருக்கின்றமை வியக்க வைக்கிறது.

நூலாசிரியர் இந்நூலில் காத்திரமாக மொழி யைக் கையாண்டுள்ளார் என்பது மிகையல்ல. யாழ்ப் பாண மக்களால் இயல்பாக கையாளப்பட்டுவந்த; இன்று வழக்கிழந்து வருகின்ற / வழக்கிழந்துவிட்ட பல சொற் களை இலாவகமாக ஆசிரியர் கையாண்டுள்ளார். விண்ணாணம், அடுகாணி-படுகாணி, கியாதி, தெறுக்கணித்து, விறுக்கர், கெப்பர், ஓட்டை ஒறுவாய் கள், வாகடம், காவு தீர்ந்துவிட்டது முதலான பல சொற்களை இந்நூலிலுள்ள கட்டுரைகளில் காணலாம். அத்தோடு எமது மரபிலுள்ள பழமொழி, சொலவடை, உவமைத் தொடர் முதலியனவும் தாராளமாகக் கையாளப்பட்டுள்ளன. சுட்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காப்பணம், கண்கெட்ட பிறகே சூரிய நமஸ் காரம், பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது, அறிஞ்சவன் அறிவான் அரியாலைப் பினாட்டை, ஆனையக் கட்டி தீனி போட்டது போல முதலான தொடர்களைக் கண்டு நயக்கமுடிகிறது. இவ்வாறான மொழிப் பிரயோகத்தால் இந்நூல் மொழியியல் ஆராய்ச்சிகளுக்கு உதவக்கூடும். தேவையான இடங் களில் ஆங்கிலச் சொற்களை, அம்மொழி எழுத்துக் களிலேயே கையாண்டிருப்பது கவனிக்கத்தக்கது. நூலாசிரியரின் மொழியாளுமை இந் நூலுக்குப் பலஞ்சேர்த்துள்ளது என்பதில் ஐயமில்லை. கவர்ச்சியும் எளிமையும் நிறைந்த ஆற்றொழுக்கான மொழிப் பிரயோகம் தொடர்ச்சியான வாசிப்பைச் சாத்தியப் படுத்துகிறது. நூலில் (முதற்பதிப்பு ஜனவரி 2014) கணிசமான இடங்களில் இருக்கும் எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

எள்ளலும் கிண்டலும் தொனிக்க நகைச் சுவை யுணர்வுடன் எழுதுவதில் ஆசி.கந்தராஜா வல்லவர்தான் என்பதனை நூல் உறுதிப்படுத்துகிறது. ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக இடையிடையே கிண்டலுடன் எழுதியருப்பதையும் பொருத்தமான இடங்களில் நகைச் சுவையைத் தெளித்திருப்பதையும் காணமுடிகிறது. பாலன் என்ற பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், "பிந்திக் கலியாணம் முடித்தாலும், நண்டும் சிண்டுமாக அவனுக்கு ஐந்து பெண் பிள்ளைகள். கிட்டத்தட்ட எல்லாம் ஒரே சைஸ். ஒரு பக்கத்தால் ஒன்று வந்தால் மறுபக்கத்தால் அதே சைஸில் இன்னொன்று வரும்" என்று கூறுவதிலும் "கைதடி முருங்கைக்காய் தாராள மாய் வேலை செய்திருக்கு" எனக் கிண்டலடித்ததைக் குறிப்பிடுவதிலும் நக்கலும் நையாண்டியும் தாராளமா கவே தொனிக்கின்றன. கிழக்கு ஜேர்மனியில் ஒன்றாகப் படித்த நண்பனை கொழும்பில் சந்தித்த சந்தர்ப்பத்தைக் குறிப்பிட்டு அவனைப் பற்றி எழுதும்போது "வெள்ளைத் தோலுக்கும் வெந்தயக் குழம்புக்கும் ஒரே நேரத்தில் ஆசைப்படக்கூடாது" என்பதிலும் நகைச்சுவை தொனிக் கக் காண்கிறோம். இவ்வாறு பலவற்றைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

ஆழமான அறிவியல் விடயங்களுடனும் உணர்வுபூர்வமன அனுபவப் பகிர்வுகளுடனும் கூர்ந்த விமர்சனப்பார்வையுடனும் நேரிய வரலாற்று உணர்வுட னும் படைக்கப்பட்டுள்ள "கறுத்தக்கொழும்பான்" எடுத்துரைப்புமுறையாலும் மொழியாட்சியாலும் சுவைமிகு இலக்கியமாகிறது. இது புலம்பெயர் இலக்கியங்களுக்கு அடையாளந்தரும் ஒன்று என்பதிலும் ஆசி.கந்தராஜாவின் படைப்பாளுமைக்குச் சான்றுசேர்ப்பது என்பதிலும் ஐயமில்லை. அதேவேளை புனைவுக் கட்டுரை என்ற வகைமையை தமிழிலக்கியப் பரப்பில் நிலைநிறுத்தவும் "கறுத்தக்கொழும்பான்" பங்களிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "அகதியின் பேர்ளின் வாசல்"

## ஈழத்தமிழ் பண்பாட்டு உருமாற்றத்தின் குறுக்கு வெட்டு முகம் ஆசி கந்தராஜாவின் சமீபத்திய நாவலை முன்வைத்து

■ அலைமகன்

ஒரு ஈழத்தமிழனுக்கு உலகம் என்பது ஐரோப்பாவும் அமெரிக்காவுமே ஆகும். இவர்களில் கிழக்கு ஐரோப்பிய அனுபவங்களை பெற்றவர்கள் குறைவு, அதிலும் அதனை முறையாக பதிவு செய்தவர்கள் ஈழத்தில் மிகக்குறைவு. இருந்தாலும் இன்று உலகமெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழர்களின் வாழ்வில் கிழக்கு ஐரோப்பா, அதிலும் குறிப்பாக கிழக்கு ஜெர்மனியின் பங்களிப்பு மிக அதிகம். எனது சிறு பராயத்தில் எனதூரில் இருந்து வெளிநாடு செல்பவர்கள் எப்போதும் ஜெர்மனிக்கே செல்வது வழக்கம். அந்த மர்மத்தை சரியாக அறிந்துகொள்ள பனிப்போர் கால கிழக்கு மேற்கு ஐரோப்பிய அரசியல் பற்றிய தெளிவான புரிதல் தேவைப்படுகிறது. கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனியின் அனுபவங்களை பனிப்போர் சூழலின் பின்னணியில் விவரிக்கும் நாவல், அகதியின் பேர்ளின் வாசல்.

நாவலாசிரியர் ஆசி கந்தராஜா சோவியத் ஒன்றியம் பலமாக இருந்த காலத்திலும் அது உடைந்து பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டு ஜெர்மனி ஒன்றாகிய போதும் கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனிகளில் கல்வி பயிலவும், வசிக்கவும், மிக முக்கியமான வரலாற்று சம்பவங்களுக்கு நேரடி சாட்சியாக இருக்கவும் அரிய வாய்ப்பை பெற்றவர்.

ஏற்கனவே விஞ்ஞான புனைவு கட்டுரைகள் மூலம் தமிழில் தடம் பதித்த ஆசிரியர் இந்த நாவலை ஒரு வரலாற்று புனைவாக தந்திருக்கிறார். வரலாற்றுப் புனைவு என்று கூறும்போது நாம் அறிந்த சரித்திரப் புதினங்களுடன் இதனை குழப்பிக் கொள்ளக்கூடாது. நாவலாசிரியர் தனது நாவலில் சித்திரிக்கும் வரலாற்றுக் காலகட்டத்தில் கூடவே வாழ்ந்து பயணித்திருக்கிறார் என்பது தான் இங்கே உள்ள சிறப்பம்சம்.

பாலமுருகன், தவராசா எனும் இரண்டு இளைஞர்களை சுற்றி கதை ஆரம்பித்து நகர்கிறது. முதலாவது பகுதியில் அந்தக்கால யாழ்ப்பாண வாழ்வியலின் கோலங்கள் விவரிக்கப்படுகின்றன. 1970களின் பிற்பகுதியில் வெளிநாட்டுக்கு போய் வந்தவர்கள் மீதான மோகம் மிக அதிகமாக இருந்தது. அவ்வாறு திரும்பி வந்தவர்களின் பெற்றோரும் உறவினர்களும் அவர்களை வைத்து சமூகத்தில் காட்டிய வீண் பெருமிதமும், திமிரான நடத்தைகளும் பிற்காலத்தில் அதிகளவான தமிழர்கள் வெளிநாடு சென்றபோது அவ்வாறே அவர்களும் இங்கித குறைவாக நடந்துகொள்ள முன்மாதிரியானது. யாழ்ப்பாண தமிழர்களின் மெய்யான பெருமிதங்களைத்தாண்டி எம்மிடையே காணப்படுகின்ற இங்கித குறைவான நடத்தைகளை நாவல் பல இடங்களில் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. உதாரணமாக பாலமுருகன் இலங்கைக்கு வந்தபின்னர் அவனை "மடக்கி போட" பல உறவு குடும்பங்கள் முயலுவது நாவலில் வருகிறது. மனதார பேசி உறவுகளை அமைத்துக்கொள்ளாமல் இப்படி தவிச்ச முயல் அடிக்க முற்படும்போதுதான் குடும்பம் என்பது ஒரு வன்முறையான அமைப்பு என்ற கூற்றை நினைக்கத்தோன்றுகிறது.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததும், மேற்கு கிழக்கு இடையே உருவான பொருளாதார கொள்கை வேறுபாடுகள் பனிப்போருக்கு வழி வகுத்தது. கிழக்கு மேற்கு ஜேர்மனி இடையே பனிப்போர் நடந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தபோது வல்லரசுகள் தங்கள் நலன்களுக் காக செய்துகொண்ட பொட்ஸ்டம் உடன்படிக்கையும் கிழக்கு மேற்கு ஜெர்மனி இடையே வரையப்பட்ட பிரிகோடும் இருபகுதி ஜெர்மனியர்களுக்கும் நன்மை பயத்ததோ இல்லையோ நிச்சயமாக ஈழத்தமிழர்களுக்கு பெரும் நன்மை பயத்தது. அக்காலப்பகுதியில் உருவான உள்நாட்டுப்போர் இடம்பெயர்வை தூண்டியதுதான் என்றாலும் ஏன் எல்லோரும் முதலில் ஜெர்மனியை தேர்ந்தெடுத்து குடிபெயர்ந்தார்கள் என்பதன் மர்மத்தை விளங்கிக்கொள்ள இந்த நாவலை வாசிக்கவேண்டும். அந்த உடன்படிக்கையின் சரத்துக்களில் உள்ள ஓட்டை களை பயன்படுத்தி வெகு தந்திரமாக முடிந்தவர்கள் தப்பித்துக்கொண்டார்கள். இந்த வாசல் வழியாக தப்பியவர்கள் பலவேறு காரணங்களை புனைந்து இடம் பெயர்ந்தமை கண்கூடு. இந்த புலம்பெயர்வு ஈழத்தமிழர் களின் வாழ்வியலில் மிகப்பெரிய பொருளாதார, கலாச்சார மாற்றங்களுக்கு வழிவகுத்தது.

இயக்க மோதல்கள் இடப்பெயர்வுக்கு முக்கிய காரணம் என்பதுபோல ஒரு சித்திரம் சில இடங்களில் காட்டப்படுகிறது. ஆனால் அது ஒரு உப காரணம் மட்டுமே. தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி யமைக்கான மூல காரணங்கள் மிகத்தெளிவானவை. அந்த மூல காரணங்கள் இன்னமும் முழுமையாக அகன்றுவிடவில்லை. இவை பல முறை விவாதிக்கப் பட்டு விட்டன. நாவல் மூலகாரணத்தை தொட்டுக்காட்டி யிருந்தால் முழுமையாக இருந்திருக்கும். தமிழர்களின் வாழ்வியலில் இந்த இடப்பெயர்வு மிகப்பெரிய உரு மாற்றத்தை கொண்டுவந்தது என்பது வெளிப்படை யானது. ஆனாலும் தமிழர்களின் பண்பாட்டில் இந்த உருமாற்றம் நேர்மறையானதா அல்லது எதிர்மறை யானதா என்பது விவாதத்துக்கு உரிய ஒன்றுதான். வரலாறு அதை முடிவு செய்யும் என்று விட்டுவிடலாம்.

புலப்பெயர்வின் பல்வேறு நிலைகளிலும் ஏற்படும் பண்பாட்டு மாற்றங்கள் நாவலில் தெளிவாக காட்சிப் படுத்தப்படுகிறது.

புலப்பெயர்வின்போது மனிதர்களின் கனவு தேசத்தில் இடம்பெறும் மாற்றங்கள் ஒருபுறம். அதை விட இடைத்தங்கல் பிராந்தியங்களில் இடம்பெறும் மாற்றங்கள் பெரும்பாலும் சோகமயமானவை. மும்பை தாராபியில் வளர்மதிக்கு நடந்த சோகங்கள் இன்றும் முடிவற்றவை என்பதுதான் துயரம். ஆனாலும் மிகுந்த கட்டுப்பெட்டித்தனமாக வளர்க்கப்பட்ட யாழ்ப்பாணத்து பெண்கள் புலப்பெயர்வு மீது கொண்ட மோகத்தால் தமது தளைகளை தகர்க்க தயங்கவில்லை. யாழ்ப் பாணத்தின் இழிபுகழ் பெற்ற கிடுகு வேலி கலாச்சாரம் உடைந்ததில் இந்த புலப்பெயர்வு முக்கிய பங்கு வகிக் கிறது. அடிப்படையில் பொருளாதார அடிக்கட்டுமானமே மொழி, பண்பாடு போன்ற மேற்கட்டுமானங்களை தீர்மானிக்கிறது என்ற கார்ல் மார்க்ஸின் கூற்று இந்த விடயத்தில் அச்சொட்டாக நிரூபிக்கப்படுகிறது.

நாவலின் முக்கிய விவாதப்பொருளாக இருப்பது முதலாளித்துவ, சமதர்ம பொருளாதாரங்களுக் கிடையேயான முரண்பாடுதான். கிழக்கு ஜெர்மனியின் நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் நுட்பங்கள் (Nuances) நாவலில் விரவிக்கிடக்கிறன. வாழைப்பழம் ஆடம்பரமாக காணப்பட்ட கிழக்கு ஜெர்மனியின் உணவு முறை, கிழக்கு ஜெர்மனியின் கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டு அதன் பொருளாதாரத்தை சிதைக் கும் வெளி நாட்டு மாணவர்கள், தமக்கு வழங்கப்பட்ட சலுகைகளை பயன்படுத்தி மேற்கு ஜெர்மனியில் பணம் பார்க்கும் மாணவர்கள் என்பதாக பல உதாரணங்கள். மக்களிடம் காணப்படும் ஆடம்பர மோகத்தை மேற்குலக நாடுகள் கிழக்கே கம்யூனிச சித்தாந்தத்துக்கு எதிராக பாவித்து குழப்பம் விளைவித்ததை நாவலில் நாம் காண முடிகிறது.

பெர்லின் சுவரின் இருபுறமும் இடம்பெறும் ஆட் கடத்தல், போதைப்பொருள் பாவனை, பணப்பரி மாற்றம் போன்ற நிகழ்வுகளை நாவல் பிரதான கதையினூடாக விவாதிக்கிறது. கிழக்கு ஜெர்மனியின் பல்கலைக் கழகங்கள் கீழைத்தேய மாணவர்களுக்கு கம்யூனி சத்தை பாடங்களுடன் இணைத்து பிரச்சாரம் செய்தன என்பது நமக்கு புலனாகிறது. பாலமுருகன் தனது பேராசிரியருடன் விவாதிக்கும்போது எழுப்பும் கேள்வி களும் அதற்கான உதாரணங்களுடனான விவரிப்பும் கொண்ட அத்தியாயங்கள் சுவாரசியமான பொருளாதார வகுப்பை ஞாபகப்படுத்துகிறது.

யாழ்மண்ணில் ஏன் கம்யூனிச தத்துவம் வேரூன்றவில்லை என்பது விவாதிக்கப்படவேண்டிய ஒரு கேள்வி. அரை நிலமானிய சமூகம், சாதியம், மதம் என்று பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அடிப் படையில் யாழ் சமூகம் ஒரு வலதுசாரி சமூகம்தான். அந்த சமூகத்தில் இருந்து வரும் இளைஞன் முற்றிலும் மாறு பட்ட ஒரு கலாச்சார, அரசியல் பின்னணி கொண்ட நாட்டுக்கு படிக்கப்போகும்போது ஏற்படும் தடு மாற்றங்கள், ஏக்கங்கள், வேதனைகள் என்பவற்றை நாவல் முழுவதும் காண முடிகிறது.

ஒரு பாலின சேர்க்கை, இரு பாலினர் திருமணம் போன்ற வழக்கங்கள் இலங்கையில் இன்னும் சமூக பிறழ்வாகவே பார்க்கப்படுகின்றன. ஆனால் இன்று இவைபற்றி பரவலான விவாதங்களை புலம்பெயர் தமிழ் சமூகத்தில் காண முடிகிறது. சாதாரண பாலியல் வேட்கை கொண்ட சராசரி "யாழ்ப்பாணத்து பெடியன்" தவராசா தனது முதிர்ந்த வயதில் தன்னின திருமணம் செய்துகொண்டதை காணும்போது ஈழத்தமிழ் சமூகத்தில் பண்பாட்டு மாறுதல்களை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம் என்று விளங்குகிறது.

வரலாற்றின் மிக முக்கிய கால கட்டத்தை மிக விரிவான விளக்கங்களுடனும் விவாதங்களுடனும் நகர்த்தும் இந்த நாவல் வாசகனுக்கு யாழ்ப்பாண வழக்காறுகளை நினைவுறுத்தி வாசிப்பின்பத்தை வழங்குகிறது. ஈழத்தமிழ் சமூகத்தில் புலப்பெயர்வு மூலம் இடம்பெற்ற பண்பாட்டு மாற்றங்களின் ஒரு குறுக்குவெட்டு தோற்றத்தை தருகிறது. இந்த நாவலை நீங்கள் வாசிக்கும்போது கிழக்கு ஜெர்மனியின் மேதின ஊர்வலத்தில் செம்படையுடன் செங்கொடி ஏந்தி நடை போடலாம். சுவையான வோட்காவை ருசிக்கலாம். உங்கள் வெளிநாட்டு காதலியுடன் இரவு விடுதியில் நடனமாடலாம். அவளுடன் நள்ளிரவில் வீடு திரும்பும் போது எல்லையில் ஒரு தமிழ் குடும்பம் குளிரில் சோகத் துடன் காத்து நிற்பதை பார்ப்பீர்கள். விடிவதற்கிடையில் அவர்கள் எல்லையை கடந்து மேற்கு ஜெர்மனிக்குள் செல்லவேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரஞ்ஜனி சுப்ரமணியம்**

புனைவுலகம் எனும் பெருவெளிக்குள் பன்னாட்டு கலாசார பண்பாட்டு அனுபவங்களை மூலதனமாகக் கொண்டு, மானுட இயல்புகளை ஆராய்வதோடு தனது மண்சார்ந்த உணர்வு களையும் துறைசார் அறிவியலையும் அதே புனைவுலகத்திற்குள் எடுத்தாளக் கூடிய திறமையும் உயர்புலமையும் சில படைப்பிலக்கிய வாதிகளுக்கு வரமாக அமைவதுண்டு.

மனித மனங்களை ஊடுருவிப் பார்க்கக் கூடிய வல்லமையுடன் , வேறுபட்ட கலாசாரங் களைச் சார்ந்த சமுக நடத்தைகளை ஒப்பிட்டு, கேள்விக்கு உட்படுத்தி சீர்தூக்கி ஆராயும் மதி நுட்பம் ஒரு படைப்பாளியின் படைப்புத் திறனை மேலான உயரங்களுக்கு கொண்டு செல்லக் கூடியது. ஈழத்து இலக்கியப்பரப்பிற்கு வளம் சேர்த்த இவ்வாறான புலம்பெயர் எழுத்தாளர் களிடையே சிறப்பானதோர் இடத்தைத் தனக்கென தக்க வைத்தவர்களில் மேனாள் பேராசிரியர் ஆசி கந்தராஜா மிக முக்கியமானவர்.

பிரபல எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்கள் "இரட்டிப்பு மகிழ்ச்சி" என இந்நூலுக்கு எழுதிய முன்னுரையில், தனக்குத் தெரிந்து சிறுகதைகளைத் தொடர்ந்து எழுதும் தமிழ் விஞ்ஞானி ஆசி கந்தராஜா அவர்களே எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கதைகள் தனியே விஞ்ஞானம் பற்றிப் பேசுபவையாக இல்லாமல் பல்வேறு நாட்டு மக்களின் வாழ்க்கைமுறை, கலாசாரம், வரலாறு போன்றவற்றிலும் வாசகருக்கு பரிச்சயம் ஏற்பட வைப்பதாகக கூறுகிறார்.

கறுத்தக் கொழும்பான் என்னும் புனைவுக் கட்டுரைத் தொகுதிக்கு "பயணியின் புன்னகை" என்ற தலைப்பில் முன்னுரை எழுதிய பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள், "அ.முத்துலிங்கத்தின் உலகைச்சேர்ந்த இன்னொரு எழுத்தாளர் ஆசி கந்தராசா. முத்துலிங்கத்தின் மொழிநடையை ஆசி கந்தராசா நினைவுபடுத்துவது சொற்றொடரமைப்பி னால் அல்ல, உள்ளார்ந்த புன்னகையின் வெளிச்சத்தால்தான். உள்ளே விளக்கேற்றி வைக்கப் பட்ட படிகக்கட்டிபோல மொத்த எழுத்தையும் அந்தப்புன்னகை மிளிரச்செய்துவிடுகிறது" என்கிறார்.

ஆசி அவர்கள் யுத்த சூழ்நிலையால் புலம்பெயர்ந்தவர்களில் இருந்து வேறுபட்டு, அதற்கு சற்று முன்னைய காலத்திலேயே புலமைப்பரிசில் கல்விக்காக புலம்பெயர்ந்தவர் . தனக் கென அறிவியல் மற்றும் பொருளாதார ரீதியில் பலம்பெற்று உயர்நிலை அடைந்த பின் சிறு வயதில் ஆர்வம் கொண்டிருந்த இலக்கியத் துறையில் தனது எழுத்தாண்மையை நிரூபித்தவர்.

அதனால் சமரசங்கள் எதுவுமற்று நினைத்ததை வெளிப்படுத்தும் உள நேர்மையுடன் எழுத்துலகில் தடம் பதித்தவர்.

# கலைமுகங்கள் கூறும்
# ஆசி கந்தராஜாவின் "கள்ளக் கணக்கு" சிறுகதைத் தொகுப்பு
# ரசனைக் குறிப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய தனது அனுபவங்களைப் படைப்புலகில் புனைவு மொழியாகக் கூறியவர். புலம்பெயர்ந்தோரின் வலிகளை மட்டுமே கூறாமல் புதிய தேசத்தில் நிலைகொள்வதில் அவர்கள் முகம்கொடுத்த பொருளாதார சிக்கல்களையும் கலாசார பண்பாட்டு உரசல்களையும் படைப்புக்குள் கொண்டு வந்தவர்.

புலம் பெயர்ந்த நாடுகளின் மாற்றுக் கலாசாரங் களையும், அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளையும் கூடவே கருவாக்கி கதை புனைந்திருக்கிறார்.

இலக்கிய உலகில் இவர் ஒரு ஒட்டுகன்று என்று அவரது அறிவியல் மொழியிலேயே கூறலாம். பூங்கனி யியல் விவசாய விஞ்ஞானி எனும் வீரியம் மிகுந்த ஒட்டுக் கட்டையில், பலன்தரு ஒட்டுத் தண்டாக வளர்ந்தவர் தான் எழுத்தாளர் ஆசி.கந்தராஜா. வேறோர் வகையில் தனது வாத்சல்யம் மிகுந்த வேர்களைத் தாயக மண்ணில் ஊன்றி புலம்பெயர் தேசத்தில் கிளை பரப்பிய பெருவிருட்சம் எனவும் கூறலாம்.

பன்முக ஆளுமைகள் நிறைந்த இவர் சிறந்த கல்விமான், புகழ்பூத்த எழுத்தாளர், பேச்சாளர், வானொலியாளர், நாடகக் கலைஞர், ஏன் நல்ல சமையல் கலைஞரும் கூட. இலங்கை அரசின் சாகித்திய விருதினை இரு தடவைகள் பெற்றவர். அண்மையில் வெளிவந்த "அகதியின் பேர்ளின் வாசல்" அரச சாகித்ய விருதுக்காக (2024) பரிந்துரை செய்யப்பட்ட மூன்று நாவல்களில் ஒன்றாகும்.

இவரது சிறுகதைத் தொகுப்புகளில் முக்கிய மான மைல்கல்லாக விளங்குவது கள்ளக்கணக்கு எனும் தொகுப்பு. 2018 வரை வெளிவந்த இவரது சிறுகதை களில் மிகச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து தமிழக "காலச்சுவடு" பதிப்பகம் வெளியிட்ட கலாசாரக்கதம்பம் இது.

கள்ளக்கணக்கு நூலுக்கு இந்திய தமிழக அரசின் மதுரை தமிழ்ச்சங்க விருதும் , திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கிய விருதும் வழங்கப்பெற்ற கௌரவத் தினைக் கொண்டவர். இவை அவரது எழுத்தாண்மைக் கும், உண்மையான உழைப்புக்கும் கிடைத்த உயரிய விருதுகள். இந்த நூல் சிங்களமொழியிலும் "கெய்கோ " என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டது .

பத்துக்கும் மேற்பட்ட உலகநாடுகளைத் தளமாகக் கொண்ட பதின்மூன்று சிறுகதைகளின் தொகுப்பு இது. வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங் களை, அழகுகளை, அவலங்களைத் தேசம்கடந்த உணர்வுடன் நம் கண் முன்னே காட்சிப்படுத்துகின்றது.

இக்கதைகள் கூறும் கருப்பொருள் சார்ந்து சில வகைமைகளுக்கு உட்படுத்தலாம்.

*உலகெங்கும் சிறுவர் மேல் பிரயோகிக்கப்படும் கல்வி கலாசார பாலியல் யுத்தநிலை அழுத்தங்கள்"

*பெண்களின் மீதான அடிமைப்படுத்தல்கள், ஆணாதிக்கம், ஏனைய மன அழுத்தங்கள் "

*புலம்பெயர்வினால் உருவான கலாசார பண்பாட்டு முரண்பாட்டுச் சிக்கல்கள் "

*ஏனைய மனிதமன அவசங்கள்"

என்ற தளங்களின் மேல் இவரது புனைவுகள் உரையாடுவதை உணரலாம்.

சிறுவர்களின் உலகம் அழகானது. கல்வி அறிவினை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகளால் சின்னஞ்சிறார்களுக்கு சொந்தமான இந்த அழகிய உலகம் சிதைக்கப்படும் அவலம் பலரது கண்களுக்குத் தெரிவதில்லை.

போட்டிப் பரீட்சைகளுக்கு அதிர்ச்சி தரும் இன் னொரு முகம் உண்டு. இவை மேலதிக அறிவுத் தேடலுக்கு வழிவகுக்கும் என்பது உண்மையெனினும், அதில் தோல்வி அடைந்தவர்கள் எதிர்கொள்ளும் தாழ்வுச்சிக்கல்கள், மனவதைகள், தற்கொலைகள் முதலானவை இப்பரீட்சைகள் சிறார்களுக்குத் தேவை தானா என்ற மாற்று மனநிலையையும் தோற்றுவிக் கின்றன.

நல்லதோர் உதாரணமாக இலங்கையின் ஐந்தாம் தர புலமைப்பரிசில்களைக் கூறலாம். இங்கு பெற்றோரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் இயந்தி ரங்களாக சிறார்கள் வடிவமைக்கப்படுவது துயரமானது.

பின்லாந்து முதலான மேற்குலக நாடுகளின் கல்வி முறையில் சிறுவர் கல்வி எத்துணை மகிழ்வான அனுபவமாக இருக்கிறது என்பது வியப்புக்குரியது. இங்கு கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்க வேண்டுமென்ற மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை என அறியக் கிடைக்கிறது.

போட்டிப்பரீட்சையில் தோற்கும் கெய்கோ என்ற ஜப்பானியச் சிறுமி, தனது எதிர்கால கனவு சிதைந்து போனதால் தற்கொலை செய்து கொள்கிறாள். இயந்திர மயமான வாழ்வில் அவளது இறப்பும் "பத்தோடு பதினொன்றாய்" பதியப்படும் அவலத்தை ஒரு சிறுகதை கூறுகிறது. தேன் சுவைக்காத தேனீ அவள்.

"புகலிடம்" என்னும் படைப்பில் சிரிய அகதிச் சிறுவர்கள் தாம் தஞ்சம் புகுந்த நாடுகளில் எதிர் கொள்ளும் பசி பட்டினி, பெற்றோரின் இழப்பு, பாது காப்பின்மை பாலியல் வதைகள் உட்பட்ட அவலங்களை வாசிக்கும் போது, எமது தாயகத்தில் நடந்த யுத்தத்தின் பேரவலங்களை ஒத்து நோக்கிக் கலங்காமல் இருக்க முடியாது.

அதிகாரப் போட்டிகளுக்கும் வளங்களுக்குமான யுத்தம் என்பது சிறுவர்களினதும் பெரியவர்களினதும் மனநிலையை எவ்வாறு சிதைக்கின்றது என்பதற்கான உதாரணங்கள் உலகெங்கும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன.

இன்று பாலஸ்தீனம், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் வரை இந்த பேரவலம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

கலாசார வேறுபாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சிக்கலை புலம்பெயர்வுகள் ஏற்படுத்து கின்றன. வளர்ந்தோரை விட இளையவர் இதனால் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். சிறுபிராயத்தில் மேற்குநாட்டவரைப் போல சுதந்திரமான வளர்ப்பு முறையினை அனுமதிக்கும் பெற்றோர், பருவவயது வந்ததும் தாயக மனநிலையில் அதைக் கட்டுப்படுத்த முயலும் போது ஏற்படும் கலாசார அதிர்ச்சி பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தாயக மனநிலை கொண்ட புலம்பெயர்ந்த பெற்றோரால் சிறுவர்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல் களை "ஒட்டுமரங்கள்" எனும் கதையில் கூறுகிறார். ஆனால் யாழ்ப்பாணம் மட்டும் என வேலியடைத்து வாழ்வோரும் மனமாற்றம் பெறும் சந்தர்ப்பம் அழகான குறியீட்டினால் விளக்கப்படுகிறது.




"வழமையாக கறிவேப்பிலை மரத்தடி வாங்கில் இருக்கும் அம்மா இன்று புடலங்காய் பற்றிப்படர்ந்த யூக்கலிப்ரஸ் மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்"

தாயக வளர்ப்பில் இறுக்கமான கட்டுப்பாடு களுடன் வளர்க்கப்படும் ஆண் குழந்தைகள் "மம்மீஸ்போய்" (Mummy's boy) என்ற கேலிக்கு ஆளா வதையும், இப்பத்தே பெட்டையளின் வேவ் லென்த்துக் குள் (Wave-lenth) வராததையும், கெமிஸ்றி workout ஆகாததையும் நகைச்சுவை உணர்வு மிக "வேதி விளையாட்டு" கூறுகிறது.

இவ்வாறான கலாசார பண்பாட்டு சிக்கல்கள் புலம்பெயரும் பிற நாட்டினருக்கும் உண்டெனபதை "காதல் ஒருவன்" கதை கூறுகிறது. இறுக்கமான இஸ்லாமிய கலாசாரத்தினைக் கடைப்பிடிக்கும் பிரபுத்து வக் குடும்பத்தைச் சேர்ந்த அமீர், சுதந்திரமான மன நிலையினை வேண்டும் அவனது மனைவி றொஸ் நாக் என்ற இரு பாத்திரப் படைப்புகள் மூலமாக கூறியிருக் கிறார். ஆணாதிக்கம் சார்ந்த படைப்பாகவும் இதனைக் கொள்ளலாம்.

ஆண் என்பவன் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதனை எதிர்த்து, ஆடு வெட்டும் கத்தி யால் ஒரே போடாக கணவனையே வெட்டிச் சாய்க் கிறாள் ஒரு "அன்னை". இது பெண்மோகம் கொண்ட கணவனால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க பெண்ணின் துர்காதாண்டவம். நைல்நதி தீரத்தின் வீரம் என்றும் சொல்லலாம்.

ஒரு நாட்டின் ஒரின மக்களே ஒருவரை யொருவர் மாற்றானாக மதிக்கும் மனப்பான்மைக்கு முதலாளித்துவமும், பொருளாதார பலத்தை அடிப் படையாகக் கொண்ட அதிகார மமதையும் , ஆண்டான் அடிமைப் போக்கும், நிற வேறுபாடுகளும் இன்றும் கூட காரணமாகின்றன.

இந்த அடிப்படையில் இலங்கையின் மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினர் மீண்டும் தாய்நாடான இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட போது, அங்கு எதிர்கொண்ட புறக்கணிப்பு, வன்முறை, வெறுப்பு என்பவற்றை மனம் கலங்க கூறுவது "யாவரும் கேளிர்".

வெள்ளையினத்திற்கு அடிமைப்பட்டிருந்த காலத்தை மனதளவில் இன்றும் தாங்கி நிற்கும் முதலாளித்துவ மனப்பான்மை கொண்ட வங்காளி மனேஜரின் மற்றுமோர் முகமாக, பொருளாதாரத்தில் நலிந்த தனது சிப்பந்தியின் மேல் காட்டும் அதிகாரத் தைக் கூறுவது "அந்நியமாதல்".

சோஷலிச நாடான சீனாவில் ஓரளவு வறிய சீனர்கள் வாழும் நன்னிங் நகரில், லஞ்சம் கூட சமத்துவமாகவே பகிரப்படுகிறது என்னும் உயரிய கோட்பாட்டை எள்ளலுடன் கூறுகிறார், இது "கள்ளக் கணக்கு;".

சிக்கலான விஞ்ஞான விளக்கங்களை கூட சிரிக்க வைக்கும் நகைச்சுவை உணர்வுடன் கூறும் கதை "எதிலீன் என்னும் ஹோமோன் வாயு". இப்புனைவில் தாயகத்தில் நிகழ்ந்த சரவணை அம்மானின் தற் கொலைக்கு காரணமான புதிர், இரு தசாப்தங்களின் பின் புலம்பெயர்ந்த தேசமொன்றில் விடுவிக்கப்படுவது சுவை.

ஆசியின் படைப்புகள் உலகமயமான அறிவாலும், தகவல்களாலும் அங்கதச்சுவையாலும் மனம் கவர்பவை. வெறும் ஆவணப்படுத்தல்களாக மட்டுமே ஒரு படைப்பு அமைந்திருந்தால் இந்த அறிவு பலரை சென்றடையாது. ஆனால் ஆசியின் எழுத்துக்களோ இலக்கியமயமான ஆவணப்படுத்தல் கள். எப்போதும் மூலக்கதையுடன் இணந்தே சுவாரசியமாகப் பயணிக்கும்.

ஆழமான கதைக்கருவுடன் இணைந்து பயணிக்கும் போதே அவற்றினூடே இழையோடும் மண்வாசனை மிகுந்த வட்டாரச் சொற்கள் வாசகரை கதையுடன் இறுகப் பிணைத்து வைக்கும் தன்மை உடையவை.

இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால் கதைசொல்லியாகவோ அல்லது பிரதான பாத்திரமா கவோ கதையின் பிரதான சந்திகளிலும், சந்துபொந்து களிலும் கதாசிரியர்தான் நின்று கொண்டிருப்பார். கொடுப்புக்குள்ளை கள்ளச்சிரிப்புடன் தனக்கே உரிய நக்கல், நையாண்டி, சிலேடை ஏன் சிலவேளைகளில் கதையின் தேவையைப் பொறுத்து, ஏடாகூடமான "ஏ" சேர்டிபிகேட் சொற்கள், பழைய காலத்து கிக்கான பயஸ்கோப் காட்சிகள் எல்லாம் சேர்த்துக் கொள்வார். மற்றப்படி மிகவும் கண்ணியமான எழுத்துக்களின் சொந்தக்காரர்.

காத்திருக்கும் நேரங்களையும் வீணாக்காமல் அங்கும் கதைமாந்தரைத் தேடிக் கதையாக்கி விடுவார்.

தான் பெற்ற ஞானத்தின் பயனை யதார்த்த நடையில் வாசகனிடம் கொண்டு சேர்ப்பதே அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ வெளியீட்டுப்பகுதி
நூலகம்
யாழ்ப்பாணம்

பணி. இதில் பெருவெற்றியும் பெற்றிருக்கிறார்.

"அறிவியலாளரின் எழுத்து என்பதனால் ஆசி கந்தராசா எழுத்து தொடர்ச்சியாக தகவல்களை அளித்துக்கொண்டே செல்லும் தன்மை கொண்டிருக் கிறது...." என எழுத்தாளர் ஜெயமோகன் "பயணியின் கட்டுரை" என்ற முன்னுரையில் குறிப்பிட்டு இருப்பார்.

இவ்வாறான தகவல்கள் சில வேளைகளில் அவரது புனைவுகளில் அக உணர்வுகள் குறைவான கட்டுரைத் தன்மையினை முனைப்பாக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆனால் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், கதைகூறும் பாங்கினூடாக படைப்பின் இறுதியில் அந்த நுண் உணர்வுகளை மெல்லதிர்வுகளை வாசகன் தானாகவே சென்றடைய முடிகிறது. வரிகளால் வாசிக்கப்படும் உணர்வுகளுக்கு இடையில், வரிகளால் வெளிப்படுத்தப்படாத உணர்வுகளை வாசிப்பது என்றாக, சொல்லாத சொற்களுக்கும் ஓர் அழகு உண்டு.

இவரின் சிறுகதைகளில் அன்னை, பத்தோடு பதினொன்று, சூக்குமம், புகலிடம், யாவரும் கேளிர், விலங்கு எனப் பல சிறுகதைகள் இத்தகைய ஆழமான உணர் மொழியழகைக் கொண்டன.

இத்தொகுப்பில் எல்லாமே தரமான கதைகள்தான் எனினும் மூன்று கதைகள் மிகவும் கவர்பவை.

இரண்டு வேறுபட்ட நிகழ்வுகளை ஒன்றாக்கி ஆசிரியர் போடும் இறுக்கமான , உருக்கமான முடிச்சுக் காக "மிருகம்", "சூக்குமம்" ஆகிய இரு கதைகள் .

மனது ஒப்புக்கொள்ள மறுக்கும் மாறுபட்ட ஒரு கலாசார விழுமியத்தை, நியாயமாக உணரச் செய்யும் ஆசிரியரின் அணுகுமுறைக்காக "வெள்ளிக்கிழமை விரதம்" என்னும் கதை.

"மிருகம்" என்ற புதிய பெயரில் இத்தொகுப்பில் உள்ள கதைக்கு மிகப் பொருத்தமான பெயர் "இன மானம்" என்பதான ஆசிரியரின் முன்னைய தலைப்பே.

தன்நாட்டினதும் தன் இனத்தினதும் நன்மை கருதாது, பிறிதோர் நாட்டின் இலாபத்திற்காக சுயநல நோக்கில் செயல்படுகிறார் ஒரு ஆறறிவு அறிவுஜீவி. அந்த எஜமானனுக்கு, ஐந்தறிவு எளிய ஜீவன் ஒன்று புகட்டும் பாடம், இப்படைப்பின் பெறுமதியான பக்கம்.

பிறிதோர் தேசத்தில் தன் இனத்தான் ஒரு வனின் இறைச்சியை உண்டாரா என முகர்ந்துணர்ந்து சந்தேகம் கொண்ட வளர்ப்பு நாய், தன் எஜமானை விட்டு விலகிச் செல்கிறது.

"இனமானம் என்பது தன் இனத்தை ஒரு போதும் விட்டுக் கொடுக்காதது" என்பதை அவருக்கு உணரத் தருகிறது. இன்றைய காலகட்டத்தில் தமிழினம் உணர்வு ரீதியாக பதில் சொல்ல வேண்டிய இமாலயக் கேள்வி ஒன்றினையும் இக்கதை எழுப்பிச் செல்கிறது.

"சூக்குமம்" என்ற கதையில் காளைகளுக்கும் கடுவன் நாய்களுக்கும் "நலமடித்தல்" மற்றும் "சூடுவைத்தல்" கைங்கரியங்களைச் செய்யும் சின்னக் கண்ணுவின் தொழில் லாவகங்களை விலாவாரியாக விபரித்து, அந்த வாயில்லா ஜீவன்களின் அவஸ்தையின் அவலக் குரலை நேரில் நின்று பார்ப்பது போன்ற உணர்வினை ஆசிரியர் ஏற்படுத்தும் போதே, ஏன் எதற்கு என்ற சஞ்சலத்துடன் சங்கோஜமும் சேர்ந்த கேள்வி வாசகருக்கு எழுகிறது.

இயக்கத்தில் இருக்கும் சின்னக்கண்ணுவின் மகன் சந்திரன் பற்றியும், இயக்க இரகசியங்கள் பற்றியும் அறிவதற்காக ஆமியால் பிடிக்கப்பட்டு, ஆமி காம்பில் அதேவகையான சித்திரவதைகளைக் கொடூரமாக அனுபவித்து சூடு வைத்த தீக்காயங்களுடன் விதைகள் வீங்கிய நிலையில் நடக்க முடியாமல் தவழ்ந்துவரும் சின்னக்கண்ணுவைக் காணும்போதுதான் , கதைஞர் கச்சிதமாய் போட்ட முடிச்சின் "சூக்குமம்" அவிழ்கிறது.

"மனுசனுக்கு மனுசன் "நலம"டிக்கிறதை இங்கை தான் காணுறன். இனத்தை அழிக்க இப்படி யெல்லாம் வழியிருக்கோ" என்ற சின்னக்கண்ணு வின் அனுங்கலில் தான் எத்தனை ஆயிரம் அர்த்தங்கள்.

இன்னொரு கதை "வெள்ளிக்கிழமை விரதம்". இதில் கற்பு என்பது மனம் சம்பத்தப்பட்டது மட்டுமே என்ற உயரிய தத்துவத்தைக் கூறுகிறார் .

ஆபிரிக்காவில் திருமண நிகழ்வுகளில், மணமகன்தான் மணமகளுக்கு மணப்பெண் கூலி கொடுக்க வேண்டும். தாய்தந்தை அந்தப் பெண்ணை வளர்த்து விட்டதற்காக. தன் தந்தை கேட்கும் மணப்பெண் கூலியை தன் காதலனால் சம்பாதிக்கவே முடியாது என உணர்கிறாள் குளோரியா என்னும் பெண். அவனை மணம்முடிக்க வேண்டும், தன் காதல் வாழ வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக, தனது ஒய்வு நேரத்தில் பாலியல் தொழில் செய்து தன் காதலனுக்குப் பணம் சேர்த்துக் கொடுக்கிறாள்.

களங்கமில்லாத தன் அன்பு மனதை காதலனுக் காக வைத்திருக்கிறாள். நமது சமூக விழுமியங்கள் இதனை ஒப்புக் கொள்ளாதுதான். ஆனாலும் காதலின் உயர்வைச் சொல்லும் வித்தியாசமான நோக்கு. குளோரியாவுக்கு இதுதான் வெள்ளிக்கிழமை விரதம்.

இந்தக் கதையை வாசிக்கும் போது நெருடலாக ஒரு எண்ணம் கூடவே வருகிறது. எங்களுடைய நாட்டில் மாப்பிள்ளைகளுக்குத் தான் சீதனமும், டொனேஷனும் லட்சங்களில், கோடிகளில் கொட்டிக் கொடுக்க வேண்டும். பெற்றோரின் கடன் தீர்க்க இங்குள்ள இளைஞர்களும் நல்ல தொகைக்கு விலைபோகிறார்கள். ஆனால் ஆணைவிட எந்த வகையிலும் குறைவில்லாத பெண் தன் பெற்றோரின் கடன் சுமையை தீர்க்க என்ன செய்ய முடியும்..? என்ற கேள்விக்கு ஏடாகூடமாய் தான் பதில் வரும். அதனால் அதை சொல்லாமல் இருப்பதே நல்லது. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

முடிவாக,

தரமான இலக்கியம் அல்லது எழுத்து எது என்பதாகக் கேள்வி எழுந்தால், மானுடத்தை எவ்வகை யிலேனும் மாண்புறச் செய்யும் எழுத்தை நல்லிலக்கியம் என்று கூறலாம். எத்தனை புத்தகங்களை வாசித்தோம் என்பதை விட, அவை என்ன கற்றுத் தந்தன என்பதே முக்கியமானது.

இவ்விதத்தில் பிறந்தமண்ணும், வாழும் மண்ணும் பெருமை கொள்ளும் விதமாக சீர்மை கொண்ட இலக்கியப் பணிகளை ஆற்றியவர் ஆசி என்பது நிதர்சனமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ புலோலியூர் வேல். நந்தகுமார்




# புலம்பெயர் தமிழ்வேடதாரிகளின் போலிமுகத்திரைகளை உண்மையும் எளிமையுமாக காட்டும் கதைத்தொகை ஆசி. கந்தராஜாவின் "கீதையடி நீ எனக்கு" தொகுதியை முன்வைத்து...

இன்றைய புலம்பெயர் தமிழ்ப்படைப்பாளிகள் மத்தியில் சொல்லும் விடயம், சொல்லும்முறை, சொல்லும் மொழி என்பவற்றால் தற்புதுமைமிக்க ஒரு படைப்பாளியாக தொடர்ச்சியாக படைப்பிலக்கியத்தில் இயங்கும் ஒரு மூத்த தலைமுறைப் படைப்பாளியாக ஆசி. கந்தராஜா அவர்கள் சிறப்புப்பெறுகின்றார். கைதடி இவர் பிறப்பிடம். அவுஸ்திரேலியா இவர் வசிப்பிடம். தொழில்நிலை சார்ந்து இவர் ஒரு விவசாயப் பேராசிரியர். இவ்வகையில் புனைவு சாரா விடயங்களையும் புனைவுக்குள் கலந்து எழுதும் இவரது படைப்புலகம் தற்புதுமையானது. அதேவேளை யாழ்ப்பாணத்து வாழ்வியலையும் புலம்பெயர் வாழ்வியிலையும் கலந்து படைக்கும் இவரது படைப்புலகும் படைப்பு மொழியும் அழகியலோடு அறிவியலையும் வாழ்வியலையும் கலந்து தரும் சிறப்புக் கொண்டவை. இவ்வகையில் இவர் படைப்புலகிற்கு தந்த கறுத்தக் கொழும்பான், செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக்கத்தரிக்காய், பணச்சடங்கு, ஒரு அகதியின் பேர்ளின் வாசல் போன்ற அண்மைய படைப்புகள் சிறப்புக்குரியன.

இவ்வகையில் மித்ர பதிப்பக வெளியீடாக 2014 ஜனவரியில் வெளிவந்த கதைத்தொகையே "கீதையடி நீயெனக்கு". இத்தொகுப்பில் திரிவேணி சங்கமம், தூதர்கள், உயரப் பறக்கும் காகங்கள், பாவனை பேசலன்றி, அடிவானம், கீதையடி நீயெனக்கு ஆகிய தலைப்புக்களில் அமைந்த நீண்ட ஆறு கதைகள் அமைந்துள்ளன. இத்தொகுப்பை அவர் 92 வயதுவரை வாழ்ந்த தன் தாயாராகிய திருமதி முத்துப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் நினைவுகளுக்கு சமர்ப்பித்துள்ளார். இத்தொகுப்பில் உள்ள கதைகளை சிறுகதைகளாகக் கொள்ள முடியாது. சிறுகதையின் பண்பும் அளவும் கடந்து இவை படைக்கப்பட்டுள்ளன. இவற்றை குறுநாவல் தன்மை கொண்ட கதைகளாக கொள்ள முடியும். இத்தொகுப்புக்கு முன்னீடு எழுதியுள்ள எஸ்.பொ. அவர்கள் "கதைத்தொகை" என்ற சொல் கொண்டே அழைக்கின்றார். அதில் அவர் இத்தொகுப்புப்பற்றி மேலும் குறிப்பிடுகையில் புலம்பெயர் தமிழர் மத்தியில் "முகமூடிகள்" அணிந்து "கூத்துக் கட்டி" ஆடும் வேடதாரிகளுடைய வாழ்க்கையின் அவலக்கதிகளை இலக்கிய உத்திகள் கனதிகள், சோடனைகள் இல்லாமல் யதார்த்தமாக இத்தொகுப்பை தந்துள்ளார் என்று குறிப்பிடுவதுடன் இந்தக் கதைகளின் உண்மையான பலமும் உயிர்ப்பும் அதன் எளிமையும் அதன் மூலம் அவர் தமிழ்ச் சுவைஞர்களுடன் பகிர்ந்து கொள்ளும் சத்தியமுமே என்றும் குறிப்பிட்டுள்ளார். இதேபோல தமிழக எழுத்தாளுமையாகி மாலன் அவர்கள் உண்மையைக் கதைக்கும் கதைகள் என ஒரு முகவுரையை தந்துள்ளார். அதிலும் அவர் இக்கதைகளின் ஒப்பனையற்ற எளிமையான சித்திரிப்பையும் அதன் உண்மைத்தன்மையையும் விதந்துபாராட்டியுள்ளார்.

இனி இத்தொகுப்பிற்குள் நுழைந்தால் திரிவேணி சங்கமம் என்பது முதற் கதை. இது ஏறத்தாள 32 பக்கங்களில் அமைந்துள்ள நீண்ட கதை. இவரது மூன்று மாணவர்களைப்பற்றிய கதையாக இது அமைகிறது. ஒரு ஈரானியனாகிய அமீர் மற்றையவன் அவுஸ்திரேலியனான ரோனி மூன்றாவமன் இலங்கைத் தமிழனாகிய ராகுலன். இவர்கள் மூவரும் தாம் கடந்து படிக்க வந்த இடத்தில் பாதைதப்பி அவர்கள் சிறைக்குப் போய் விடுகிறார்கள். சிறையில் மூவரையும் சந்திக்கும் அவர்களின் ஆசிரியராக கதாசிரியரே அமையும் பாணியில் மூவரது புலம்பெயர் வாழ்வின் அவலங்களை அவர்களது வாழ்க்கைத்துணை, குடும்ப நிலைகளை அந்தந்த தேசத்தின் பின்னணியில் வைத்து மாறி மாறி பேசுவதாக அதனூடாக புலம்பெயர் தமிழராகிய எமக்குப் பல சேதிகளை நெஞ்சில் உறைக்கச் சொல்வதாக வேறுபட்ட கலாசார அரசியல் சூழல்களை எடுத்துக் காட்டுவதாக அமைந்து இக்கதை சிறப்புப் பெறுகிறது. வாசிக்க வாசிக்க பல புதிய புதிய திருப்பங்கள் ஊடாக கதை எங்களை நகர்த்திச் செல்கிறது. இதனால் அதிக பக்கங்கள் என்பது ஒரு சுமையாக எமக்குத் தெரியவில்லை. இக்கதையில் ராகுலனுக்காக சாட்சி சொல்ல அவனை பார்க்க வராத அவனது உறவுகள், பெற்றோர்கள் பற்றி ஆங்கில சிறையதிகாரி கூறும் கூற்றுக்கள் வழி தமிழராகிய எமது சுயநல முகமூடிகள் தோலுரித்துக் காட்டப்படுகின்றன. படகுகில் அசதியாய் வந்து படும் அவலங்களையும் இக்கதை பதிவு செய்துள்ளது. அவுஸ்திரேலியாவை களமாகக் கொண்டு இக்கதை படைக்கப்பட்டாலும் இக்கதை திரிவேணி சங்கமமாக வெவ்வேறுபட்ட மூன்று தேசங்களின் களங்களதும் வாழ்வியலும் சங்கமமாக அமைந்துள்ளமையும் சிறப்புக்குரியது.

அடுத்து இடம்பெறுவது தூதர்கள் என்ற கதை ஜேர்மனியில் கதாசிரியர் சந்தித்த நண்பனான டிஸ்மிகா பண்டா என்ற நண்பனை பற்றிய அவன் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதர்களின் செல்வாக்கினால் கிழக்கு ஜேர்மனிக்கு படிக்க வந்தான் என்பதையும் பண்டா சில்வா பரமசிவம் மூன்று நட்புநிலைப் பாத்திரங்கள் வழியாக இலங்கை அரசியல் விடயங்கள் தழுவியதாகவும் பரமசிவம் என்ற பாத்திரம் வழியாக யாழ்ப்பாண கிராமியம் பேச்சுத் தமிழை சிறப்பாக கையாண்டுள்ள தன்மையாலும் சிறப்புக்குரியது. இறுதியில் கதையை முடிக்கும் போது சில்வா பண்டா போன்ற புலம்பெயர்ந்த நாடுகளிலே "தூது"வர்களாக வலம் வருவோரினால் சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயம் உருவாக்கப்படுகிறதா என்ற கேள்வியோடு இக்கதையை முடித்துள்ளமை பல சிந்தனைக் கிளறல்களை எம்மில் ஏற்படுத்துகிறது.

உயரப் பறக்கும் காகங்கள் என்பது அடுத்த கதை. புலம்பெயர் சூழலில் ஆண் பெண் குடும்ப உறவுகளும் அதன் புனிதம், திருமணம் என்ற பந்தம் மீதான கேள்விகளும், ஒருவனுக்கு ஒருத்தியாக வாழும் வாழ்வுமுறை மீதான விவாகரத்து என்ற கொடு நோயும், இவற்றில் இருந்தெல்லாம் பாடம் கற்றால் இறுதியில் தமிழனாக ஒரு தமிழிச்சியுடன் வாழ்வவே உண்மை யானது உயர்வானது என்ற விடயத்தையும் சுகுமார், சுந்தர், வதனி போன்ற பாத்திரங்கள் வழியாக நகர்த்திப் பேசுவதாக ஒரு நண்பனின் கதையாக இக்கதை அமைந் துள்ளது. வாழ்வில் நாம் எடுக்கும் முடிவுகள் எம் வாழ்வின் போக்கை எப்படி மாற்றியமைக்கின்றன என்பதை திருமணம் என்ற குடும்ப பந்தத்தை மையப் படுத்தி இக்கதை பேசுகிறது. உயரப்பறக்கும் காகங்கள் என்ற கதையின் தலைப்புக்கூட எம்மை சிந்திக்க வைக்கிறது.

"பாவனை பேசலன்றி" என்ற அடுத்த கதை அவுஸ்திரேலியாவில் மரணித்த சின்னத்துரை வாத்தி யார் இறுதிச் சடங்குகளைப் பின்புலமாகக் கொண்டு அங்கு அவர் வாழ்ந்த நாட்களில் எதிர்கொண்ட துன்பங் களை ஒருமுதுமைப் பின்னணியில் எடுத்துரைக்கும் கதையாக அமைகிறது. அவர் உயிரோடு வாழ்ந்தபோது அவரை இயல்பாக வாழவிடாதவர்கள் அவர் இறந்த பிறகு தங்களது கௌரவத்துக்காக உடலுக்கு செய்யும் அலங்காரங்களையும் காட்டுவதன் மூலம் வாழ்வு தன் ஆத்மார்த்தத்தை இழந்து எப்படி சடங்கு சம்பிரதாயங் களுக்கு மட்டுமான போலியாக மாறிவிட்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றார். மிகவும் உணர்வு பூர்வமாக எழுதப்பட்டுள்ள இக்கதையை புலம்பெயர்ந்து வாழும் தமிழ் முதியவர்களைப்பற்றிய வாழ்க்கைப்பதிவு என்று குறிப்பிட்டால் அது மிகையல்ல. கிட்டத்தட்ட 44 பக்கங்களை கொண்ட நெடுங்கதைத்தொகையாக இக்கதை அமைந்துள்ளது. கதாசிரியர் இக்கதையை முடிக்கும்போது சிட்னியில் காலமான சின்னத்துரை வாத்தியாரின் நினைவுகள் மெல்லக் கனவாய் பழங்கதையாப் போவதை நான் விரும்பமில்லை அவர் கற்றுத்தந்த தமிழையும் இலக்கிய ஆர்வத்தையும் துணைப்பற்றி அவர் சமர்ப்பணமாகவே இக்கதையை எழுதினேன் என உண்மையையும் நன்றியையும் வெளிப் படுத்தியுள்ளமையும் சிறப்புக்குரியது. கதைகளில் இருந்து பல பேச்சுமொழிகள் எடுத்துக்காட்டுக்களை சொல்ல வேண்டும் என எண்ணினாலும் பக்க நீட்சி கருதி அவற்றை தவிர்த்து விடுகிறேன். உண்மையில் வாசகர்கள் இக்கதைகளைப் படிக்கும்போது அவ்வுணர்வைப் பெறுவர் என்பது திண்ணம்.

"அடிவானம்" என்பது அடுத்து இடம்பெறும் கதை. இது ஜேர்மனியை களமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள இக்கதை. விடுமுறை நாள் ஒன்றிலும் தன் பேரப்பிள்ளையை கூட்டிக்கொண்டு வெளியே பூங்காவுக்கு செல்லும் வீரசிங்கத்தையும் பூங்காவில் அவர் சந்திக்கும் போதைக்கு அடிமையான றொனால்ட் என்பவனுக்குமான நட்பு விடயங்களை றொனால்ட் என்பவனுக்குமான நட்பு விடயங்களை பேசுவதுடன் அவனுக்கும் மோனிக்காவுக்குமான உறவும் பிரிவும் பற்றியும் பேசுகிறது. கதையின் அடுத்த பகுதி சின்னராசா தவமணியின் திருமண வாழ்வையும் அவர்களின் மணமுறிவையும் பேசுகிறது. கதையின் நிறைவில் வரும் "புருஷ உறவை உதறித்தள்ளிற துணிவு எங்களுக்கு கிடையாது. மேல்நாட்டிலை வாழ்ந்தாப் போல ஊரிலை பழகின பழக்க வழக்கங்களை தூக்கி எறிஞ்சிடலாமெண்டு நினைக்கிறியளே" என்ற வரிகள் இத்தகைய போலி வாழ்வின் மீதான விமர்சனமாக அமைந்து சிறப்புப் பெறுகிறது. கடலும் வானமும் தொடும் அந்த அடிவானம் எவ்வளவு அர்த்தம் மிக்கது என்ற விடயத்தை கதையை படித்து முடித்த பின் வாசகராகிய நாமும் புரிந்து கொள்ள முடிகிறது.

இத்தொகுப்பின் தலைப்புக் கதையாகவும் நிறைவுக் கதையாகவும் அமைவது "கீதையடி நீயெனக்கு..." என்ற கதையாகும். இக்கதை "யாழ்ப் பாணம், தமிழ்நாடு, அவுஸ்திரேலியா என பல களங் களில் நகர்த்தப்படுகிறது. சந்திரன் குடும்பம், புவனா குடும்பம் இருவருக்குமான உறவு, போர்க்கால வாழ்வு, பூரணம், பாக்கியம், பொன்னையா என பழையகால தலைமுறைப் பாத்திரங்கள் இயக்கங்களுக்கிடை யிலான முரண்பாடுகள் கொலைகள் எனப் பல விடயங்கள் எடுத்தாளப்படுவதுடன் சந்திரன் தன்னை ஒரு பணத்திமிர் மிக்கவனாக காட்டி புவனாவின் முன்னேற்றங்களைத் தடுப்பதும் அதையும் தாண்டி புவனாவுக்கு அவளது நல்ல மனதுக்கு கிடைக்கும் உயர்வுகளும் புவனாவுக்கு முன் வாழ்ந்து காட்ட சந்திரன் தமிழ்நாட்டு பெண் ஒருத்தியை திருமணம் செய்ய முனைவதும் எனப் பல விடயங்கள் கூறப்பட்டு இறுதியில் சந்திரன் சந்திரானந்த சுவாமிகளாக மாறிவிட்ட நிலையை காட்டி கதையை நிறைவு செய்கிறார். ஒரு பெண் ஒரு ஆணின் வழியை தீர்மானிப்பவளாகவும் வழி காட்டியாகவும் விளங்கும் தன்மை கருதியும் "கீதையடி நீயெனக்கு" என்ற தலைப்பு அமைக்கப்பட்டிருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக ஆசி. கந்தராஜாவின் இக்கதைத்தொகையானது வழமையான கதை சொல் பாணியில் இருந்து வேறுபட்ட ஒரு கதை சொல் முயற்சியாக அமைந்து புலம்பெயர் இலக்கியத்தின் புதிய திசைகளுக்கு வழிகாட்டும் தன்மை கொண்டதாகவும் புலம்பெயர் சூழலில் தமிழ்ப்பண்பாடு சார் குடும்ப அமைப்புகளுக்குள் ஏற்பட்டுள்ள சிதைவுகளை வேறு நாட்டு வாழ்வியல் சூழல்களோடு ஒப்பிட்டும் புலம் பெயர்ந்து சென்றதாகச் சூழலோடு இணைந்தும் புனைவு மொழியும் அழகியலும் குறையாமலும் தந்திருப்பது புதுமையானதொரு வாசக அனுபவமாக அமைகிறது. இத்தகைய நம்பிக்கையாளர்கள் பலர் இன்றும் புலம் பெயர் தேசங்களில் இருப்பதே எம் இலக்கியத்தின் பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org